27 இயேசுவானவர் அவ்விடம் விட்டுப்
போகையிற் குருடரிருவர் அவர்பின்னே
சென்று, ஆ! தாவீதின் குமாரனே, எங்க

Digitized by Google

ளுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள். –
அவர் வீட்டிலே வந்தபின்பு அந்தக் குரு 28
டர் அவரிடத்துக்கு வந்தார்கள். இயே
சுவானவர் அவர்களை நோக்கி, இப்படி
ச்செய்ய எனக்கு வல்லமையுண்டென்று
விசுவாசிக்கிறீர்களோவென்றார். ஆண்ட
வரே, விசுவாசிக்கிறோமென்றார்கள். —
அப்பொழுது அவர் அவர்களுடைய க 29
ண்களைத்தொட்டு, உங்கள் விசுவாசத்தின்
படி உங்களுக்கு ஆகக்கடவதென்றார். –
உடனே அவர்களுடைய கண்கள் திறக்க 30
ப்பட்டன. பின்பு இயேசுவானவர் அவர்
களை நோக்கி, நீங்கள் இதை ஒருவனுக்கும்
அறிவிக்கவேண்டாமென்று கெட்டியா
ய்க் கட்டளையிட்டார். —அவர்களோ பு 31
றப்பட்டு, அத்தேசத்திலெங்கும் அவரு
டைய கீர்த்தியைப் பிரசித்தம்பண்ணினா
ர்கள்.

அவர்கள் புறப்பட்டுப்போகையில், ப 32
சாசு பிடித்திருந்த ஊமையனை அவரிடத்
துக்குக் கொண்டுவந்தார்கள். —பசாசு 33
துரத்தப்பட்டபின்பு ஊமையன் பேசி
னான். சனங்கள் ஆச்சரியப்பட்டு, இப்ப

Digitized by Google

டியாக இஸ்ரவேலருக்குள்ளே ஒருக்கா
லுங் காணப்பட்டதில்லையென்றார்கள்.
34 —பரிசெயர் இவன் பசாசுக்களுடைய
தலைவனாலே பசாசுக்களைத் துரத்துகிறா
35 னென்றார்கள். —பின்பு இயேசுவானவர்
சகல பட்டினங்களையுங் கிராமங்களையுஞ்
சுற்றிநடந்து செப ஆலயங்களிலே போ
தகம்பண்ணி, இராச்சியத்தைக் குறித்து
ச்சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச் சன
ங்களுக்குண்டான எந்த வியாதியையும் எ
ந்த நோயையும் நீக்கி அவர்களைக் குணமா
36 க்கினார். —அப்பொழுது அவர் மிகுந்த
சனங்களைப் பார்த்து மேய்ப்பனில்லாத
ஆடுகளைப்போல அவர்கள் சோர்ந்துபோ
ய்ச் சிதறப் பட்டவர்களாயிருந்தபடியா
ல் அவர்களைக் குறித்து மிகவும் மனது
ருகித் தமது சீஷர்களை நோக்கி, அறுப்
பு மிகுதியாகவேயிருக்கின்றது வேலையா
ட்கள் சிலர் மாத்திரமிருக்கிறார்கள். —
37 ஆதலால் அறுப்புக்கு எசமான் தமது
அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப
வேண்டுமென்று அவரை வேண்டிக்கொ
ள்ளுங்கள் என்றார்.

Digitized by Google

௰. அதிகாரம்.

[(௧) கிறிஸ்து அப்போஸ்தலர்கள் பன்னிருவருக்குங் கட்டளைகளைக்கொடுத்தது, (௰௬) துன்பத்தைச்சகிக்கும்படி ஆறுதலைச் சொல்லி,(௪௰) அவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தையறிவித்தது.

அப்பொழுது அவர் தம்முடைய பன் 1
னிரண்டு சீஷர்களையுந் தம்மிடத்தில் அ
ழைத்து அசுத்தமான ஆவிகளைத் துரத்
தவுஞ் சகலவிதமான வியாதிகளையும் நோ
ய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதி
காரங் கொடுத்தார்.—அந்தப் பன்னிர 2
ண்டு அப்போஸ்தலர்களின் நாமங்களெ
ன்னவெனில், முந்தினவனாகிய பேதுரு
என்னப்பட்ட சீமோன், அவனுடைய
சகோதரனாகிய அந்திரேயா, சேபேதே
யுவின் குமாரன் யாக்கோபு, அவனுடை
ய சகோதரன் யோவான்,—பிலிப்பு, ப 3
ருத்தொலோமேயு, தோமா, ஆயக்கார
னான மத்தேயு, அல்பேயின் குமாரன்
யாக்கோபு, ததேயு என்னும் மறுநாம
முள்ள இலெபேயும்,—கானானாகிய சீ 4

Digitized by Google

மோன், இயேசுவைக்காட்டிக் கொடுத்த
வனான யூதா இஸ்காரியோத்து என்னப்
பட்டவர்களே.
5 இயேசுவானவர் அந்தப்பன்னிருவரை
யும் அனுப்ப அவர்களுக்குக் கட்டளையி
ட்டுச் சொன்னதாவது, நீங்கள் புறத்தே
6 சத்தாரிடத்துக்குப் போகாமலும்,—சா
மாரியருடைய பட்டினங்களிற் பிரவேசி
யாமலுங் காணாமற்போன ஆடுகளாயிரு
க்கிற இஸ்ரவேல் குடும்பத்தாரிடத்துக்
7 குப் புறப்பட்டுப் போய்,—பரலோக
இராச்சியஞ் சமீபமாய் வந்ததென்று கூ
8 றி,—வியாதிப்பட்டவர்களைக் குணமாக்
கிக் குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணி
மரித்தோரை யெழுப்பிப் பசாசுகளைத்
துரத்துங்கள். நீங்கள் இலவிசமாய்ப் பெ
ற்றுக்கொண்டீர்கள் இலவிசமாய்க் கொ
9 டுங்கள்.— நீங்கள் கச்சைகளிற் பொன்னை
யாவது வெள்ளியையாவது செம்பையா
வது வழிக்காகப் பையையாவது இரண்
டங்கிகளையாவது பாதரட்சைகளையா
வது தடியையாவது உங்களுக்காகத் தே
10 டி வைக்கவேண்டாம்.—வேலைசெய்கிற

Digitized by Google

வன் தனக்கு வேண்டிய ஆகாரத்தைப்
பெறும்படிக்குப் பாத்திரவானாயிருக்கி
றானே.—அல்லாமலும் எந்தப்பட்டின 11
த்திலுங் கிராமத்திலும் நீங்கள் பிரவேசி
க்கும்பொழுது, அதிலேயிருக்கிற பாத்
திரவான் இன்னானென்று விசாரித்துக்
கொண்டு நீங்கள் புறப்படுமளவும் அவ
னிடத்திலிருங்கள்.—அந்த வீட்டுக்குட்பி 12
ரவேசிக்கும்பொழுது நீங்கள் அதிலிரு
க்கிறவர்களை வாழ்த்திக்கொள்ளுங்கள்.—
அந்தக் குடும்பத்தார் பாத்திரவான்களா 13
யிருந்தால் நீங்கள் அவர்களுக்குச் சொன்
ன சமாதானம் அவர்களைச் சேரக் கடவ
து. பாத்திரவான்களல்லாதிருந்தால் அந்
த வாழ்த்துதல் உங்களிடமாய்த் திரும்பக்
கடவது.—எங்கேயாகிலும் அவர்கள் உங் 14
களை அங்கிகரித்துக்கொள்ளாமலும் உங்
கள் வசனங்களுக்குச் செவிகொடாமலு
ம் இருந்தால் நீங்கள் அந்தவீட்டையாவ
து பட்டினத்தையாவது விட்டுப் புறப்
படுகையில் உங்கள் கால்களிலுள்ள தூளை
உதறிப்போடுங்கள்.—நியாயத்தீர்ப்புநா 15
ளிலே சோதோங் கொமோறாதேசத்தை

Digitized by Google

ப்பார்க்கிலும் அந்தப்பட்டினத்துக்கு
அதிக தண்டனை கிடைக்குமென்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
16 —பாருங்கள் ஆடுகளை ஓனாய்களுக்குள்
ளே (அனுப்புகிறதுபோல) உங்களை அ
னுப்புகிறேன் ஆகையால் நீங்கள் பாம்பு
களைப்போல விவேகமுள்ளவர்களாயும்
புறாக்களைப்போலக் கபடமில்லாதவர்க
17 ளாயுமிருக்கவேண்டும்.—அப்படியே நீ
ங்கள் மனிதர்களிடத்திற் சாவதானமாயி
ருங்கள். என்னத்தினாலெனில் உங்களைப்
பெரிய சங்கத்தாருக்கு ஒப்புக்கொடுத்
துத் தங்கள் ஆலயங்களிலே உங்களை வா
18 ரினால் அடிப்பார்கள்.— என்னிமித்தம்
நீங்கள் துரைகளிடத்துக்கும் இராசாக்க
ளிடத்துக்குங் கொண்டுபோகப்பட்டு அ
வர்களுக்கும் புறத்தேசத்தாருக்கும் மு
19 ன்பாகச் சாட்சிகளாயிருப்பீர்கள்.—அ
வர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்பொ
ழுது நீங்கள் பேசவேண்டுவது அந்நே
ரத்திலே உங்களுக்கு அருளிச் செய்யப்
படும். ஆகையால் எப்படி எதைப்பேச
வோமென்று கவலைப்படாதிருங்கள்.—

Digitized by Google

பேசுகிறவர்கள் நீங்களல்ல உங்கள் பிதா 20
வின் ஆவி உங்களிலிருந்து பேசுகிறவர்.
—அல்லாமலுஞ் சகோதரன் தன் சகோ 21
தரனையுந் தகப்பன் தன்பிள்ளையையும் ம
ரணத்துக்கொப்புக்கொடுப்பார்கள் தா
ய்தகப்பன்மாரைப் பிள்ளைகள்விரோதித்
து அவர்கள் மரணமடையும்படிக்குச்
செய்விப்பார்கள்.—என்னுடைய நாமத் 22
தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகை
க்கப்படுவீர்கள். ஆகிலும் முடிவுபரியந்
தம் நிலைத்திருக்கிறவனே இரட்சிக்கப்ப
டுவான்-அல்லாமலும் மனிதனுடையகு 23
மாரன் வரும்வரைக்கும் நீங்கள் இஸ்ர
வேலருடைய பட்டினங்களையெல்லாங்க
டந்துபோய் வரமாட்டீர்களென்று மெ
ய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்.
ஆதலால் ஒரு பட்டினத்திலே உங்களைத்
துன்பப்படுத்தினால் மறுபட்டினத்துக்
கு ஓடிப்போங்கள்.-சீஷனானவன் போத 24
கனிலும் அடிமைப்பட்டவன் தன் எசமா
னிலும் மேற்பட்டவர்களல்ல,-சீஷன் த 25
ன் போதகனைப்போலவும் அடிமைப்பட்
டவன் தன் எசமானைப்போலவுமிருக்கிற

து அவர்களுக்குப் போதுமே. வீட்டெ
சமானைப் பெயேல்செபூலென்று அவர்
கள் சொல்வார்களானால் அவருடைய வீ
ட்டாரை அதிகமாய் அப்படிச்சொல்வா
ர்களல்லவா. ஆதலால் அவர்களுக்குப் ப
26 யப்படாதிருப்பீர்களாக.— வெளியாக்க
ப்படாத மறைபொருளில்லை, அறியப்ப
27 டாத இரகசியமுமில்லை.-நான் உங்களுக்
கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள்
வெளிச்சத்திற் சொல்லுங்கள், நீங்கள் இ
ரகசியமாய்க் கேட்கிறதை மேடைகளில்
28 இருந்து பிரசித்தஞ்செய்யுங்கள்,—அல்
லாமலும் ஆத்துமாவைக் கொலைசெய்ய
த்திராணியில்லாமற் சரீரத்தைமாத்திரங்
கொலைசெய்கிறவர்களுக்கு நீங்கள் பயப்
படவேண்டாம், ஆத்துமாவையுஞ் சரீரத்
தையும் நரகத்திலே கெடுக்க வல்லவருக்
29 குப் பயப்படுங்கள்.-ஒரு காசுக்கு இரண்
டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள
ல்லவோ, ஆனாலும் உங்கள் பிதாவின் உத்த
ரவில்லாமல் அவைகளிலொன்றுந் தரையி
30 லே விழாது.-அல்லாமலும் உங்களதலையி
ன் மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்

றது.—ஆதலாற் பயப்படாதிருங்கள், அ 31
நேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்
க்கிலும் நீங்கள் மேன்மையாய் இருக்கிறீ
ர்கள்.-அப்படியிருக்க, மனிதர்களுக்கு 32
முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவ
ன் எவனோ அவனை நானும் பரமண்டலங்
களிலிருக்கிற என் பிதா முன்பாக அறிக்
கைபண்ணுவேன். — மனிதர் முன்பாக 33
என்னை மறுதலிக்கிறவனெவனோ அவனை
நானும் பரமண்டலங்களிலிருக்கிற என்
பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.—
பூமியின் மேற் சமாதானத்தை வரப்ப 34
ண்ண வந்தேனென்றெண்ணிக்கொள்ளா
திருங்கள். சமாதானத்தையல்ல சண்டை
யைவரப்பண்ண வந்தேன்.-எப்படியெ 35
னிற் குமாரன் தன் தகப்பனையும் மகள்
தன் தாயையும் மருமகள் தன் மாமியை
யும் விட்டுப் பிரிந்து போகப்பண்ணவந்
தேன்.-அப்படி ஒருமனிதனுடைய குடு 36
ம்பத்தாரே அவனுக்குச் சத்துருக்களாய்
இருப்பார்கள்.— என்னிலுந் தகப்பனை 37
யாவது தாயையாவது அதிகமாய்ச் சி
நேகிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல,

Digitized by Google

என்னிலும் மகனையாவது மகளையாவது
அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப்
38 பாத்திரனல்ல.- அல்லாமலுந் தன் சிலு
வையை எடுத்துக்கொண்டு என் பின்னே
செல்லாதவன் எனக்குப் பாத்திரனல்ல.
39 -தன் சீவனைக் காக்கிறவன் அதை இழந்
துபோவான், என் நிமித்தந் தன் சீவனை
இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.
40 —உங்களைச் சேர்த்துக்கொள்ளுகிறவன்
என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறான், என்
னைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் என்னை
அனுப்பினவரைச் சேர்த்துக்கொள்ளுகி
41 றான்.—தீர்க்கதரிசியென்கிற நாமத்தினி
மித்தம் ஒரு தீர்க்கதரிசியை ஏற்றுக்கொ
ள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்குரிய பலனைய
டைவான். நீதிமானென்கிற நாமத்தினி
மித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவ
ன் நீதிமானுக்குரிய பலனை அடைவான்.
42 —இந்தச் சிறியவர்களிலொருவன் சீஷனு
யிருக்கிறதினிமித்தம் அவனுக்கு ஒரு க
லையந் தண்ணீர் மாத்திரந் தாகத்துக்கு
க் கொடுக்கிறவன் தன் பலனை இழந்து

Digitized by Google

போகானென்று மெய்யாய் உங்களுக்கு
ச் சொல்லுகிறேனென்றார்.

௰௧. அதிகாரம்.

[(௨.) யோவான் தன் சீஷரை இயேசுவினிடத்
தில் அனுப்பினது. (௭.) இயேசுவானவர் யோ
வானைக் குறித்துச் சாட்சிகொடுத்தது. (௰௮.)
இயேசுவையும் யோவானையுங் குறித்துச் ச
னங்கள் நினைத்தது. (௨௰) மனந்திரும்பாத சி
ல பட்டினத்தாரை இயேசுவானவர் கடிந்து
கொண்டது (௨௫.) சிறியவர்களுக்குச் சுவி
சேஷத்தை வெளிப்படுத்தினதற்காகப் பிதா
வைப் புகழ்ந்தது. (௨௮) தங்கள் பாவங்க
ளையுணருகிறவர்களைத் தம்மிடத்திலே வரவ
ழைத்தது.

இயேசுவானவர் தமது பன்னிரண்டு 1
சீஷருக்குங் கட்டளைகொடுத்து முடித்த
பின்பு அவர்களுடைய பட்டணங்களில் உ
பதேசம்பண்ணிப் பிரசங்கிக்கும்படிக்கு
அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்.

அத்தருணத்தில் காவலில் இருந்த யோ ௨
வான் கிறிஸ்துவின் கிரியைகளைக் கேள்வி
ப்பட்டுத் தன் சீஷரில் இரண்டுபேரை
அழைத்து,-நீங்கள் போய் அவரை நோ 3
க்கி, வருகிறவர் நீர்தாமோ அல்லது வே

Digitized by Google

ரொருவர்வர நாங்கள் காத்திருக்கவேண்
டுமோவென்று கேளுங்களென்றுசொன்
4 னான்.—அவர்கள் அப்படியே வந்து கே
ட்டபோது இயேசுவானவர், அவர்களுக்
கு மாறுத்தரமாகச் சொன்னதாவது, நீ
ங்கள் கேட்டுங் கண்டுமிருக்கிறவைகளை
யோவானுக்குப் போய் அறிவியுங்கள்.-
5 என்னவெனில் என்றாலே குருடர் பார்
வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கி
றார்கள், குஷ்டரோகிகள் சுத்தமடைகிறா
ர்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்
தோர் எழுந்திருக்கிறார்கள், எளியவர்களு
க்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்ற
6 து.—அல்லாமலும் என்னைக் குறித்து இ
லச்சை அடையாதிருக்கிறவன் பாக்கிய
வானென்று சொல்லி அவர்களை அனுப்
7 பினார்.— அவர்கள் போன பின்பு இயே
சுவானவர் சனங்களை நோக்கி, யோவானை
க் குறித்துச் சொன்னதாவது நீங்கள் வ
னாந்தரத்திலே எதைப் பார்க்கப் புறப்ப
ட்டீர்கள். காற்றினால் அடித்தசைக்கப்ப
டுகிற நாணலையோ. எதைப் பார்க்கப் புற
8 ப்பட்டீர்கள்.— அல்லது மெல்லிய வஸ்

Digitized by Google

திரங்களைத் தரித்திருக்கிற மனிதனையோ!
மெல்லிய வஸ்திரங்களை உடுத்திருக்கிறவ
ர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்
கள்.- அல்லது எதைப் பார்க்கப் புறப்ப 9
ட்டீர்கள். தீர்க்கதரிசியையோ, ஆம், தீர்
க்கதரிசியிலும் அதிக மேன்மையுள்ளவ
னையே என்று உங்களுக்குச் சொல்லுகி
றேன்.—அதெப்படியெனில், இதோ நா 10
ன் என்னுடைய தூதனை உமக்கு முன்
பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு மு
ன்னே உம்முடைய மார்க்கத்தைச் செம்
மைபண்ணுவானென்று ஒருவனைக் குறி
த்து எழுதியிருக்கின்றதே. அவன் இவன்
தான்.

அல்லாமலும் ஸ்திரிகளிடத்திற் பிறந்த 11
வர்களில் யோவானிஸ்நானனிலும் பெரி
யவனொருவனும் எழும்பவில்லையென்று
மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறே
ன். ஆகிலும் பரலோக இராச்சியத்தி
லே சிறியவனானவன் அவனிலும் பெரிய
வனாயிருக்கிறான்.— அல்லாமலும் யோ 12
வானிஸ்நானன் தோன்றின காலம் முதற்
கொண்டு இதுவரைக்கும் பரலோக இ

Digitized by Google

ராச்சியம் பலபந்தப்படுகின்றது, பலபந்
தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்
13 கொள்ளுகிறார்கள்.— நியாயப்பிரமாண
மும் தீர்க்கதரிசிகள் யாவரும் அதையோ
வான் வரைக்கும் தீர்க்கதரிசனமாய் அறி
14 வித்தார்கள்.- நீங்கள் ஒத்துக்கொள்ள ம
னதிருந்தால் வருபவனாகிய எலியாவிவன்
15 தான்.-கேட்கிறதற்குக்காதுள்ளவன் கே
16 ட்கக்கடவன்.-இந்தச் சந்ததியையாருக்கு
நிகர்சொல்வேன். சந்தைதனில் உளுக்கா
17 ர்ந்து தங்கள் தோழரை நோக்கி,— உங்
களுக்காக ஊதினோம், நீங்கள் கூத்தாட
வேயில்லை. உங்களுக்காகப் புலம்பினோம்
நீங்கள் மார்பில் அடிக்கவேயில்லையென்
று சொல்லிக் கூப்பிடுகிற பிள்ளைகளுக்
18 கு ஒப்பாயிருக்கிறார்கள்.— எப்படியெ
ன்றால், யோவான் வந்து போசனபானம்
பண்ணாமல் இருந்தான். பசாசைக் கொ
19 ண்டிருக்கிறானென்கிறார்கள்.— மனிதனு
டைய குமாரன் வந்து போசனபானம்ப
ண்ணுகிறான். இதோ பெருந்தீனிக்காரன்
என்றுங் குடிக்கிறவனென்றும் ஆயக்கா
ரருக்கும் பாவிகளுக்குஞ் சிநேகிதனென்

றுஞ் சொல்லுகிறார்கள். ஆனாலும் ஞா
னமானது தன் பிள்ளைகளாலே நீதியாய்
எண்ணப்படுமென்றார்.
அப்பொழுது அவர் தமது பலத்த 20
செய்கைகளில் அநேகங்களைக் கண்ட ப
ட்டினத்தார் மனந்திரும்பாமலிருந்தப
டியினாலே அவர்களைக் கடிந்துகொள்ள
த் தொடங்கிச் சொன்னதாவது,-ஐயோ! 21
கோராசின்பட்டினத்தாரே, உங்களுக்கு
வேதனைவரும், ஐயோ! பெத்சாயிதாப்
பட்டினத்தாரே உங்களுக்கு வேதனைவரு
ம், உங்களுக்குள்ளே நடந்த பலத்தசெ
ய்கைகள் தீரு சீதோன் பட்டினத்தாருக்
குள்ளே நடந்திருந்தால் அவர்கள் சீக்கிர
மாய் இரட்டையுடுத்திச் சாம்பலில் உளு
க்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.--
ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அவர் 22
களைப்பார்க்கிலும் நீங்களே அதிக தண்
டிப்பை அடைவீர்களென்று உங்களுக்கு
ச் சொல்லுகிறேன்.—வானபரியந்தமுய 23
ர்ந்த கப்பரநாகூம்பட்டினத்தாரே ஐ
யோ! பாதாளபரியந்தந்தாழ்த் தப்படுவீ
ர்கள். உங்களுக்குள்ளே நடந்த பலத்த

Digitized by Google

செய்கைகள் சோதோம்பட்டினத்தாரு
க்குள்ளே நடந்திருந்தால் அவர்களுடை
ய பட்டினம் இந்நாள்வரைக்குமிருக்கு
24 மே!—ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே
அவர்களுக்கு வருந் தண்டிப்பு எளிதாயி
ருக்கும். நீங்களே அதிக தண்டிப்பை
அடைவீர்களென்று உங்களுக்குச் சொல்
லுகிறேனென்றார்.
25 அக்காலத்திலே இயேசுவானவர் சொ
ன்னதாவது, பிதாவே வானத்தையும் பூ
மியையும் ஆளுகிறவரே நீர் இவைகளை
(லோக) ஞானிகளுக்குங் கல்விமான்களு
க்கும் மறைத்துக் குழந்தைகளுக்கு வெ
ளிப்படுத்தினபடியினாலே உம்மைத் து
26 திக்கிறேன்.— ஆ! பிதாவே, இப்படியே
27 உமக்குப் பிரியமாயிருந்ததென்றார்.—அ
ல்லாமலுஞ் சகலமும் என் பிதாவினாலே
எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்
றது. பிதாத் தவிர மற்றொருவனுங் குமா
ரனை அறியான், குமாரன் தவிர மற்றொரு
வனும் பிதாவையறியான். மேலும் எவ
னுக்குக் குமாரன் அவரை வெளிப்படுத்
தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் பிதா

Digitized by Google

வை அறிவான்.—வருத்தப்பட்டுப் பார 28
ஞ்சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்கள்
எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நா
ன் உங்களுக்கு ஆறுதல்செய்வேன்.—நா 29
ன் சாந்தமாயும் மனத்தாழ்மையாயுமிரு
க்கிறபடியினாலும் நான் வைக்கிற நுகத்
தடி மெதுவாயும் நான் ஏற்றுகிற சுமை
இலேசாயுமிருக்கிறபடியினாலும்,—நீங்க 30
ள் என்னுடைய நுகத்தடியை ஏற்றுக்
கொண்டு என்னிடத்திற் கற்றுக்கொள்ளு
ங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா
க்களுக்கு ஆறுதல் கிடைக்குமென்றார்.

யஉ. அதிகாரம்.

[(க.) ஓய்வுநாளைக் குறித்துப் பரிசேயருக்குப் புத்திசொன்னது. (யக.) அற்புதஞ்செய்தது. (உஉ.) பசாசுபிடித்த குருடும் ஊமையுமுள்ளவனைக் குணமாக்கினது. (ஙக.) தேவனுக்கு விரோதமான தூஷணம் மன்னிக்கப்படாதென்பது. (ஙசா.) வீணானவார்த்தைகளுக்காகக்கணக்குக்கொடுக்கவேண்டுவது (ஙஅ) அடையாளத்தைத்தேடினவர்களைக்கடிந்துகொண்டது (சசா.) அவருடையதாய் சகோதரன் முதலானவர்களின்னாரென்றுகாண்பித்தது.

அக்காலத்தில் ஓய்வுநாளிலே இயேசுவா 1

னவர் பயிர்வழியே போனார். அப்பொ
ழுது அவருடைய சீஷர் பசியாயிருந்தப
டியினாலே கதிர்களைக் கொய்து சாப்பிட்
2 த்தொடங்கினார்கள்.—அதைக் கண்ட பரி
சேயர் அவரை நோக்கி இதோ ஓய்வுநாளி
ற் செய்யத்தகாததை உமது சீஷர்கள்
3 செய்கிறார்களென்றார்கள்.— அவர்களுக்
கு அவர் சொன்னதாவது தாவீதும் அ
வனோடிருந்தவர்களும் பசியாய் இருந்த
4 பொழுது,—அவன் தேவாலயத்திற் பிர
வேசித்து ஆசாரியரேயன்றித், தானுந் த
ன்னோடிருக்கிறவர்களுஞ் சாப்பிடத்தகா
த தேவசமுகத்தப்பங்களைச் சாப்பிட்டா
5 னென்று நீங்கள் வாசிக்கவில்லையா.-அல்
லது ஆசாரியானவர்கள் தேவாலயத்திலே
ஓய்வுநாட்களில் ஓய்ந்திராமல்வேலைசெய்
துங் குற்றமில்லாதிருக்கிறார்களென்று நீ
6 ங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா.—தே
வாலயத்திலும் பெரியவர் இங்கேயிருக்கி
றாரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
7 -மேலும் பலியிலும் இரக்கத்தை விரும்
புகிறேனென்கிற (வாக்கியத்தின் கருத்
தை) நீங்கள் அறிந்தீர்களானாற் குற்ற

Digitized by Google

ல்லாத இவர்களை நீங்கள் குற்றப்படுத்த
மாட்டீர்கள்.-- அல்லாமலும் மனிதனு 8
டைய குமாரனானவர் ஓய்வுநாளைக்குறித்
தும் கத்தராயிருக்கிறாரென்றார்.--பின்பு 9
அவர் அவ்விடம்விட்டுப்போய் அவர்க
ளுடைய செப ஆலயத்திற் பிரவேசித்தா
ர்.-அங்கே சூம்பினகையையுடைய மனி 10
தனொருவன் இருந்தான், அப்பொழுது
அவர்கள் அவர்மேற் குற்றஞ்சாற்றும்ப
டிக்கு அவரை நோக்கி ஓய்வுநாளிற் சுக
மாக்குகிறது நியாயமாவென்றுகேட்டா
ர்கள்.--அவர் சொன்னது உங்களில் எவ 11
னானாலுந் தன் ஆடு ஓய்வுநாளில் ஒரு கு
ழியிலே விழுந்தால் அதைப்பிடித்துத் தூ
க்கிவிடுவானல்லவா?--ஆட்டிலும் மனித 12
னானவன் மிகவும் மேன்மையாயிருக்கிறா
ன். ஆதலால் ஓய்வுநாளிலே நன்மைசெய்
கிறது நியாயந்தானென்று சொல்லிப் பி
ன்பு அந்த மனிதனை நோக்கி,—உன் கை 13
யை நீட்டென்றார். அவன் அதை நீட்டி
னான் உடனே அது மறுகையைப்போ
லவே சுகமாயிற்று.-அப்பொழுது பரிசே 14
யர் புறப்பட்டுப்போய் அவரைச் சங்க

Digitized by Google

ரிக்கும்படிக்கு யோசனைபண்ணிக்கொ
ண்டார்கள்.
15 அதை இயேசுவானவர் அறிந்து அவ்
விடம் விட்டுப்போனார். அப்பொழுது
அநேகசனங்கள் அவர் பின்னே சென்று
16 ர்கள்.-எல்லாரையும் அவர் குணமாக்கிப்
பின்பு தம்மைப் பிரசித்தம்பண்ணாதப
டிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.
17 -அதினாலே இதோ நான் தெரிந்துகொ
ண்ட ஊழியக்காரன் எனக்கு அன்பான
வர் என் ஆத்துமாவுக்குப் பிரியமானவர்
இவரிடத்திலே என்னுடைய ஆவியிருக்க
ச்செய்வேன். இவர் நியாயமானதை உல
18 கத்தாருக்கு அறிவிப்பார். —சண்டைப
ண்ணாமலுங் கூக்குரல்பண்ணாமலுமிருப்
பார். இவருடைய சத்தம் வீதிகளில் ஒ
19 ருவராலுங் கேட்கப்படுவதில்லை.—நியா
யமானது சயமாயிருக்கும்படி செய்கிற
வரைக்கும் இவர் நெரிந்திருக்கிறநாணலை
முறியாமலும், மங்கியெரிகிற திரியை அ
20 ணையாமலுமிருப்பார்.—இவருடைய நா
மத்தின்மேலே புறத்தேசத்தார் நம்பிக்
21 கையாயிருப்பார்களென்று,-ஏசாயாதீர்க்

Digitized by Google

கதரிசி உரைத்தவசனம் நிறைவேறிற்று.
அப்பொழுது பசாசுபிடித்த குருடும் 22
ஊமையுமான ஒருவன்அவரிடத்திற்கொ
ண்டுவரப்பட்டான். குருடும் ஊமையு
மான அவன் பேசவுங் காணவுந்தக்கதாக
அவனைக் குணமாக்கினார்.—சனங்களெல் 23
லாரும் பிரமித்து இவர் தாவீதின் குமார
னல்லவாவென்றார்கள்.-பரிசேயர் அதை 24
க்கேட்டு இவன் பசாசுக்களுடைய தலைவ
னாகிய பெயெல்செபூலினாலே பசாசுக்க
ளைத்துரத்துகிறானேயன்றி மற்றப்படிய
ல்லவென்றார்கள்.—இயேசுவானவர் அவ 25
ர்களுடைய சிந்தனைகளையறிந்து அவர்க
ளை நோக்கி ஒரு இராச்சியத்தார் தங்க
ளுக்குள்ளேதானே பிரிவினைபண்ணினால்
அழிந்துபோவார்கள். அல்லாமலும் ஒ
ருபட்டினத்தாரானாலுங் குடும்பத்தாரா
னாலுந் தங்களுக்குள்ளே பிரிவினைபண்ணி
னால் நிலைநிற்கமாட்டார்கள்.—அப்படி 26
ப்போலச் சாத்தான் மற்றொரு சாத்தா
னைத்துரத்தினால் அவர்களுக்குள்ளேதா
னே பிரிவினையுண்டாயிருக்குமே அப்ப
டியானால் அவனுடைய இராச்சியம் எப்

Digitized by Google

27 படி நிலைநிற்கும்?—அல்லாமலும் நான்
பெயேல்செபூலினாலே பசாசுக்களைத் து
ரத்துகிறவனென்றால் உங்கள் பிள்ளைகள்
அவைகளை ஆராலே துரத்துகிறார்கள் ஆ
கையால் அவைகளே உங்களுக்கு நியாயத்
28 தீர்ப்புக்கொடுப்பார்கள்,-நான் பராபர
னுடைய ஆவியாலே பசாசுகளைத் துரத்
துகிறபடியாற் பராபரனுடைய ஆளுகை
யே உங்களிடத்தில் வந்திருக்கின்றது.—
29 அல்லது முன்பு பலவானைக் கட்டாவிட்
டால் அவனுடைய வாசஸ்தலத்திலே ஒ
ருவன் எப்படிப் பிரவேசித்து அவனு
டைய உடைமைகளைக் கொள்ளையிடுவா
ன் (பலவானைக் கட்டினபின்பல்லவா) அ
வனுடைய வாசஸ்தலத்தைக் கொள்ளையி
30 டுவான்,—என்பங்கிலிராதவன் எனக்கு வி
ரோதமாயிருக்கிறான் என்னுடனே கூட
ச் சேர்த்துக்கொள்ளாதவன் சிதற அடிக்
31 கிறான்,-ஆதலால் நான் உங்களுக்குச் சொ
ல்லுகிறதாவது, எந்தப்பாவமுந் தூஷணை
யும் மனிதர்களுக்கு மன்னிக்கப்படும்,
தேவ ஆவியை (நிந்திக்கும்) தூஷணம்மா
த்திரம் மனிதருக்கு மன்னிக்கப்படுவதில்

Digitized by Google

லை.—எவனானும் மனிதனுடைய குமா 32
ரனுக்கு விரோதம்பேசினால் அது அவ
னுக்கு மன்னிக்கப்படும் எவனாகிலும் ப
ரிசுத்த தேவ ஆவிக்கு விரோதம்பேசினா
ல் அது அவனுக்கு இம்மையிலும் மறு
மையிலும் மன்னிக்கப்படுவதில்லை, -மே 33
லும் ஒரு மரத்தின் தன்மையை அதின் க
னிகளாலே அறியலாம். ஆகையால் நீங்க
ள் ஒரு மரத்தை நல்லமரமென்றெண்ணி
னால் அதின் கனியையும் நல்லதென்றெ
ண்ணுங்கள். அல்லது நீங்கள் ஒருமரத்தை
க் கெட்டமரமென்றெண்ணினால், அ
தின் கனியுங் கெட்டதென்றெண்ணு
ங்கள்.—இருதயத்தின் நிறைவினாலே வா 34
ய் பேசும். ஆதலால் விரியன் குட்டிக
ளே நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க ந
ன்மையானவைகளை எப்படிப்பேசுவீர்க
ள்.—நல்ல மனிதனானவன் தன் இருதயத் 35
திலுள்ள நல்லபொக்கிஷத்தில் நல்லவை
களை எடுத்துக் காண்பிக்கிறான். பொல்
லாத மனிதன் தன் பொல்லாதபொக்கிஷ
த்திற் பொல்லாதவைகளை எடுத்துக் கா
ண்பிக்கிறான்.-மனிதர்கள் பேசும் வீணா 36

Digitized by Google

வார்த்தைகள் யாவையுங் குறித்து நியா
யத்தீர்ப்பு நாளிலே உத்தரவுகொடுப்பா
ர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறே
37 னென்றார்.--எப்படியும் உன் வார்த்தைக
ளினாலே நீதிமானென்றும் உன்வார்த்தை
களினாலே குற்றவாளியென்றுந் தீர்க்கப்
படுவாய்.
38 அப்பொழுது வேதபாரகரிலும் பரி
சேயரிலுஞ்சிலர் அவரை நோக்கிப் போ
தகரே, உம்மாலே ஒரு அடையாளத்தை
39 க்காண விரும்புகிறோமென்றார்கள்.—அ
தற்கு அவர் சொன்னது, சோரமார்க்க
மாய்ப்போகிற பொல்லாத சந்ததி(யாகி
ய இவர்கள்) ஒரு அடையாளத்தைக் கே
ட்கிறார்கள். யோனாத்தீர்க்கதரிசியின் அ
டையாளமேயன்றி வேறு அடையாளம்
இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.-
40 என்னவென்றால், யோனாவென்பவன் இ
ரவும்பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீ
னுடைய வயிற்றில் இருந்ததுபோல ம
னிதனுடைய குமாரன் இரவும் பகலும்
மூன்று நாட் பூமியின் இருதயத்திலே இ
41 ருப்பாரென்பதே.—யோனாவென்பவன்

Digitized by Google

பிரசங்கம்பண்ணினபொழுது, நினிவே
பட்டினத்தார்மனந்திரும்பினார்கள்.யோ
னாவிலும் அதிக மேன்மையானவர் இ
தோ இங்கே இருக்கிறார்.ஆதலால் நியாய
த்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டினத்தா
ர் எழும்பி இவர்களைக் குற்றவாளிகளெ
ன்று தீர்ப்பார்கள். —அல்லாமலுந் தெற் 42
கு இராசஸ்திரி மிகுந்த தூரமான தேசத்
திலிருந்து சாலோமோனுடைய ஞானத்
தைக் கேட்கவந்தாள்.சாலோமோனிலு
ம் அதிக மேன்மையானவர் இதோ இங்
கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு
நாளிலே அந்த இராசஸ்திரி எழும்பி இவ
ர்களைக் குற்றவாளிகளென்று தீர்ப்பாள்.
அல்லாமலும் அசுத்தமான ஆவி ஒரு 43
மனிதனை விட்டுப் புறப்பட்டபின்புதண்
ணீரில்லாத இடங்களில் அலைந்து இளைப்
பாறுதற்கான இடத்தைத் தேடியும் அ
டையாமலிருக்கும் பொழுது, -அவன் எ 44
ன் வீட்டுக்குத் திரும்பிப்போவேனென்
று சொல்லி (அங்கே) சென்று அவ்விட
த்தை வெறுமையாயும் பெருக்கிச் சோ
டிக்கப்பட்டதாயுமிருக்கக்கண்டு திரும்

Digitized by Google

45 பிப்போய்,— தன்னிலும் அதிக பொல்
லாத வேறேழு ஆவிகளைத் தன்னுடனே
கூட்டிக்கொண்டு வந்து பிரவேசித்து அ
ங்கே வாசம்பண்ணும். இவ்விதமாய் அந்
த மனிதனுடைய முன்னிலைமையிலும் பி
ன்னிலைமை அதிக கேடுள்ளதாய் இருக்கி
ன்றது. அப்படியே இந்தப் பொல்லாத
சந்ததிக்குஞ் சம்பவிக்கும் என்றார்.
46 அவர் இப்படிச் சனங்களுடனே பே
சுகையில் அவருடைய தாயுஞ் சகோதர
ரும் வந்து வெளியே நின்று அவரோ
47 டே பேசத்தேடினார்.— அப்பொழுது
அவரை நோக்கி, இதோ உம்முடைய தா
யாருஞ் சகோதரரும் வெளியே நின்று
உம்மோடே பேசத்தேடுகிறார்களென்றா
48 ன்.— அப்படித் தமக்குச் சொன்னவனு
க்கு அவர் மாறுத்தரமாக என்னுடைய
தாய் யாவள்! என் சகோதரர் யாரென்று
49 சொல்லி,— தம்முடைய கையைத் தமது
சீஷர் மேல் நீட்டி இதோ, இவர்கள் என்
தாயும் என்சகோதரருமாயிருக்கிறார்கள்.
50 -எவனானாலும் பரமண்டலங்களிலிருக்கிற
என் பிதாவின் சித்தத்தின்படி செய்தால்

Digitized by Google

அவனே என் சகோதரனுமாய் சகோதரியுமாய்த் தாயுமாயிருக்கிறானென்றார்.

௰௩. அதிகாரம்.

[(௧.) பயிர்செய்கிறவனை உவமையாய்க் காட்டியது (௰௮.) அதின் பயன். (௨௪.) களைகளையும், (௩௧.) கடுகையும், (௩௩.) புளித்தமாவையும் உவமையாய்க் காட்டியது. (௪௪.) ஒளித்திருந்த பொக்கிஷத்தை உவமையாகக்காட்டியது. (௪௫) ஆணிமுத்தை உவமையாகக் காட்டியது. (௪௭) கடலிற்போட்டவலையை உவமையாய்க் காட்டியது. (௫௩.) கிறிஸ்து தமது ஊராராலே அசட்டைபண்ணப்பட்டது.

அந்நாளிலே இயேசுவானவர் வீட்டிவிருந்து புறப்பட்டுக் கடலின் அருகே உளுக்கார்ந்தார்.—அப்பொழுது அநேக சனங்கள் அவரிடத்திற் கூடிவந்தபடியால் அவர் படகிலேறி உளுக்கார்ந்து சனங்களெல்லாருங் கரையிலே நிற்க;—அநேக 3
க விசேஷங்களை உவமைகளால் அவர்களுக்குச் சொன்னதாவது, விதைக்கிறவனொருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையிற் சில(விதை)வழியருகே விழுந்தது.—அதைப் பறவைகள் வந்து ப 4
ட்சித்தன.—வேறு சில (விதை) மிகுந்த 5

மண்ணில்லாத கற்பாறை இடங்களில் வி
ழுந்து ஆழமான மண்ணில்லாததினால் உ
6 டனே முளைத்தது.-வெயில் தோன்றின
பொழுது அது தீய்ந்துபோய், வேரில்
7 லாததினால் உலர்ந்துபோயிற்று.—வேறு
சில(விதை)முள்ளுக்களுள்ள இடத்திலே
விழுந்தது. முள்ளுக்கள் வளர்ந்து அதை
8 நெருக்கிப்போட்டன.—வேறு சில (வி
தை) நல்ல நிலத்தில் விழுந்து சில நூறாக
வுஞ் சில அறுபதாகவுஞ் சில முப்பதாக
9 வும் பலன் கொடுத்தது. — கேட்கிறதற்
குக் காதுள்ளவன் கேட்கக்கடவனென்றா
10 ர்.-அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில்
வந்து என்னத்தினாலே உவமைகளாலே
அவர்களோடே பேசுகிறீர் என்றார்கள்.—
11 அதற்கவர் சொன்னதாவது, பரலோக இ
ராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படி
க்கு உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது
அவர்களுக்கு அப்படி அளிக்கப்படவி
12 ல்லை - எப்படியெனில், எவன் உள்ளவனா
யிருக்கிறானோ அவனுக்குக் கொடுக்கப்ப
டும், பரிபூரணமுமடைவான். எவன் உ
ள்ளவனல்லாதவனாயிருக்கிறானோ அவனி

Digitized by Google

டத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்ப
டும்.—அவர்கள் கண்டுங் காணாமலுங் கே 1
ட்டுங் கேளாமலுஞ் சிந்தித்துக்கொள்ளா
மலுமிருக்கிறபடியினாலே நான் உவமை
களால் அவர்களுடனே பேசுகிறேன்.-
இந்தச் சனங்கள் கண்களினாலே காணாம 1
லுங் காதுகளினாலேகேளாமலும் இருத
யத்தினாலே சிந்தித்துக்கொள்ளாமலுந்
திரும்பாமலும் என்றால் ஆரோக்கியம்
அடையாமலுமிருக்கும்படிக்கு அவர்க
ள் கடினமாக்கப்பட்ட இருதயமுடைய
வர்களுமாய் வருத்தத்தோடே கேட்கிற
காதுள்ளவர்களுமாய் மூடிக்கொண்டி
ருக்கிற கண்களையுடையவர்களுமாயிரு
க்கிறபடியினாலே,—நீங்கள் உற்றுக்கேட் 15
டாலுஞ் சிந்தித்துக்கொள்ளாமலிருப்பீ
ர்கள். உற்றுப்பார்த்தாலும் அறியாமலி
ருப்பீர்களென்று ஏசாயாசொன்ன தீர்க்
கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறி
வருகின்றது.-உங்கள் கண்களோ காணுகி 16
றபடியினாலும் உங்கள் காதுகள் கேட்கி
றபடியினாலும் பாக்கியமுள்ளவைகள்.-
அநேகந்தீர்க்கதரிசிகளும் நீதிமான்களு 1

Digitized by Google

டம் நீங்கள் காணுகிறவைகளைக் காணவும் நீ
ங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரு
ரும்பியுங் காணாமலுங் கேளாமலும் போ
னார்களென்று மெய்யாகவே உங்களுக்
குச் சொல்லுகிறேன்.
18 ஆகையால் விதைக்கிறவனுடைய உவ
19 மையைக் கேளுங்கள்.—ஒருவன் பரலோ
க இராச்சியத்தைக் குறித்து வசனத்தை
க் கேட்டும் அதைச் சிந்தித்துக்கொள்ளா
மலும் இருக்கிறபொழுது பொல்லாங்க
ன் வந்து, அவனுடைய இருதயத்தின்மே
ல் விதைக்கப்பட்டதை யெடுக்கிறான் அ
வனே விதைவிழுந்த வழிக்கொப்பானவ
20 ன்.—விதைவிழுந்த கற்பாறைக்கொப்பா
னவன் அந்த வசனத்தைக்கேட்டு உட
னே அதைச் சந்தோஷித்தோடே ஏற்று
21 க்கொண்டு,—பின்பு அது தனக்குள்ளே
வேர்பற்றியிராமற் கொஞ்சக் காலம்மாத்
திரம் அதைப் பற்றிக்கொள்ளுவான். அ
ந்த வசனத்தினிமித்தம் உபத்திரவமும்,
துன்பப்படுதலுமுண்டாகிற பொழுது
உடனே அவன் தவறுவானென்பதே.—
22 விதைவிழுந்த முள்ளுள்ளவிடத்துக்கொ

Digitized by Google

ப்பானவன் அந்த வசனத்தைக் கேட்கிற
பொழுது லவுகீக கவலைகளும் ஐசுவரியத்
தின் வஞ்சனையும் அவ்வசனத்தை நெருக்
கிப்போடுவதாற் கனியற்றவனாவானென்
பதே.-விதைவிழுந்த நல்லநிலத்துக்கொ 23
ப்பானவன் அந்தவசனத்தைக் கேட்டுஞ்
சிந்தித்தும் அதின்படிசெய்தும் நூறும்,
அறுபதும் முப்பதுமாகப் பலனைக்கொ
டுத்தும் வருவானென்பதேயென்றார்.
பின்பு அவர் வேறொரு உவமையை அ 24
வர்களுக்குச் சொல்லிக்காட்டினார். அதா
வது பரலோக இராச்சியம் ஒரு வயல் நி
லத்துக்கொப்பாயிருக்கின்றது.அந்த நில
த்திலே எசமானானவன் நல்விதையை வி
தைத்தான்.—பின்பு மனிதர் நித்திரைப 25
ண்ணுகையில் அவனுடைய பகைஞன் வ
ந்து கோதும்பைக்குள்ளே களைகளை வி
தைத்துப்போனான்.-பயிரானது வளர்ந் 26
து தானியத்தை உண்டாக்கினபொழுது
அந்தக் களைகளுங் காணப்பட்டன.-வே 27
லைக்காரர் எசமானிடத்தில் வந்து ஆண்ட
வனே, நீர் உமது வயல்நிலத்திலே நல்ல
விதையை விதைக்கவில்லையா? களைகள் அ

Digitized by Google

திலே எப்படியுண்டாயினவென்றார்கள்?
28 -அதற்கவன் பகைஞன் அப்படிச்செய்
தானென்றான். அப்பொழுது வேலைக்கா
ரர் நாங்கள்போய் அவைகளைப் பிடுங்கிப்
போடச் சித்தமாயிருக்கிறீரோவென்று
29 கேட்டார்கள்.—அதற்கவன் சொன்னது
வேண்டாம் களைகளைப் பிடுங்குகிறபொ
ழுது நீங்கள் கோதும்பையையுங் கூட
30 வேரோடே பிடுங்காதபடிக்கு,—அவ்வி
ரண்டையும் அறுப்புக்காலம்வரைக்கும்
வளரவிடுங்கள் அறுப்புக்காலத்திலே அ
றுக்கிறவர்கள் முதலாவது களைகளைப்பிடு
ங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக்
கட்டுக்களாகக் கட்டவுங் கோதும்பை
யை என் களஞ்சியத்திற் சேர்க்கவுங் கட்
டளையிடுவேனென்று சொன்னானென்
றார்.

31 பின்பு அவர் வேறொரு உவமையை அ
வர்களுக்குச் சொல்லிக்காட்டினார். அ
தாவது, பரலோக இராச்சியங் கடுகுவி
தைக்கு ஒப்பாயிருக்கின்றது அதை ஒரு
மனிதனெடுத்துத் தன் நிலத்திலே விதை
32 த்தான்.-அது எல்லாவிதைகளிலுஞ் சிறி

Digitized by Google

தாயிருந்தும் வளரும்பொழுது கீரைக
ளிலும் பெரிதாகி ஆகாசத்துப்பறவைக
ள் அதின் கிளைகளில் வந்தடையத்தக்கதா
ன செடியாமென்றார்.
பின்பு அவர் வேறொரு உவமையை அ 33
வர்களுக்குச்சொன்னார். அதாவது மூன்
றுமரக்கால் மாமுழுவதும் புளிப்பாகும்
வரைக்கும் ஒரு ஸ்திரி புளிப்புமாவையெ
டுத்து அதிலே அடக்கி வைத்தாள். பர
லோக இராச்சியம் அந்தப் புளிப்புமா
வுக்கொப்பாயிருக்கின்றதென்றார்.- என் 34
வாயைத்திறந்து உவமைகளாலே பேசு
வேன் உலகத்தோற்றம் முதற்கொண்டு
மறைபொருளானவைகளை வெளிப்படுத்
துவேனென்று தீர்க்கதரிசியால் உரைக்க
ப்பட்டது நிறைவேறத்தக்கதாக,-இயே 35
சுவானவர் இவைகளையெல்லாம் உவமை
யாய்ச் சனங்களுடனே பேசினார். உவ
மைகளினாலேயன்றி வேறுவிதமாய் அவ
ர் அவர்களுடனே பேசவில்லை.—அப் 36
பொழுது இயேசுவானவர் சனங்களை அ
னுப்பிப் பின்பு வீட்டுக்குப்போனார். அ
ங்கே அவருடைய சீஷர் அவரிடத்தில் வ

Digitized by Google

ந்து நீர் வயல்நிலத்தின் களைகளைக்குறித்
துக் காட்டின உவமையை எங்களுக்கு
வெளிப்படுத்தவேண்டுமென்றுகேட்டா
37 ர்கள்.—அவர்களுடனே அவர் மறுமொ
ழியாகச்சொன்னதாவது நல்ல விதையை
விதைக்கிறவன் மனிதனுடைய குமார
38 னே,வயல்நிலம் உலகமே,—நல்விதையி
ராச்சியத்தின் புத்திரரே, களைகள் பொ
39 ல்லாங்கனுடைய புத்திரரே,— அவைக
ளை விதைக்கிற பகைஞன் பசாசே, அறு
ப்பு உலகத்தின் முடிவே, அறுக்கிற
40 வர்கள் தேவதூதர்களே,-ஆதலாற் களைக
ள் சேர்க்கப்பட்டு அக்கினியினாற் சுட்டெ
ரிக்கப்படுகிறது போல இவ்வுலகத்தின்
41 முடிவிலே நடக்கும்.—மனிதனுடையகு
மாரன் தன்னுடைய தூதரை அனுப்பு
வான்,அவர்கள் அவனுடைய இராச்சிய
த்திலிருக்கிற சகல இடறல்களையும், அக்
42 கிரமஞ்செய்கிறவர்களையுஞ்சேர்த்து அ
ழுதலும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற அ
43 க்கினிச் சூளையிலே போடுவார்கள்.—அ
ப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதா
வின் இராச்சியத்திலே சூரியனைப் போல

Digitized by Google

ய் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் கா
துள்ளவன் கேட்கக்கடவன்.

அல்லாமலும் பரலோக இராச்சியம் வ 44
யல் நிலத்தில் ஒளிக்கப்பட்டிருக்கிறபொ
க்கிஷத்துக்கொப்பாயிருக்கின்றது. அ
தை ஒரு மனிதன் கண்டு அதை மறைத்
து அதைக் குறித்து அடைந்த சந்தோ
ஷத்தினாலே போய்த் தனக்குள்ளயாவை
யும் விற்று அந்த வயல்நிலத்தையே கொ
ள்ளுகிறான்.

அல்லாமலும் பரலோக இராச்சியம் 45
நல்ல முத்துகளைத் தேடி,—ஒரு ஆணி 46
முத்தைக் கண்டு போய்த் தனக்குள்ள
யாவையும் விற்று அதைக் கொள்ளுகிற
வியாபாரி ஒருவனுக்கு ஒப்பாயிருக்கின்
றது.

அல்லாமலும் பரலோக இராச்சியம் 47
ஒரு வலைக்கொப்பாயிருக்கின்றது. வலை
யானது கடலிற்போடப்பட்டு எல்லாச்
சாதியான மீன்களையும் வாரி நிறைந்த
பொழுது,—சனங்கள் அதைக் கரையிலி 48
ழுத்து உளுக்கார்ந்து நல்லவைகளைப்பா
த்திரங்களிற் சேர்த்துக்கொண்டு தகாத

49 வைகளைத் தள்ளிப்போடுகிறார்கள்.—இவ்
விதமாக உலகத்தின் முடிவிலே நடக்கு
ம். தேவதூதர் புறப்பட்டு நீதிமான்களி
லிருந்து துன்மார்க்கரைப் பிரித்து,—
50 அழுதலும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற
அக்கினிச் சூளையிலே போடுவார்களென்
51 று சொல்லி,—பின்பு நீங்கள் இவைகளை
யெல்லாம் அறிந்துகொண்டீர்களாவென்
று இயேசுவானவர் சீஷர்களிடத்திற் கே
ட்டதற்கு ஆண்டவரே, அறிந்துகொண்
52 டோமென்றார்கள்.—அவர் பின்னும் அவ
ர்களை நோக்கி அப்படியிருக்கையாற் ப
ரலோக இராச்சியத்தைக் குறித்துப்போ
தனையடைந்த வேதபாரகனெவனோ அ
வன் தன் பொக்கிஷத்திற் புதியவைகளை
யும் பழையவைகளையுமெடுத்துக் காண்
பிக்கிற வீட்டெசமானுக்கு ஒப்பாயிருக்
கிறானென்றார்.
53 இப்படி இயேசுவானவர் இந்த உவ
54 மைகளைச்சொல்லிமுடிந்தபின்பு,—அவ
ர் அவ்விடம்விட்டுத் தாம் வளர்ந்த ஊரி
ல் வந்து செப ஆலயத்திலே சனங்களுக்
கு உபதேசம்பண்ணினார். அவர்கள் அ

Digitized by Google

தைக் கேட்டுப் பிரமித்து இப்படிப்பட்
ட ஞானமும் வல்லமைகளும் இவனுக்கு
எங்கேயிருந்து வந்தன.—இவன் தச்சனு 55
டைய குமாரனல்லவா? இவனுடைய தாய்
மரியா ளென்னப்பட்டிருக்கிறாளல்லவா?
யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்
பவர்கள் இவனுடைய சகோதரரல்லவா?
—இவனுடைய சகோதரிகளெல்லாரும் 56
நமக்குள்ளே இருக்கிறார்களல்லவா. இப்
படியிருக்க இவையெல்லாம் இவனுக்கு
எங்கேயிருந்து வந்தனவென்று சொல்லி,
—அவரைக் குறித்து இடறற்பட்டார் 57
கள். அப்பொழுது இயேசுவானவர் அ
வர்களை நோக்கி, தீர்க்கதரிசியொருவன்
தன் ஊரிலேயுந் தன் குடும்பத்திலேயும
ன்றி மற்ற இடங்களிலே கனவீனப்படா
னென்றார்.—மேலும் அந்தச் சனங்களு 58
டைய அவிசுவாசத்தினாலே அவர் அவ்வி
டத்திலே அநேக அற்புதங்களைச்செய்ய
வில்லை.

௰௪. அதிகாரம்.

[(௧)எரோது கிறிஸ்துவைக்குறித்து நினைத்தது. (௩.) யோவான் சிரச்சேதம் பண்ணப்பட்டதற்குக் காரணம். (௰௩)வனாந்தரத்திலே இயேசுவானவர் ஐயாயிரம்பேருக்குச் சாப்பாடுகொடுத்தது. (௨௨) அவர் கடலிலே நடந்து சீஷரிடத்தில்வந்தது,(௩௪) கெனேசரேத்தினிடத்தில் வந்து தம்முடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டவர்களைக் குணமாக்கினது]

1 அக்காலத்திலே கார்பங்குதேசாதிபதி
யாகிய எரோதே இராசா இயேசுவின் கீ
2 ர்த்தியைக் கேள்விப்பட்டு,—தன் ஊழி
யக்காரரை நோக்கி, அவன் யோவானிஸ்
நானன் அவன் மரித்தோரிலிருந்தெழுந்
திருந்தவன், அதினாலே அவன் அற்புதங்
களைச்செய்துவருகிறானென்றான்.
3 அதெப்படியென்றால் எரோதே இரா
சா தன் தம்பியாகிய பிலிப்புவினுடைய
மனைவி எரோதியாளைக் குறித்து நீர் அ
வளைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்
4 று,-யோவான் அவனுடனே சொன்னப
டியினாலே எரோதே இராசா அவனைப்
பிடித்துக் கட்டிக் காவலில் வைத்தான்.-
5 —அவனைக் கொலைசெய்யவும் மனசாயி

Digitized by Google

ருந்தான். அப்படியிருந்துஞ் சனங்கள்
யோவானைத் தீர்க்கதரிசியென்றெண்ணி
னபடியினாலே அவன் அவர்களுக்குப் ப
யந்து (அப்படிச் செய்யவில்லை.)— பின் 6
பு ஏரோதையினுடைய சென்ம நாள்
கொண்டாடப்படுகிற காலத்திலே ஏரோ
தியாளின் குமாரத்தி ஏரோதே இராசா
வுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகத்தக்
கதாக நடனம்பண்ணினபொழுது,— அ 7
வன் அவளை நோக்கி, நீ எதைக்கேட்டா
லும் தருவேனென்று அவளுக்கு ஆணையி
ட்டு வார்த்தை கொடுத்தான்.— உடனே 8
அவள் தன் தாய் தனக்குப் போதித்திரு
ந்தபடியே நீர் யோவானிஸ்நானனுடை
ய சிரசை ஒரு தாலத்தில் இங்கே எனக்
குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டா
ள்.—இராசா துக்கமடைந்தான். அப்
படியிருந்தும் தான் கொடுத்த ஆணையின்
நிமித்தமும் பந்தியிற் கூடவிருந்தவர்களி
ன் நிமித்தமும் அவன் அதைக்கொடுக்க
க் கட்டளையிட்டான்.— அந்தப்படி இரா 10
சாவினாலே அனுப்பப்பட்டவர்கள் காவ
கூடத்துக்குப்போய் யோவானைச்சிர

Digitized by Google

11 சேதம்பண்ணி,—வந்து அவனுடைய சி
ரசை ஒரு தாலத்தில் வைத்து அந்தப்
பெண்ணுக்குக் கொடுத்தார்கள். அவள்
அதைத் தன் தாய்க்குக் கொண்டுபோய்
12 க்கொடுத்தாள்.-பின்பு அவனுடைய சீஷ
ர்கள் வந்து அவனுடைய உடலையெடுத்
து அடக்கம்பண்ணி வந்து இயேசுவுக்கு
அந்தச் சங்கதியை அறிவித்தார்கள்.
13 இயேசுவானவர் அதைக் கேட்டு அவ்
விடம் விட்டு வனாந்தரமான இடத்திலே
தனியேயிருக்க ஒரு படவிலேறிப் போ
னார். சனங்கள் அதைக் கேள்விப்பட்டுப்
பட்டினங்களிலிருந்து கால் நடையாய்
14 அவர் பின்சென்றார்கள்.—இயேசுவானவ
ர்புறப்பட்டுத் திரளான சனங்களைக் கண்
டு அவர்களுக்கு இரக்கமாய் மனதுருகி
அவர்களில் வியாதிப்பட்டவர்களைக் கு
ணமாக்கினார்.

15 சாயங்காலத்தில் அவருடைய சீஷர் அ
வரிடத்தில் வந்து இது வனாந்தரமான இ
டம், அல்லாமலும் பகல்போயிற்று. ஆ
தலால் இந்தச் சனங்கள் கிராமங்களுக்கு
ப்போய்த் தங்களுக்காகப் போசனபதா

ர்த்தங்களைக் கொள்ளும்படி இவர்களை அ
னுப்பிவிடுமென்றார்கள்.-அதற்குஇயேசு 16
வானவர் இவர்கள்போகவேண்டுவதில்லை,
நீங்களே இவர்களுக்குச் சாப்பாடு கொ
டுங்களென்றார்.-அவர்கள் சொன்னது ஐ 17
ந்தப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாம
ல் வேறொன்றும் எங்களிடத்தில் இல்லை
யென்றார்கள்.- அவைகளை எனக்கு இங் 18
கேகொண்டுவாருங்களென்றார்.-பின்புச 19
னங்கள் புல்லின் மேற் பந்தியிருக்கும்ப
டிக்கு அவர் கட்டளையிட்டு அவ்வைந்து
அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எ
டுத்து வானத்தை அண்ணார்ந்துபார்த்து,
அவைகளை ஆசீர்வதித்து அப்பங்களைப்
பிட்டுச் சீஷர்களுக்குக்கொடுத்தார். சீஷ
ர் அவைகளைச் சனங்களுக்குக் கொடுத்தா
ர்கள்.-அவர்கள் எல்லாருஞ் சாப்பிட்டுத் 20
திருத்தியடைந்தார்கள், அதுவுமல்லாமற்
சேஷமானவைகளைப் பன்னிரண்டு கூ
டை நிறைய எடுத்தார்கள். — அப்படிச் 21
சாப்பிட்டவர்கள் பெண்களும் பிள்ளைக
ளுந் தவிர ஏறக்குறைய ஐயாயிரம்பேரி
ருந்தார்கள்.

Digitized by Google

22 உடனே இயேசுவானவர் சனங்களை அ
னுப்பிவிடுகையில் தமது சீஷர்கள் படவி
லேறித் தமக்கு முன்னே அக்கரைக்குப்
போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தி
23 னார்.-சனங்களை அனுப்பிவிட்டபின்பு அ
வர் தனியே செபத்தியானம்பண்ணும்ப
டிக்கு ஒரு மலையின்மேலேறினார். சாய
ந்தரமானபொழுது அவர்மாத்திரம் அங்
24 கே இருந்தார்.-அவ்வேளையிற் படவு க
டலின் நடுவே சேர்ந்து எதிர்காற்றிருந்
ததினாலே அலைகளால் அலைவுபட்டது.-
25 அப்படியிருக்கிறபொழுது, இரவின் நா
லாஞ் சாமத்திலே இயேசுவானவர் கடலி
ன் மேலே நடந்து அவர்களிடத்துக்குப்
26 போனார்.—அவர் கடலின் மேல் நடக்கி
றதைச் சீஷர் கண்டு தத்தளித்து ஆவே
சமுண்டாயிருக்கிறதென்று புலம்பிப்ப
27 யத்தினாலே கூப்பிட்டார்கள்.— உடனே
இயேசுவானவர் திடன்கொள்ளுங்கள், நா
ன்தான் பயப்படாதிருங்களென்று அவர்
28 களுடனே சொன்னார்.— பேதுரு அவ
ருக்கு ஆண்டவரே, நீரேயானாற் சலத்தி
ன் மேலே உம்மிடத்தில் வரும்படி என

Digitized by Google

க்குக் கட்டளையிடுமென்றான்.— அதற்க 29
வர் வாவென்றார். அப்பொழுது பேது
ரு படவை விட்டிறங்கி இயேசுவினிடத்
துக்கு வரும்படிக்குச் சலத்தின் மேலே
நடந்து,—காற்றுப் பலத்திருக்கிறதைக் 30
கண்டு பயமடைந்து அமிழத்தொடங்கி
ஆண்டவரே! என்னை இரட்சிக்கவேண்டு
மென்று கூப்பிட்டான்.—உடனே இயே 31
சுவானவர் கையை நீட்டி அவனைப் பிடி
த்துக்கொண்டு அற்ப விசுவாசியே, என்
சந்தேகப்பட்டாயென்றார்.—அவர்கள்ப 32
டவிலேறினவுடனே காற்று அமைதலாயி
ற்று.— அப்பொழுது படவிலுள்ளவர்க 33
ள் வந்து மெய்யாகவே நீர் பராபரனு
டைய குமாரனாயிருக்கிறீரென்று சொ
ல்லி அவரை வணங்கினார்கள்.

பின்பு அவர்கள் அக்கரைக்கோடிக் கெ 34
னேசரேத்து நாட்டில் வந்தார்கள்.—அ 35
வ்விடத்து மனிதர் அவரை அறிந்து அந்
தத் திசைகளிலெங்கும் ஆட்களை அனுப்
பிப் பிணியாளிகளெல்லாரையும் அவரிட
த்தில் அழைத்துக்கொண்டுவந்து,—அவ 36
ருடைய வஸ்திரத்தின் ஓரத்தை மாத்திர

Digitized by Google

ந் தொடும்படிக்கு உத்தரவு கேட்க அ
தைத் தொட்ட யாவருஞ் சொஸ்தமடை
ந்தார்கள்.

௰௫. அதிகாரம்.

[(௧) பரிசேயர் முதலானவர்கள் தேவ கற்பனைகளை மீறினதற்காக அவர்களைக் கடிந்துகொண்டது. (௰௧) வாய்க்குள்ளே போகிற பதார்த்தத்தினாலே அசுசிவாராதென்பது. (௨௧) கானான்தேசத்தாளுடையமகளைக் குணமாக்கினது. (௩௨)நாலாயிரபேருக்கும்அற்புதமாய்ச்சாப்பாடுகொடுத்தது.]

1 அக்காலத்திலே எருசலேமிலிருந்து
வந்த வேதபாரகரும் பரிசேயரும் இ
2 யேசுவினிடத்தில் வந்து,— உம்முடைய
சீஷர் தங்கள் கைகளைக் கழுவாமற் போ
சனம்பண்ணுகிறார்கள். அப்படி அவர்க
ள் பெரியோர்களுடைய பாரம்பரை நி
யாயத்தை ஏன் மீறிநடக்கிறார்களென்றார்
3 கள்.—அதற்கு அவர் சொன்னது, உங்க
ள் பாரம்பரை நியாயத்தினால் நீங்களும்
பராபரனுடைய கற்பனையை ஏன் மீறிந
4 டக்கிறீர்கள்.—எப்படியெனில் உன் தக
ப்பனையுந் தாயையுங் கனம்பண்ணவேண்

Digitized by Google

டுமென்றுந் தகப்பனையானாலுந் தாயை
யானாலும் நிந்திப்பவனை மரண ஆக்கினை
க்குட்படுத்த வேண்டுமென்றும் பராப
ரன் கட்டளையிட்டார். - அப்படியிருந்து 5
ம் நீங்கள் எவனாகிலுந் தன் தகப்பனுடனே
அல்லது தாயுடனே உமக்கென்னாலே உத
வுகிறதேதுண்டோ அதைக் காணிக்கையா
கக் கொடுக்கிறேனென்று சொன்னால், - அ 6
வன் தன் தகப்பனை அல்லது தாயைக் கன
ம்பண்ண வேண்டுவதில்லையென்று போ
தித்து இவ்விதமாய்ப் பராபரனுடைய க
ற்பனையை உங்கள் பாரம்பரை நியாயத்தி
னாலே அவமாக்கிவருகிறீர்கள். - ஆ! வஞ்ச 7
கரே, இந்தச் சனங்கள் தங்கள் வாயினாலே
என்னைச் சேர்ந்து தங்கள் உதடுகளினாலே
என்னைக் கனம்பண்ணியுந் தங்களிருதய
மோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கின்
றது. - அப்படி இவர்கள் மனிதர்களுடை 8
ய கற்பனைகளாகிய போதகங்களைப் போ
திக்கிறவர்களாயிருந்து எனக்கு வீணாய் ஆ
ராதனை செய்கிறார்களென்று, - ஏசாயா வெ 9
ன்பவர் உங்களைக் குறித்து நன்றாய்த் தீர்க்
கதரிசனமுரைத்தானென்று சொன்னார்.

Digitized by Google

10 பின்பு சனங்களைத் தம்மிடத்தில் வர
அழைத்து நீங்கள் கேட்டுச் சிந்தித்துக்
11 கொள்ளுங்கள்.— வாய்க்குள்ளே போகி
றபொருள் ஒருவனையும் அசுசிப்படுத்த
மாட்டாது வாயிலிருந்து புறப்படுகிற
பொருளே ஒருவனை அசுசிப்படுத்துகி
கின்றதென்று அவர்களுடனே சொன்
12 னார்.— அப்பொழுது அவருடைய சீஷர்
அவரிடத்தில் வந்து பரிசேயர் இந்தவச
னத்தைக் கேட்டு விசனப்பட்டார்களெ
ன்று அறிந்திருக்கிறீராவென்றார்கள்.—
13 அதற்கவர், என் பரமபிதா நடாத நாற்று
14 க்கள் யாவும் பிடுங்கப்படும்.— அவர்களை
விட்டுவிடுங்கள். குருடருக்கு வழிகாட்டு
கிற குருடராயிருக்கிறார்கள். ஒருகுருட
ன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டி
னால் இருவருங் குழியிலே விழுவார்களெ
15 ன்றார் —அப்பொழுது பேதுரு அவரை
நோக்கி, இந்த உவமையை எங்களுக்கு
வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டா
16 ன்.— அதற்கு இயேசுவானவர், நீங்களும்
17 இன்னம் புத்தியில்லாதவர்களா?— வாய்க்
குள்ளே போகிறவைகள் யாவும் வயிற்றி

Digitized by Google

ற் பிரவேசித்துப் பின்பு ஆசனவழியாய்க்
கழிந்து போகின்றனவென்பதை நீங்கள்
இன்னஞ் சிந்தித்துக்கொள்ளவில்லையா?-
வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருத 18
யத்திலிருந்து புறப்பட்டு வருகின்றன.
அவைகளேமனிதனை அசுசிப்படுத்துகின்
றன —எவையெனிற் பொல்லாத சிந்த 19
னைகள், கொலைகள், விபசாரங்கள், வேசி
த்தனங்கள், களவுகள், பொய்ச்சாட்சிக
கள், தூஷணங்களாகிய இவைகள் இருதய 20
த்திலிருந்து புறப்பட்டு வருகின்றன.-இ
வைகள் மனிதனை அசுசிப்படுத்துகிறவை
கள்கை. கழுவாமற் சாப்பிடுகிறது மனித
னை அசுசிப்படுத்தாதென்றார்.

பின்பு இயேசுவானவர் அவ்விடம் விட் ௨௧
டுத் தீருசீதோன் பட்டினங்களின் திசைக
ளுக்குப் போனார்.—அப்பொழுது அவ் ௨௨
விடங்களில் எல்லைகளிலிருந்து வந்த கா
னான் தேசத்தாளாகிய ஒருஸ்திரி அவரை
நோக்கி, ஆண்டவரே, தாவீதின் குமார
னே, என் மகள் பசாசினாலே கடினமாய்
வாதிக்கப்படுகிறாள் எனக்கு இரங்கவேண்
டுமென்று சொல்லிக்கூப்பிட்டாள்.-அவ ௨௩

Digitized by Google

ரோ அவளுக்கு மாறுத்தரமாக அவர் ஒ
ரு வார்த்தையுஞ் சொல்லவில்லை. அப்
பொழுது அவருடைய சீஷர் வந்து அவ
ரை நோக்கி, இவள் நம்மைப்பின்றொடர்
ந்து கூப்பிடுகிறாளே, ஆதலால் இவளை அ
னுப்பிவிடுமென்று வேண்டிக்கொண்டா
24 ர்கள்.— அதற்கு அவர், காணாமற்போன
ஆடுகளாகிய இஸ்ரவேல் குடும்பத்தாரிட
த்துக்கேயன்றி, (மற்றவர்களிடத்தில்)நா
ன் அனுப்பப்படவில்லையேயென்றார்.-
25 அவளோ வந்து ஆண்டவரே, எனக்குச் ச
காயஞ்செய்ய வேண்டுமென்று அவரை
26 நமஸ்காரம்பண்ணினாள். - அவர் சொன்ன
து, பிள்ளைகளுடைய அப்பத்தையெடுத்
து, நாய்களுக்குப் போடுகிறது நல்லத
27 ல்லவேயென்றார்.— அதற்கவள் ஆண்ட
வரே, மெய்தான், ஆகிலும் நாய்கள் தங்
கள் எசமான்கள் போசனஞ்செய்கிற பல
கைகளிலிருந்து விழுகிற உச்சிட்டங்களை
28 த் தின்னுமேயென்றாள்.— அப்பொழு
து இயேசுவானவர் அவளை நோக்கி, ஆ!
ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிதாயிருக்
கின்றது. நீ விரும்பினபடி உனக்காகக் க

Digitized by Google

டவனென்றார். அந்நேரமே அவளுடைய
மகள் சுகமடைந்தாள்.—பின்பு இயேசு 29
வானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுக்
கலிலேயாக் கடலினருகேவந்து,ஒரு மலை
யிலேறி அங்கே உளுக்கார்ந்தார்.—அப் 30
பொழுது சப்பாணிகள், குருடர், ஊ
மையர், முடவர்கள், முதலான அநேகம்
பேரைக் கூட்டிக்கொண்டுவந்த மிகுந்த
சனங்கள் இயேசுவினிடத்தில் வந்து அவ
ர்களை அவருடைய பாதத்தினிடத்தில் வை
த்தார்கள். அவர்களை அவர் குணமாக்கி
னார்.—ஊமையர் பேசுகிறதையும் முட 31
வர்கள் சொஸ்தம் அடைகிறதையுஞ் சப்
பாணிகள் நடக்கிறதையுங் குருடர் காணு
கிறதையுஞ் சனங்கள் கண்டு ஆச்சரியப்
பட்டு இஸ்ரவேலின் தேவனைத் துதித்தா
ர்கள்.

பினபு இயேசுவானவர் தமது சீஷரை 32
த் தம்மிடத்தில் அழைத்து சனங்களைக்
குறித்து மன உருக்கமாயிருக்கிறேன். எ
ன்னத்தினாலென்றால், இவர்கள் மூன்
றுநாளென்னிடத்திலே தங்கிப் போசன
மில்லாதிருக்கிறார்கள். இவர்கள் வழியி

Digitized by Google

லே சோர்ந்துபோகும்படிக்குப் பட்டி
னியாய் இவர்களை அனுப்பிவிடமாட்டே
33 னென்றார்.—அதற்கு அவருடைய சீஷர்
கள் இவ்வளவு சனங்களுக்குத் திருத்தியு
ண்டாகும்படிக்கு வேண்டிய அப்பங்க
ள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி
34 அகப்படுமென்றார்கள்.- இயேசுவானவ
ர் உங்களிடத்தில் எவ்வளவு அப்பங்களு
ண்டென்றார்.ஏழு அப்பங்களுஞ் சிலசிறு
மீன்களுமுண்டென்று சீஷர் சொல்ல,—
35 அவர் சனங்களைத் தரையிலே பந்தியிருக்
36 கச்சொல்லி,-பின்பு அந்த ஏழு அப்பங்க
ளையும்,மீன்களையுமெடுத்துத் தோத்திர
ஞ்செய்து அவைகளைப்பிட்டுத் தம்முடை
ய சீஷர்களுக்குக் கொடுத்தார். சீஷர் அ
37 வைகளைச் சனங்களுக்குக்கொடுக்க,- எல்
லாருஞ்சாப்பிட்டுத் திருத்தியடைந்தார்க
ள்.பின்பு சேஷமானவைகள் ஏழுகூடைநி
றையச் சேகரித்துக்கொள்ளப்பட்டன.-
38 பெண்களும் பிள்ளைகளுந்தவிரப்போசன
ம்பண்ணின புருஷர் நாலாயிரம்பேர்.-
39 அவர் சனங்களை அனுப்பி விட்டுப் படவி
லேறிமகுதலவூரின் திசைகளிற்சேர்ந்தார்.

Digitized by Google

௰௬. அதிகாரம்.

[(௧) பரிசேயர் ஓரடையாளத்தைக் கேட்டது. (௬) பரிசேயர் சதுசேயருடைய புளித்தமாவுக்கு விலகவேண்டுமென்பது. (௰௩) சனங்கள் கிறிஸ்துவைக்குறித்து யோசித்தது. (௰௬) பேதுரு அவரைக்குறித்து அறிக்கைபண்ணினது (௨௧) இயேசுவானவர் தமது மரணத்தை முன்னறிவித்தது. (௨௨) பேதுரு அவரைக்கடிந்தது (௨௪) தம்மைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் பாடுபடும்படி புத்திசொன்னது.

அப்பொழுது பரிசேயரும் சதுசேய 1
ரும் அவரைச் சோதிக்கும்படிக்கு அவ
ரிடத்தில் வந்து வானத்திலிருந்து ஓரடை
யாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவே
ண்டுமென்று கேட்டார்கள்.—அவர்களுக் 2
கு அவர் சொன்னது, அஸ்தமனமாகிற
பொழுது, செவ்வானந் தோன்றியபடியாச
ல் வெளிவாங்குமென்கிறீர்கள்.- அல்லாம 3
லும் உதயமாகிறபொழுது, வானஞ் சிவ
ப்பாயும் மந்தாரமாயும் இருக்கிறபடியா
ல் இன்றைக்குப் பெருங்காற்றும் மழை
யும் உண்டாகுமென்கிறீர்கள். வஞ்சக
ரே, வானத்தின் தோற்றத்தை வகையறு
க்க அறிந்திருக்கிறீர்கள். காலங்களின் அ

Digitized by Google

டையாளங்களைக் குறித்து வகைவறுக்க
4 மாட்டீர்களா — சோர மார்க்கமுள்ள
பொல்லாத சந்ததியாரானவர்கள் அடை
யாளங் கேட்கிறார்கள். யோனு தீர்க்கதரி
சியின் அடையாளமேயன்றி வேறொரு
அடையாளமும் இவர்களுக்குக் கொடுக்
கப் படுவதில்லையென்று சொல்லி அவர்
5 களை விட்டுப்போனார். —அவருடைய சீ
ஷர்கள் அக்கரைக்குப் போனபொழு
து, அவர்கள் அப்பங்களைக் கூடக்கொ
ண்டு போக மறந்திருந்தார்கள்.
6 அப்பொழுது இயேசுவானவர் அவர்
களை நோக்கி, நீங்கள் பரிசெயர் சதுசெ
யரென்பவர்களுடைய புளிப்புள்ள மா
வுக்குவிலகி மிகவும் எச்சரிக்கையாயிருங்
7 களென்றார். —அவர்கள் நாம் அப்பங்க
ளைக்கூடக் கொண்டுவாராததைக்குறித்து,
(இப்படிச் சொல்லுகிறாரென்று) தங்க
ளுக்குள்ளே யோசனை பண்ணிக்கொண்
8 டார்கள்.—இயேசுவானவர் அதை அறிந்
து, அவர்களை நோக்கி, அற்பவிசுவாசிக
ளே, நீங்கள் அப்பங்களைக் கூடக்கொண்
டு வாராததைக்குறித்து, (நான் இப்படிச்

Digitized by Google

சொல்லுதாக) உங்களுக்குள்ளே யோசி
னைபண்ணுகிறதென்ன. —இன்னம் உங் 9
களுக்குப் புத்தியில்லையோ, ஐயாயிரம்
பேருக்குள்ளே (கொடுத்த) ஐந்து அப்ப
ங்களையும் நீங்கள் அவ்வளவு கூடைநிறை
யச் சேகரித்ததண்டங்களையும், -நாலா 10
யிரம் பேருக்குள்ளே (கொடுத்த) ஏழு
அப்பங்களையும் நீங்கள் அவ்வளவு கூடை
நிறைய எடுத்ததுண்டங்களையும் நினைத்
துக் கொள்ளுகிறதில்லையா. —பரிசேயர் 11
சதுசேயரென்பவர்களுடைய புளிப்புள்
ள மாவுக்கு விலகி எச்சரிக்கையாய் இரு
க்க வேண்டுமென்று நான் அப்பத்தைக்
குறித்துச் சொல்லவில்லை யென்று நீங்க
ள் சிந்தித்துக்கொள்ளாமலிருக்கிற தெ
ப்படியென்றார். —அப்பொழுது அவர் 12
கள் பரிசேயர் சதுசேயரென்பவர்களு
டைய அப்பங்களின் புளிப்புள்ள மாவுக்
கல்ல அவர்களுடைய உபதேசத்துக்கே
விலகி எச்சரிக்கையாய் இருக்கச் சொன்
னாரென்று அறிந்தார்கள்.

பின்பு இயேசுவானவர் பிலிப்புசேசா 13
ரியாவின் திசைகளில் வந்தபொழுது அ

Digitized by Google

வர் தம்முடைய சீஷர்களை நோக்கி, மனி
தனுடைய குமாரனாகிய என்னைச் சனங்
கள் ஆரென்று சொல்லுகிறார்களென்று
14 கேட்டார்.—அதற்கவர் சொன்னது சில
ர் உம்மை யோவானிஸ்நானனென்றுஞ்,
சிலர் எலியாவென்றும், சிலர் எரேமியா
அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவரென்று
15 ஞ் சொல்லுகிறார்களென்றார்.—அதற்கவ
ர் நீங்களென்னை ஆரென்று சொல்லுகி
16 நீர்களென்று கேட்டபொழுது,- அதற்
குச் சீமோன் பேதுருசொன்னது, நீர் சீ
வனுள்ள பாரபரனுடைய குமாரனாகிய கி
17 றிஸ்துவென்றான்.—அவனுடனே இயே
சுவானவர் சொன்னது, யோனாவின் கு
மாரனாகிய சீமோனே மாமிச இரத்தமல்
ல பரமண்டலங்களில் இருக்கிற என்பிதா
இதை உனக்கு வெளிப்படுத்தினார். ஆத
18 லால் நீ பாக்கியமுள்ளவன்.-மேலும் நீ
பேதுருவாயிருக்கிறாய் இந்தக் கல்மலை
யின்மேல் நான் என்னுடைய சபையைக்
கட்டுவேன், பாதாளத்தின் வாசல்களும்
அதைச் சயிப்பதில்லையென்று உனக்கு
19 ச் சொல்லுகிறேன்.—அல்லாமலும் பர

Digitized by Google

லோக ராச்சியத்தின் திறவுகோல்களை
உனக்குக் கொடுப்பேன் பூமியிலே நீ க
ட்டுவதேதோ அது பரலோகத்திலே க
ட்டப்பட்டிருக்கும். பூமியிலே நீ கட்ட
விழ்ப்பதேதோ அது பரலோகத்திலே க
ட்டவிழ்க்கப்பட்டிருக்குமென்று சொ
ல்லி,- பின்பு தாம் கிறிஸ்தென்று ஒருவருக் 20
குஞ் சொல்லாதபடிக்குத் தமது சீஷர்க
ளுக்குக் கட்டளையிட்டார்.

அது முதல் இயேசுவானவர் தாம் எரு 21
சலேமுக்குப்போய்ப் பெரியோர்களா
லும், பிரதான ஆசாரியராலும், வேதபா
ரகராலும் மிகுந்தபாடுபடவுங்கொலைசெ
ய்யப்படவும் மூன்றாநாளிலே எழுந்தி
ருக்கவும்வேண்டுமென்று தம்முடைய சீ
ஷருக்குக் காண்பிக்கத் தொடங்கினார்.—
அப்பொழுது பேதுரு அவரைத் தனி 22
யே அழைத்து ஆண்டவரே உம்மிடத்தி
ல் இரக்கமுண்டாவதாக, அப்படி உமக்
குவராதிருப்பதாகவென்று அவருடனே
கண்டிப்பாய்ச் சொன்னான்.- இயேசுவா 23
னவர் திரும்பிப் பேதுருவினிடத்தில் ஆ!
சாத்தானே நீ என்முன்னிராமற்போ, நீ

பராபரனுக்குப் பிரியமானவைகளைச் சி
ந்தியாமல் மனிதருக்குப் பிரியமானவை
களைச் சிந்திக்கிறபடியினாலே எனக்குத்
துன்பமாயிருக்கிறாயென்றுசொல்லி,
24 பின்பு தம்முடைய சீஷர்களைநோக்கி,
என்னைப் பின்பற்றி நடக்க ஒருவன் விரு
ம்பினால் தன்னைத்தான் வெறுத்துத் தன்
சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்
25 பின்பற்றக்கடவன்.— என்னத்தினாலென்
றால் தன் சீவனை இரட்சிக்கவிரும்புகிறவ
ன் அதை இழந்துபோவான். என்னிமி
த்தந் தன் சீவனையிழந்துபோகிறவன் அ
26 தைக்கண்டடைவான்.—அல்லாமலும் ம
னிதனானவன்உலகம்முழுமையுஞ்சம்பா
தித்துக்கொண்டாலுந் தன் சீவனை நஷ்
டப்படுத்தினால் அவனுக்கு என்னலாபமு
ண்டாயிருக்கும்? அன்றியும் ஒரு மனித
ன் தன் சீவனை மீட்கிறதற்கு என்னத்தை
27 க்கொடுப்பான்?—அல்லாமலும் மனிதனு
டைய குமாரன் தம்து பிதாவின் மகிமை
யைப்பொருந்தித் தம்முடைய தூதரோ
டுங் கூட வருவான். அப்பொழுது அவ
னவனுடைய செய்கையின்படியே அ

Digitized by Google

வனவனுக்குப் பலன் அளிப்பான்.—இங் 28
கே நிற்கிறவர்களிற் சிலர் மனிதனுடைய
குமாரன் தம்முடைய இராச்சியத்தில் வ
ருவதைக்காண்கிறதற்கு முன்னே மரண
த்தை அடைவதில்லையென்று மெய்யாய்
உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௰எ. அதிகாரம்.

[(க.) இயேசுவானவர் மறுரூபங்கொண்டது. (௰௪.) சந்திரரோகியைக் குணமாக்கினது. (௨௨,) தம்முடைய பாடுகளை முன்னறிவித்தது, (௨௪,) தீர்வையைச் செலுத்தினது.

ஆறுநாளுக்குப் பின்பு இயேசுவானவ 1
ர் தனித்திருக்கும்படி பேதுருவையும்,
யாக்கோபையும், அவனுடைய தம்பியா
கிய யோவானையுங் கூட்டிக்கொண்டு உ
யர்ந்த மலையின்மேற்போய்,—அங்கே அ 2
வர்களுக்குமுன்பாக மறுரூபமானார். அ
வருடைய முகஞ் சூரியனைப்போலப் பி
ரகாசித்தது, அவருடைய வஸ்திரங்கள்
ஒளியைப்போல வெண்மையாயின.—அ 3
ப்பொழுது மோசே எலியா என்பவர்க
ள் அவரோடே பேசிக்கொள்ளுகிறவர்க

Digitized by Google

ளாய் அவர்களுக்குக்காணப்பட்டார்கள்.
4 —அப்பொழுது பேதுரு இயேசுவை
நோக்கி ஆண்டவரே நாம் இங்கேயிருக்கி
றது நல்லது,உமக்குச்சித்தமானால் இங்
கே உமக்கும், மோசேயுக்கும், எலியாவு
க்கும் ஒரொரு குடிலாக மூன்று குடில்க
5 ளை உண்டாக்குவோமென்றான்.—அப்ப
டி அவன் பேசுகையில் நடந்ததென்ன
வெனில் ஒளியுள்ளமேகம் அவர்கள்மே
ல் நிழலிட்டதுமல்லாமல், இவர் எனக்
கு அன்பாயிருக்கிற என்னுடைய குமார
ன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்
குச் செவிகொடுங்களென்று அந்த மே
6 கத்திலிருந்து சத்தமுண்டாயிற்று —சீஷ
ர் அதைக்கேட்டு முகங்குப்புற விழுந்து
7 மிகவும் பயந்தார்கள்.—அப்பொழுது இ
யேசுவானவர் வந்து அவர்களைத் தொட்
டு எழுந்திருங்கள் பயப்படாதிருங்களெ
8 ன்று சொன்னார்,—அவர்கள் தங்கள் க
ண்களை உயர்த்துகிறபொழுது இயேசு
வையேயன்றி மற்றொருவரையுங் காணவி
9 ல்லை,—பின்பு அவர்கள் மலையிலிருந்திற
ங்குகிறபொழுது இயேசுவானவர் அவர்

Digitized by Google

களை நோக்கி மனிதனுடைய குமாரன் ம
ரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறவரைக்
கும் நீங்கள் இந்தத் தரிசனையை ஒருவரு
க்குஞ் சொல்லவேண்டாமென்று கட்ட
ளையிட்டார்.—அப்பொழுது அவருடை 10
ய சீஷர்கள் அவரைநோக்கி அப்படியா
னால் முதலாவது எலியா வரவேண்டுமெ
ன்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகி
றார்களென்றார்கள்.—அதற்கு இயேசுவா 11
னவர் சொன்னது முன்பு எலியா வந்து
எல்லாவற்றையுஞ் சீர்ப்படுத்த வேண்டு
மென்பது மெய்தான்.—அல்லாமலும் 12
எலியாவந்தாயிற்றென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். அவனை அவர்கள் அங்
கிகரித்துக்கொள்ளாமல் அவனுக்குத் த
ங்கள் இஷ்டப்படிசெய்தார்கள். அப்ப
டி மனிதனுடைய குமாரனும் அவர்களா
ற்பாடுபடுவானென்றார்.—அப்பொழுது 13
அவர் யோவானிஸ்நானனைக் குறித்துத்
தங்களுடனே பேசினாரென்று சீஷர் அ
றிந்தார்கள்.

பின்பு அவர்கள் சனக்கூட்டத்தினிடத் 14
தில் சேர்ந்தபொழுது, ஒரு மனிதன் அ

Digitized by Google

வனிடத்தில் வந்து அவர் முன்பாக முழ
15 ங்காற்படியிட்டு,—ஆண்டவரே, என் ம
கனுக்கிரங்கும். அவன் சந்திரரோகியாயி
க் கொடிய வேதனைப்படுகிறான். எப்ப
டியென்றால் அடிக்கடி தீயிலேயும் அடி
16 க்கடி சலத்திலேயும் விழுகிறான்.—அவ
னை உம்முடைய சீஷர்களிடத்திற் கொ
ண்டுவந்தேன், அவர்களுக்கு அவனை கு
17 ணமாக்கத் திராணியில்லையென்றான்.—அ
தற்கு இயேசுவானவர் சொன்னது ஆ!
விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியா
ரே, எதுவரைக்கும் உங்களோடிருப்பே
ன். எதுவரைக்கும் உங்களிற் பொறுமை
யாயிருப்பேன். அவனை என்னிடத்திற்
18 கொண்டுவாருங்கள் என்றார்.—அவனைக்
கொண்டுவந்தபொழுது இயேசுவானவர்
அவனிலுள்ள பசாசை அதட்டினார், உட
னே அது அவனை விட்டுப்போயிற்று.
அந்தப் பிள்ளை அந்நேரமே சுகமடைந்
19 தான்.—பின்பு சீஷர்கள் மாத்திரம் இயே
சுவினிடத்தில் வந்து நாங்கள் அதைத் து
ரத்தும்படி ஏன் எங்களுக்குத் திராணியி
20 ல்லையென்றார்கள்.—அதற்கு இயேசுவான

Digitized by Google

வர் உங்கள் அவிசுவாசத்தினாலே (திராணி
யில்லை.) மேலும் ஒரு கடுகுவிதை அவ்வ
ளவு விசுவாசம் மாத்திரம் உங்களுக்குண்
டானால் நீங்கள் இந்த மலையை நோக்கி
இவ்விடம் விட்டு அப்புறம்போவென்று
சொல்ல அது போம் அல்லாமலும் உங்
களாற் கூடாதகாரியமொன்றுமிருப்பதி
ல்லையென்று மெய்யாகவே உங்களுக்கு
ச் சொல்லுகிறேன்.— ஆகிலுஞ் செபத் ௨௧
தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி (வே
றுவிதமாய்) இந்தச் சாதியைத் துரத்தப்
படாதென்றார்.

அல்லாமலும் அவர்கள் கலிலேயா நா ௨௨
ட்டிலே சஞ்சரித்திருந்த காலத்திலே இ
யேசுவானவர் அவர்களை நோக்கி, மனித
னுடைய குமாரன் மனிதர்களுடைய கை
யில் ஒப்புக்கொடுக்கப்படுவான்.—அவர் 23
கள் அவனைக் கொலைசெய்வார்கள் பின்பு
மூன்றாநாளிலேஎழுந்திருப்பானென்றார்.
அவர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள்.

அவர்கள் கப்பர்நாகூமூரில் வந்தபொ 24
ழுது வரிப்பணத்தைச் சேர்க்கிறவர்கள்
பேதுருவினிடத்தில் வந்து உங்கள் போத

Digitized by Google

தகர் வரிப்பணத்தைக் கொடுக்கிறதில்லை
யாவென்றார்கள், கொடுக்கிறாரென்றான்.-
25 பின்பு அவன் வீட்டிலே வந்தபொழுது,
அவன் (பேசுகிறதற்கு) முன்னே இயே
சுவானவர் அவனை நோக்கி சீமோனே, பூ
மியின் இராசாக்கள் ஆர் கையிலே தீர்
வை அல்லது வரிவாங்குகிறார்கள். தங்கள்
பிள்ளைகள் கையிலோ அந்நியர்கையிலோ?
இது உனக்கு எப்படித் தோன்றுகின்ற
26 தென்றார்.-அந்நியர் கையில் வாங்குகிறார்
களென்று பேதுருசொன்னான். அதற்கு
இயேசுவானவர் அப்படியானாற் பிள்ளை
27 கள் செலுத்தவேண்டுவதில்லையே.—ஆ
னாலும் நாம் அவர்களுக்கு விசனம்வரா
ப்பண்ணாதபடிக்கு நீ கடலிடத்துப் போ
ய்த் தூண்டிலைப் போடு, முதலாவது எழு
ம்புகிற மீனை எடுத்து அதின் வாயைத் தி
றந்து பார். அதிலே ஒரு வெள்ளிக்கா
சைக் காண்பாய், அதை எடுத்துவந்து
எனக்காகவும் உனக்காகவும் அவர்களுக்
குக் கொடு என்றார்.

Digitized by Google

௰௮. அதிகாரம்.

[(௧.) சீஷர்கள்மனத்தாழ்மையுள்ளவர்களாயுங் கெடுதி செய்யாதவர்களாயுமிருக்கும்படி புத்தி சொன்னது. (௭) சிறியவர்களை அசட்டைபண்ணாமலிருக்கவேண்டுமென்பது. (௰௫) தப்பிதஞ்செய்தவர்களுக்குச் செய்ய வேண்டியது. (௨௧) ஒருவருக்கு ஒருவர் மன்னிக்கவேண்டியதைக் குறித்து உவமைசொன்னது.]

அக்காலத்திலே சீஷர்கள் இயேசுவினி 1
டத்துக்கு வந்து பரலோக இராச்சியத்
திலே எவன் பெரியவனாயிருப்பானென்
றார்கள்.—அப்பொழுது இயேசுவானவ 2
ர் ஒருபிள்ளையைத் தம்மிடத்தில் அழை
த்து அதை அவர்களுக்குள்ளே நிறுத்தி
ச்சொன்னதாவது,-நீங்கள் மனந்திரும்பி 3
ப் பிள்ளைகளைப்போலாகாவிட்டாற் பர
லோக இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்
டீர்களென்று மெய்யாக உங்களுக்குச்
சொல்லுகிறேன்.—ஆகையால் இந்தப்பி 4
ள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகி
றவனே பரலோக இராச்சியத்திற் பெரி
யவனாயிருப்பான் — அல்லாமலும் இப் 5
படிப்பட்ட ஒருபிள்ளையை என் நாமத்

Digitized by Google

திலே யேற்றுக்கொள்ளுகிறவன் என்
6 னை ஏற்றுக்கொள்ளுகிறான்.-என்மேல் வி
சுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரிலொரு
வன் குற்றஞ்செய்வதற்குக் காரணமான
வனெவனோ அவனுடைய கழுத்தில் எந்
திரக் கல்லைக்கட்டி அவனைச் சமுத்திரத்
துக்குள்ளே யமிழ்த்தினால் அவனுக்கு ந
லமாயிருக்கும்.
7 ஐயோ! கெடுத்தலின் நிமித்தம் உலகத்
துக்கு வேதனைவரும். கெடுத்தல் அவசிய
மாய் வரவேண்டும். ஆனாலும் ஐயோ!
கெடுத்தலைச் செய்கிறவனுக்கு வேதனை
8 வரும்.—ஆதலால் உன் கையாவது உன்
களே, பராபரனுக்குப் பயப்படுகிற ம
ற்றவர்களே, இந்த இரட்சிப்பையறிவிக்
கிற உபதேசம் உங்களுக்கே யனுப்பப்
7 பட்டிருக்கின்றது.-என்னவெனில், எரு
சலேமிற் குடியிருக்கிறவர்களும் அவர்க
ளுடைய தலைவரும் அவரையாவது ஒவ்
வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்க
தரிசிகளின் வாக்கியங்களையாவது அறியா
மல், அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்
ததினாலே அவைகளை நிறைவேற்றினார்
28 கள்.—மரணத்துக்கு ஏதுவான ஒன்றை
யும் (அவரிடத்திற்) காணாமலிருந்தும்,
அவர்கள் அவரைக் கொலை செய்யும்படி
க்குப் பிலாத்துவை வேண்டிக்கொண்டா
29 ர்கள்.—மேலும் அவரைக்குறித்து எழுதி
யிருக்கிற யாவையும் அவர் முடித்தபின்
பு, (சிலர்) அவரை மரத்திலிருந்திறக்கிக்
கல்லறையிலே வைத்தார்கள்.—பராபர

Digitized by Google

ளே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பி
31 னார்.—அன்றியும் அவர் தம்முடனேகூடக்
கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு வந்
தவர்களுக்கு அநேகநாள் தரிசனையானார்
அவர்களே ஜனங்களுக்குமுன்பாக அவரு
32 டைய சாட்சிகளாயிருக்கிறார்கள்.— நீர்
என்னுடைய குமாரன், இன்று நான் உம்
மைச் ஜெனிப்பித்தேனென்று இரண்டா
ஞ் சங்கீதத்திலே எழுதியிருக்கிறபடி,—
33 இயேசுவை எழுப்பினதினாலே, பராபரன்
(நமது) முன்னோர்களுக்குண்டான வாக்
குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளை
களாகிய நமக்கு நிறைவேற்றினாரென்று நா
ங்கள் உங்களுக்குச் சுவிசேஷமாய் அ
34 றிவிக்கிறோம்;—மேலும் அவர் மறுபடி
யும் மரியாதபடிக்கு, அவரை மரித்தோ
ரிலிருந் தெழுப்பச் சித்தமானபடியினா
லே, தாவீதின் உறுதியான தயவுகளை உங்
களுக்குக் கட்டளையிடுவேனென்று திரு
35 வுளம்பற்றினார்.—அன்றியும் உமதுடைய
பரிசுத்தவான் அழிவையடையும்படி செ
ய்யமாட்டீரென்று வேறொரு சங்கீதத்தி
36 லே சொல்லியிருக்கின்றது.—தாவீதோ

Digitized by Google

வென்றால், தனது காலத்திலே பராபரனு
டைய சித்தத்துக் கூழியஞ் செய்த பின்பு
நித்திரையடைந்து, தன்பிதாக்களிடத்தி
ற் சேர்க்கப்பட்டு அழிவையடைந்தான்.
37 —பராபரனாலே யெழுப்பப் பட்டவ
38 ரோ அழிவையடைந்ததில்லை.—ஆதலாற்
சகோதரர்களே, அவர்மூலமாய் உங்களுக்
குப் பாவமன்னிப்பு உண்டாகுமென்று
39 அறிவிக்கப் படுகின்றது.—அல்லாமலும்
மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே
நீங்கள் எதினின்று விடுதலையாக்கப்படக்
கூடாதிருந்தீர்களோ, அதினின்று விசுவா
சிக்கிறயாவனும் அவராலே விடுதலையாக்க
ப்படுகிறானென்று அறிந்து கொள்வீர்க
40 ளாக.—அன்றியுந் தீர்க்கதரிசிகளுடைய
புத்தகத்திலே, அசட்டைக்காரரே! பா
ருங்கள். உங்கள் நாட்களில் ஒரு கிரியை
செய்வேன், ஒருவன் அதை உங்களுக்கு
விவரித்துச்சொன்னாலும், நீங்கள் விசுவா
சியாமலிருப்பீர்கள், அது அப்படிப்பட்
41 ட கிரியை யாகவேயிருக்கும்.—ஆதலாற்
பிரமிப்படைந்து, அழிந்து போங்களெ
ன்று சொல்லியிருக்கிறதின்படி, உங்களு

Digitized by Google

க்குவராதபடிக்குச் சாவதானமாயிருப்பீ
42 ர்களாகவென்றான்.-பின்பு அவர்கள்புறப்
படுகையில் மறு ஓய்வுநாளிலே அந்தவச
னங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்
டுமென்று புறத்தேசத்தார் வேண்டிக்
43 கொண்டார்கள்.— மேலுஞ் ஆலயச் ச
பை கலைந்து போன பின்பு யூதர்களி
லும் யூதமார்க்கத்திற் பிரவேசித்துத்தே
வபத்தியாயிருந்த பேர்களிலும் அனே
கர் பவுலுவுக்கும் பருனபாவுக்கும் பின்
சென்றார்கள். அவர்களுடனே யவர்கள்
பேசிக்கொண்டு, பராபரனுடைய கிரு
பையினாலே நிலைகொண்டிருக்கும் படி
44 க்குப் புத்தி சொன்னார்கள்.—மறு ஓய்வு
நாளிலே கொஞ்சங் குறையப் பட்டினத்
தாரெல்லாரும் பராபரனுடைய வசனத்
தைக்கேட்கும்படிக்குக் கூடிவந்தார்கள்.
45 —யூதர்களோ அவ்வளவு சனங்களைக் கண்
டபொழுது பொறாமையினால் நிறைய
ப்பட்டுப் பவுலுசொன்னவைகளுக்கு வி
ரோதமாய்ப் பேசினார்கள். விரோதித்து
46 ந் தூஷணித்து மிருந்தார்கள்.- அப்பொ
ழுது பவுலுவும் பருனபாவுந் தயிரியங்

Digitized by Google

கொண்டு சொன்னது முதலாவது உங்க
ளுக்கே பராபரனுடைய வசனத்தைச்
சொல்ல வேண்டியதா யிருந்தது நீங்க
ளோ அதைத் தள்ளி உங்களை நித்திய சீவ
னுக்கு அபாத்திரரென்று தீர்த்துக்கொ
ள்ளுகிறபடியினாலே நாங்கள் புறத்தேச
47 த்தாரிடத்திற்குப்போகிறோம்.—நீர்பூமி
யின் எல்லை பரியந்தமும் இரட்சகராயிரு
க்கும்படிக்கு உம்மைப் புறத்தேசத்தா
ர்களுக்கு ஒளியென்றேற்படுத்தினேன். எ
ன்கிற தேவ வாக்கியத்தின்படி பராபரன்
எங்களுக்குக் கட்டளையிட்டருளினபடியி
னாலே அப்படிச் செய்கிறோ மென்றார்
48 கள்.—புறத்தேசத்தார்கள் அதைக்கேட்
டுச் சந்தோஷம் அடைந்து கர்த்தருடைய
வசனத்தைப் புகழ்ந்து நித்திய சீவனுக்கு
நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவ
49 ர்கள் விசுவாசித்தார்கள். —பின்பு கர்த்த
ருடைய வசனம் அத்தேசமெங்கும் பிர
50 பலமாயிற்று.—யூதர்களோவெனிற் பத்
தியுங் கனமும் பொருந்திய ஸ்திரிகளையும்
பட்டினத்தின் முதலாளிகளையும் எழுப்பி
ப் பவுலு பருனபா என்பவர்களைத் துன்

Digitized by Google

பப்படுத்தும்படி செய்து தங்கள் எல்லை
களிலிருந்து அவர்களைத் துரத்தினார்கள்.
51 —அப்பொழுது அவர்கள் தங்கள் கால்
களிற்பட்ட தூளை யவர்கள்மேற் சாட்சி
யாக உதறிப்போட்டு இக்கோனியா ப
ட்டினத்திற்கு வந்தார்கள். சீஷரானவர்க
ளோ சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவி
யினாலும் நிறையப்பட்டார்கள்.

---

௧௪. அதிகாரம்

1 இக்கோனியா பட்டினத்திலே அவர்
களிருவரும் யூதருடைய தேவாலயத்து
க்குப்போய்ப் பிரசங்கம்பண்ணினபொ
ழுது யூதர்களிலுங் கிரேக்கர்களிலுந் திர
2 ளான சனங்கள் விசுவாசித்தார்கள் —விசு
வாசியாத யூதரோவெனிற் சகோதரருக்கு
விரோதமாகப் புறத்தேசத்தாருடைய ம
னசையெழுப்பிப் பகையுண்டாக்கினார்க
3 ள் —அப்படியிருந்தும் அவர்கள் அங்
கே நெடுங்காலஞ் சஞ்சரித்துக் கர்த்தரை
க் குறித்துத் தயிரியமாய்ப போதகம் ப

Digitized by Google

ண்ணினார்கள் அவர் தம்முது கிருபையைக் காட்டிய வசனத்துக்குச் சாட்சியுண்டாக அதிசயங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளாற் செய்யப்படும்படி அனுக்கிரகித்தார்.

4 அந்தப் பட்டினத்தின் சனங்களோவெ
னிற் பிரிந்து சிலர் யூதரையுஞ் சிலர் அப்
5 போஸ்தலரையுஞ் சேர்ந்தார்கள்.—அப்
பொழுது அவர்களை நிந்தித்து அவர்கள்
மேற் கல்லெறியும் பொருட்டாகப் புறத்
தேசத்தாரும் யூதர்களும் அவர்களுடைய
தலைவருடனேயுங்கூடக்கலசம்பண்ணுகிற
6 தை அவர்கள் அறிந்து.-இலிக்கவோனியா
நாட்டிலுள்ள இலீஸ்திராவூருக்குந் தெரு
பையூருக்கும் அவைகளைச்சூழ்ந்தபுறத்து
7 க்கும் ஓடிப்போய்.—அங்கே சுவிசேஷத்
தை அறிவித்துக்கொண்டு வந்தார்கள்.—
8 இலீஸ்திராவூரிலே ஒருவன் தன் தாயின்
கருப்பமுதற் சப்பாணியாய் ஒருக்காலு
ம் நடவாமற் பெலனில்லாத கால்களோ
9 டே உளுக்கார்ந்திருந்து.—பவுலு பேசு
கிறதைக்கேட்டான். அவன்மேற் பவுலு
கண்ணூன்றி இரட்சிக்கப் படும்படிக்கா

ன விசுவாசம் அவனுக்குண்டென்று கண்
10 டு.—நீ உன்கால்களை ஊன்றிச் செம்மை
யாய் எழுந்து நில்லென்று மிகுந்த சத்
தத்தோடே சொன்னான். உடனே அவன்
11 குதித்தெழுந்து நடந்தான்.— பவுலுசெ
ய்ததைச் சனங்கள் கண்டு தேவர்கள்
மனித ரூபமெடுத்து நம்மிடத்திலிறங்கி
இருக்கிறார்களென்று இலிக்கவோனியாப்
பாஷையிலே சத்தமாய்க் கூப்பிட்டார்க
12 ள்.—மேலும் பருனபாவை இயூப்பித்த
ர் தேவனென்றும் பவுலுவோ பிரசங்கத்
தை நடத்தினவனானபடியினாலே அவனை
மெருக்கூரி தேவனென்றும் பேரிட்டா
13 ர்கள்.—அல்லாமலும் பட்டினத்துக்குப்
புறம்பேயிருந்த இயூப்பித்தருடைய பூ
சாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாச
லின் அருகேகொண்டுவந்து சனங்களோ
டே கூடப் பலியிடமனதாயிருந்தான்.—
14 அப்போஸ்தலராகிய பருனபாவும் பவு
லும் அதைக்கேள்விப்பட்டு (விசனத்தினா
லே) தங்கள் வஸ்திரத்களைக் கிழித்து
15 க்கொண்டு.—கூட்டத்துக்குள் ஓடி மனி
தர்களே ஏன் இப்படிச் செய்கிறீர்கள்.

Digitized by Google

நாங்களும் உங்களைப்போற் பாடுள்ளமனி
தராயிருந்து.—நீங்கள் இந்த வீணான தே
வர்களைவிட்டு வானத்தையும் பூமியையுஞ்
சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யா
வையு முண்டாக்கின சீவனுள்ள தேவனி
டத்துக்குத் திரும்பவேண்டுமென்று உங்
களுக்குச் சுவிசேஷமாய்ச்சொல்லுகிறோ
ம், சென்றகாலங்களில் அவர் எல்லாப் பு
றத்தேசத்தாரையுந் தங்கள் தங்கள் வழிக
7 ளிலே நடக்கவிட்டிருந்தும்,—அவர்களு
க்கு நன்மைசெய்துவந்து, வானத்திலிரு
ந்து மழைகளையுஞ் செழிப்புள்ளகாலங்க
ளையும் நமக்குக் கொடுத்து, ஆகாரத்தினா
லுஞ் சந்தோஷத்தினாலும் நம்முடைய
இருதயங்களை நிரப்பி இவ்விதமாய் அவர்
தம்மைக் குறித்துச் சாட்சிகொடாமலிரு
8 ந்ததில்லையென்று கூப்பிட்டார்கள்.—இ
ப்படி அவர்கள் சொல்லித் தங்களுக்குச்
சனங்கள் பலியிடாதபடிக்குப் பிரயாசத்
தோடே நிறுத்தினார்கள்.

19 பின்பு அந்தியோகியாவூரிலும் இக்கோ
னியூரிலுமிருந்து, யூதர்கள் அங்கேவந்
து, சனங்களுக்குப் போதனைசெய்து, ப

Digitized by Google

வுலுவின்மேற் கல்லெறிந்து, அவன்மரித்
தானென்று நினைத்து, அவனைப்பட்டின
20 த்துக்கு வெளியேயிழுத்தார்கள்.—அந்
கே சீஷர்கள் அவனைச்சூழ்ந்து கொள்ளு
கையில், அவனெழுந்து, ஊருக்குட்பிர
வேசித்து, மறுநாளிலே பருனபாவுட
21 னே தெருபையூருக்குப்போனான்.—அ
ந்தவூராருக்குச்சுவிசேஷத்தையறிவித்து
அநேகரைச் சீஷராக்கினபின்பு அவர்க
ள் இலீஸ்திராவூருக்கும் இக்கோனியூரு
க்கும் அந்தியோகியா வூருக்குந்திரும்பி,
22 —சீஷருடைய ஆத்துமாக்களை ஸ்திர
ப்படுத்தி விசுவாசத்திலே நிலைத்திருக்
கும்படிக்குப்புத்திசொல்லி நாம் அநே
க உபத்திரவங்களின்வழியாய்ப் பராப
னுடைய இராச்சியத்திற்பிரவேசிக்கவே
ண்டுமென்றுஞ் சொல்லிக்கொண்டார்க
23 ள்.—அன்றியுஞ் சபைகள்தோறும் அவ
ர்களுக்காக மூப்பரைத்தெரிந்தேற்படு
த்தி உபவாசித்து வேண்டுதல்பண்ணி
அவர்கள் விசுவாசித்துக் கொண்டிருந்
கத்தருக்கவர்களைஒப்புவித்தார்கள். பின்
பு அவர்கள் பிசீதியாநாட்டைக் கடந்து

Digitized by Google

போய்ப் பம்பீலியா நாட்டிலே வந்து
4 —பெருகேயூரிலே சுவிசேஷ வசனத்
5 தை அறிவித்து,—அததாலியாப்பட்டின
த்திற்குச் சென்று அங்கே கப்பலேறித்,
6 —தாங்கள் நிறைவேற்றின கிரியைக்கா
கப்பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவி
க்கப்பட்டுப் புறப்பட்டுவந்த அந்தியோ
கியாப் பட்டினத்துக்குப் போனார்கள்.
7 —அங்கே சேர்ந்தபொழுது அவர்கள்
சபையைக்கூடிவரப்பண்ணிப் பராபரன்
தங்களாற் செய்தவைகளையும் அவர்புற
த்தேசத்தார்களுக்கு விசுவாசத்தின் கத
வைத் திறந்தாரென்பதையும் அறிவித்து
ப்பின்பு அங்கே சீஷருடனேகூட அனே
ககாலஞ் சஞ்சரித்துக் கொண்டு வந்தார்
கள்.

௰௫. அதிகாரம்.

1 அக்காலத்திலே சிலர் யூதேயாவிலிரு
ந்து வந்து நீங்கள் மோசேயின் முறை
மையின்படியே விருத்தசேதனம் பெ

Digitized by Google

றறுக் கொள்ளாவிட்டால் இரட்சிக்கப்
பட மாட்டீர்களென்று சகோதரருக்கு
2 ப் போதகம் பண்ணினார்கள் —அதினா
லே கலகமும் அவர்களுக்கும் பவுலு,ப
ருனபா என்பவர்களுக்கும் மிகுந்ததரு
க்கமுமுண்டானபொழுது அந்தத்தருக்
கக்காரியத்தைக்குறித்துப் பவுலும் பரு
னபாவுந் தங்களில் வேறே சிலரும் எரு
சலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திற்
கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்
டுமென்று தீர்மானம்பண்ணினார்கள் —
3 அந்தப்படி அவர்கள் சபையாராலே வழி
விட்டு அனுப்பப்பட்ட பின்பு பெனீக்
கே சமாரியா நாடுகளின வழியாய்ப்போ
ய்ப்புறத்தேசத்தார் மனந்திரும்பினதை
அறிவித்துச் சகோதரரெல்லாருக்கும் மி
குந்த சந்தோஷித்தை யுண்டாக்கினார்கள்
4 —எருசலேமிலே அவர்கள் சேர்ந்து ச
பையினாலும் அப்போஸ்தலராலும் மூப்
பராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டபின்பு
பராபரன் தங்களாற் செயதவைகளை அ
5 றிவித்தார்கள் —அப்பொழுது பரிசே
யராகிய வகுப்பிலே விசுவாசிகளான சில

Digitized by Google

ரீ எழுந்து அவர்கள்விருத்த சேதனத்தை
ப்பெற்றுக்கொண்டு மோசேயின் பிரமா
ணத்தைக் கைக்கொள்ளும்படிக்கு உத்
தரவு அனுப்பவேண்டுமென்றார்கள்.—
6 பின்பு அப்போஸ்தலரும் மூப்பரும்
அந்தக் காரியத்தை ஆராய்ந்து பார்க்கு
7 ம்படிக்குக் கூடினார்கள்.-மிகுந்த தருக்க
முண்டானபொழுது பேதுரு எழுந்து
அவர்களுடனே சொன்னது சகோதரரே
நீங்கள் அறிந்திருக்கிற படி பராபரன்
அனேக நாட்களுக்கு முன்னே உங்களி
லொருவனாகிய என்னுடைய வாயினாலே
புறத்தேசத்தார்கள் சுவிசேஷத்தின் வார்
த்தையைக் கேட்டு விசுவாசிகளாகும்படி
8 (என்னைத்)தெரிந்தெடுத்தார்.—மேலும்
இருதயங்களை அறிந்திருக்கிற பராபரன்
நமக்குக் கொடுத்ததுபோல் அவர்களுக்
கும் பரிசுத்த ஆவியைக் கொடுத்து.—
9 (இவ்விதமாய்) அகர்களைக் குறித்துச்
சாட்சியிட்டு அவர்களிருதயங்களை விசுவா
சத்தினாலே சுத்தமாக்கி அவர் நமக்கும்
அவர்களுக்கும் ஒரு வித்தியாசமும் பண்
10 ணவில்லை.—அப்படியிருக்க நம்முடைய

Digitized by Google

பிதாக்களாலும் நம்மாலுஞ் சுமக்கக்கூடா
திருந்த நுகத்தடியைச் சீஷருடைய கழு
த்தின்மேற் பிணைக்கிறதினாலே நீங்கள்
11 பராபரனைச்சோதிக்கிறதென்ன? - அப்ப
டியல்லக் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து
வின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்
கப்படுகிறபிரகாரமாக நாம் அப்படியே
இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்
கிறோமேயென்றான்.
12 அதன்பின்பு கூடிவந்தயாவரும் அமை
ந்திருந்து, பருனபாவும் பவுலுந் தங்களா
லே பராபரன் புறத் தேசத்தார்களுக்கு
ள்ளே செய்த அதிசயங்களையும் அற்புதங்
களையும் விபரித்துச்சொல்லக்கேட்டார்க
13 ள்.—அவர்கள் பேசிமுடித்த பின்பு யாக்
கோபு சொன்னது சகோதரர்களே என
14 க்குச்செவி கொடுப்பீர்களாக.—பராபர
ன் தமது நாமத்துக்காகப்புறத்தேசத்தா
ர்களில் ஒரு சனக்கூட்டத்தை எடுத்துக்
கொள்ளும்படிக்கு முதலாவது அவர்களை
நோக்கிப்பார்த்ததைச் சீமோன் சொன்
15 னானே,—அதற்குத் தீர்க்கதரிசிகளுடை
16 ய வசனங்களும் ஒத்திருக்கின்றது.—மற்

Digitized by Google

றமனிதர்களும் என்னுடைய நாமத்தைப்
பெற அழைக்கப்படும் புறத்தேசத்தாரெ
ல்லாரும் பராபரனைத் தேடிக்கொள்ளும்
17 படிக்கு—நான் இதற்குப் பின்பு திரு
ம்பி வந்து, விழுந்த தாவீதின் கூடாரத்தை
மறுபடியும் எழுப்புவேன், அதிலே இடிந்
துபோன இடங்களைத் திரும்பக் கட்டி,
அதைத் திரும்பச் செம்மையாக நிறுத்து
வேன் என்று இவைகளெல்லாவற்றையுஞ்
செய்கிற பராபரன சொல்லுகிறார் என்று
18 எழுதியிருக்கிறதே.—அநாதிகாலமுதலா
ய்ப் பராபரனுடைய கிரியைகளெல்லாம்
19 அவருக்குத் தெரிந்திருக்கின்றன.--ஆகை
யாற் புறத்தேசத்தார்களிற் பராபரனிட
த்துக்கு மனந் திரும்புகிறவர்களைக் கல
20 க்கப் படுத்தாதபடிக்கு,—அசுசிப் படுத்
துகிற விக்கிரக போசனங்களுக்கும் வே
சித்தனத்திற்கும் நெருக்குண்டு செத்த
வைகளுக்கும் இரத்தத்துக்கும் விலகும்
படியே அவர்களுக்கு எழுத வேண்டுமெ
21 ன்றெண்ணுகிறேன்.—பூர்வகாலம் முதற்
கொண்டு ஆலயங்களில் ஒய்வுநாடோறு
ம் மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்ப

Digitized by Google

ட்டு வருகிறபடியாற் பட்டினந்தோறும் அவைகளைப் பிரசித்தம் பண்ணுகிறவர்களுமுண்டேயென்றான்.

22 அப்பொழுது அப்போஸ்தலரும் மூப்பருஞ் சபையாரெல்லாருந் தங்களிற் சகோதரருக்குள்ளே கனம் பொருந்திய பருசபா என்னப்பட்ட யூதாவையுஞ் சீலாவையுந் தெரிந்துகொண்டு, அவர்களைப் பவுலுடனேயும் பருனபாவுடனே யுங் கூட அந்தியோகியாப் பட்டினத்துக்கு அனுப்பவேண்டுமென்று யோசித்

23 து எழுதின நிருபமாவது,—அந்தியோகியாப் பட்டினத்திலுஞ் சீரியாநாட்டில் மற்றவிடங்களிலுங் கிலிக்கியா நாட்டிலுமிருக்கிற புறத்தேசத்தார்களிலிருந்துண்டான சகோதரர்களுக்கு அப்போஸ்தலரும் மூப்பரும் (மற்றச்) சகோதரருமாகிய நாங்கள் சவுக்கியமுண்டாகும்படி

24 வாழ்த்துகிறோம்.—எங்களாற் கட்டளை பெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனம் அடையவேண்டுமென்றும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றுஞ்

Digitized by Google

சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளி
னாலே யுங்களைக் கலக்கப்படுத்தி உங்கள்
ஆத்துமாக்களைத் தள்ளாடப் பண்ணி
யிருக்கிறார்களென்று நாங்கள் கேள்விப்
25 பட்டபடியினாலே,—நாங்கள் தெரிந்து
கொண்ட சில மனிதரை நம்முடைய க
ர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்
துக்காகத் தங்கள் பிராணனையும்விட எத்
26 தனமாயிருந்தவர்களுமாய்,—எங்களுக்கு
ப் பிரியமானவர்களுமாயிருக்கிற பருன
பாவோடும் பவுலோடுங் கூட உங்களிடத்
துக்கு அனுப்பவேண்டுமென்று ஒருமன
ப்பட்டு யோசனை பண்ணிக்கொண்டு,-
27 அந்தப்படியே யூதாவையுஞ் சீலாவையும்
அனுப்புகிறோம். அவர்களும் இவைகளை
வாக்கினாலேயுங்களுக்கு அறிவிப்பார்கள் -
28 எவையெனில், விக்கிரகங்களுக்குப் படை
த்தவைகளுக்கும் இரத்தத்திற்கும் நெரு
க்குண்டு செத்ததற்கும் வேசைத்தனத்தி
ற்கும் நீங்கள் விலகியிருக்கவேண்டும். இ
து வேயல்லாமல் வேறதிகமான பாரமொ
ன்றும் உங்கள்மேற் போடாமலிருக்கும்
29 படிக்குப்,—பரிசுத்த ஆவியும் நாங்களு

Digitized by Google

ஞ் சித்தமாயிருக்கிறோம். மேற்சொல்லி
யவைகளினின்று நீங்களுங்களைக் காத்து
க்கொண்டால், நன்றுசெய்வீர்கள்; சுக
மாயிருப்பீர்களாகவென்றெழுதி, அவர்
கள் கையிற் கொடுத்தனுப்பினார்கள்.
30 அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்தி
யோகியாப்பட்டினத்துக்கு வந்து, சபை
யைக் கூட்டி வரச்செய்து, அந்த நிருபத்
31 தைக் கொடுத்தார்கள்,—அதை அவர்கள்
வாசித்தபின்பு, அதில் அடங்கிய ஆறுதலா
ன வசனங்களைக் குறித்துச் சந்தோஷப்
32 பட்டார்கள்.—பின்பு யூதாவுஞ் சீலாவுந்,
தாங்களுந் தீர்க்கதரிசிகளானபடியினாலே
அனேக வசனங்களினாலே சகோதரருக்கு
ப் புத்தி சொல்லி, அவர்களை ஸ்திரப்படு
33 த்திச்,—சிலகாலம் அங்கேயிருந்து, பின்பு
சகோதரராற் சமாதானத்துடனே அப்
போஸ்தலரிடத்துக்கு அனுப்பிவிடப்பட்
34 டார்கள்.—சீலாவோவெனிற் பின்னும்
அங்கே தங்கினால் நலமாயிருக்குமென்
35 றெண்ணியிருந்தான்.—அன்றியும் பவுலு
வும் பருனபாவும் அந்தியோகியாவூரிலே
சஞ்சரித்து, வேறு அனேகரோடுங்கூடக்

Digitized by Google

கருத்தருடைய வசனத்தை உபதேசித்து
ச், சுவிசேஷமாய்ப் பிரசங்கித்துக்கொ
36 ண்டு வந்தார்கள்.—சிலநாளுக்குப் பின்பு,
பவுலு பருனபாவைநோக்கிக், கருத்தரு
டைய வசனத்தை நாம் அறிவித்திருந்த
சகல பட்டினங்களிலு முள்ள சகோதரர்
சுகமாயிருக்கிறுர்களோவென்று, அதைப்
பார்க்கும்படிக்குத் திரும்பிப் பிரயாண
37 மாய்ப் போவோம் வாவென்றுன்.—அப்
பொழுது பருனபாவானவன் மாற்குஎன்
றழைக்கப்பட்ட யோவானைக் கூட அழை
த்துக்கொள்ளும்படி யோசனை சொன்னு
38 ன்.—பவுலோவென்றுற், பம்பிலியாநாட்
டிலே தங்களுடனே கூடக் கிரியைக்கு
வராமல், தங்களை விட்டுப் பிரிந்துபோ
ன அவனை அழைத்துக்கொள்ளத் தகா
39 தென்று சொன்னுன்.— அப்பொழுது
கோபமுண்டானதினுலே, அவர்கள் ஒரு
வரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள்.
பருனபாவானவன் மாற்குவைக் கூட்டிக்
கொண்டு, கப்பலேறிச் சீப்புருதீவுக்குப்
40 போனுன்.—பவுலானவன் சீலாவைத் தெ
ரிந்துகொண்டு, சகோதரராலே கருத்த

Digitized by Google

ஞ் சுத்தமாயிருக்கிறோம். மேற் சொல்லி
யவைகளினின்று நீங்களுங்களைக் காத்து
க்கொண்டால், நன்றுசெய்வீர்கள்; சுக
மாயிருப்பீர்களாகவென்றெழுதி, அவ
கள் கையிற் கொடுத்தனுப்பினார்கள்.
30 அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்தி
யோகியாப் பட்டினத்துக்கு வந்து, சபை
யைக் கூடி வரச்செய்து, அந்த நிருபத்
31 தைக் கொடுத்தார்கள்,—அதை அவர்கள்
வாசித்தபின்பு, அதில் அடங்கிய ஆறுதலா
ன வசனங்களைக் குறித்துச் சந்தோஷப்
32 பட்டார்கள்.—பின்பு யூதாவுஞ் சீலாவுந்,
தாங்களுந் தீர்க்கதரிசிகளானபடியினாலே
அனேக வசனங்களினாலே சகோதரருக்கு
ப் புத்தி சொல்லி, அவர்களை ஸ்திரப்படு
33 த்திச்,—சிலகாலம் அங்கேயிருந்து, பின்பு
சகோதரராற் சமாதானத்துடனே அப்
போஸ்தலரிடத்துக்கு அனுப்பிவிடப்பட்
34 டார்கள்.—சீலாவோவெனிற் பின்னும்
அங்கே தங்கினால் நலமாயிருக்குமென்
35 றெண்ணியிருந்தான்.—அன்றியும் பவுலு
வும் பருனபாவும் அந்தியோகியாவூரிலே
சஞ்சரித்து, வேறு அனேகரோடுங்கூடச்

Digitized by Google

கருத்தருடைய வசனத்தை உபதேசித்து
ச், சுவிசேஷமாய்ப் பிரசங்கித்துக்கொ
36 ண்டு வந்தார்கள்.—சிலநாளுக்குப் பின்பு,
பவுலு பருனபாவைநோக்கிக், கருத்தரு
டைய வசனத்தை நாம் அறிவித்திருந்த
சகல பட்டினங்களிலு முள்ள சகோதரர்
சுகமாயிருக்கிறார்களோவென்று, அதைப்
பார்க்கும்படிக்குத் திரும்பிப் பிரயாண
37 மாய்ப் போவோம் வாவென்றான்.—அப்
பொழுது பருனபாவானவன் மாற்குஎன்
றழைக்கப்பட்ட யோவானைக் கூட அழை
த்துக்கொள்ளும்படி யோசனை சொன்னா
38 ன்.—பவுலோவென்றால், பம்பிலியா நாட்
டிலே தங்களுடனே கூடக் கிரியைக்கு
வராமல், தங்களை விட்டுப் பிரிந்துபோ
ன அவனை அழைத்துக்கொள்ளத் தகா
39 தென்று சொன்னான்.— அப்பொழுது
கோபமுண்டானதினாலே, அவர்கள் ஒரு
வரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள்.
பருனபாவானவன் மாற்குவைக் கூட்டிக்
கொண்டு, கப்பலேறிச் சீப்புருதீவுக்குப்
40 போனான்.—பவுலானவன் சீலாவைத் தெ
ரிந்துகொண்டு, சகோதரராலே கருத்த

Digitized by Google

ருடைய கிருபைக்கு ஒப்புவிக்கப் பட்டு
41 ப்——புறப்பட்டுச் சீரியா நாட்டிலேயுங்
கிலீக்கியா நாட்டிலேயுந் திரிந்து, சபைக
ளை ஸ்திரப்படுத்தினான்.

௰௬. அதிகாரம்.

1 பின்பு அவன் தெருபேயூருக்கும் இலி
ஸ்திராவூருக்கும் வந்தான். அங்கே தீமோ
த்தேயு என்னப்பட்ட சீஷனிருந்தான்.
அவனுடைய தாய் விசுவாசமுள்ள ஒரு
யூத ஸ்திரியானவள் அவனுடைய தகப்ப
2 னோ கிரேக்கனானவன்.——மேலும் அவன்
இலிஸ்திராவிலும் இக்கோனியாவிலுமிரு
க்கிற சகோதரராலே நற்சாட்சி பெற்ற
3 வன்.——அவனைப் பவுலு தன்னுடனே கூ
டப் புறப்பட வேண்டுமென்று விரும்பி
அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று
அவ்விடங்களிலிருக்கிற யூதர்களெல்லாரு
ம் அறிந்தபடியால் அவனுக்கு விருத்த
4 சேதனம்பண்ணினான்.-பின்பு அவர்கள் ப
ட்டினங்களிலே திரிந்து நடக்கையில் எரு

Digitized by Google

சலேமிலுள்ள அப்போஸ்தலராலும் மூப்
பராலுந் தீர்மானம் பண்ணப்பட்ட சட்
டங்களைக் காத்துக்கொள்ளும் படிக்குச்,
5 சனங்களுக்கு ஒப்புவித்தார்கள்.—அதினா
லே சபைகள் விசுவாசத்திலே ஸ்திரப்ப
6 ட்டு, நாடோறும் பெருகினார்கள்.—பின்
பு அவர்கள் பிரிகியாநாட்டிலேயுங் கலா
த்தியா நாட்டிலேயுந் திரிந்துகொண்டு
வருகிறபொழுது, ஆசியாதேசத்திலே அ
வர்கள் சுவிசேஷ வசனத்தைச் சொல்
லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடை
7 பண்ணப்பட்டுப்.—பின்பு மீசியாநாட்
டுக்கு வந்து, பித்தினியநாட்டுக்குப் போ
கப் பிரயத்தனம் பண்ணினார்கள். அதற்
கும் இயேசுவினுடைய ஆவி தடைபண்
8 ணினார்.—அப்பொழுது அவர்கள் மீசியா
நாட்டைக் கடந்து, துரோவஸ் பட்டி
9 னத்திற்குப்போனார்கள்.—அங்கே இரா
த்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனை யுண்
டாயிற்று. என்னவெனில், மக்கேதோனி
யா தேசத்தானொருவன் நின்று, நீ மக்
கேதோனியாவில் வந்து, எங்களுக்கு உ
தவிசெய்வாயாகவென்று அவனை வேண்

Digitized by Google

10 டிக் கொண்டதாக இருந்தது.— அந்தத்
தரிசனையை அவன் கண்டபொழுது, அவ
ர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்
படிக்குக் கருத்தர் எங்களை அழைத்தாரெ
ன்று நாங்கள் நிச்சயமாயறிந்து, உடனே
மக்கெதோனியா தேசத்துக்குப் புறப்ப
ட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணிக்.—
11 கப்பலேறித், துரோவஸ் பட்டினத்தை
விட்டு, நேராய்ச் சமொத்திராக்கே தீவுக்
கும், மறுநாளிலே நேயாப்போலி பட்
12 டினத்துக்கும் வந்து.— அங்கேயிருந்து
மக்கெதோனிய தேசத்தின் தலையானதூ
மாய் உரோமர் குடியேறினதுமாயிருக்
கிற பிலிப்பிபட்டினத்திற் சேர்ந்து, சில
13 நாள் அதிலே சஞ்சரித்தோம்.— பட்டின
த்துக்கு வெளியே ஆற்றினருகே வழக்க
மாய் வேண்டுதல்பண்ணுதற்கான இடத்
திற்கு ஓய்வுநாளில் நாங்கள் போய், அங்
கே உளுக்கார்ந்து, கூடிவந்திருந்த ஸ்திரீ
14 களுடனே, பேசிக்கொண்டோம்.—ஒரு
ஸ்திரீ தியத்திராவூராளுமாய் இரத்தாம்ப
ரம் விற்கிறவளுமாய்த் தேவபத்தியுள்ள
வளுமாய் லீதியாளென்று பேர்கொண்

Digitized by Google

டவளுமாயிருந்தாள். அவள் பவுலினாற்
சொல்லப்பட்டவைகளைக் கேட்டுக்கொ
ண்டிருக்கையில், அவைகளுக்கு அவள்
எச்சரிக்கையாயிருக்கும்படிக்குக், கர்த்தர்
அவளுடைய இருதயத்தைத் திறந்தார்.–
15 பின்பு அவளும் அவளுடைய குடும்பத்
தாரும் ஞானஸ்நானம் பெற்றபொழுது
அவள் எங்களை நோக்கி, நீங்களென்னைக்
கர்த்தாவினிடத்தில் விசுவாசமானவளென்
றெண்ணினால், என் வீட்டிலே வந்து, தங்
கி இருப்பீர்களாக வென்று எங்களை மிக
வும் வேண்டிக்கொண்டு இருத்தினாள்.—
16 நாங்கள் வேண்டுதலுக்குப் போகையிற்
பீத்தோனுடைய ஆவியைக்கொண்டிருந்
து குறிசொல்லுகிறதினாலே தன் எசமா
ன்களுக்கு மிகுந்த ஆதாயத்தையுண்டாக்
கின ஒருவேலைகாரி எங்களுக்கு எதிர்ப்ப
17 ட்டாள்.—அவள் பவுலுவுக்கும் எங்களு
க்கும் பின்சென்று இந்தமனிதர் உன்னத
மான பராபரனுடைய ஊழியகாரர், உங்
களுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தை அறி
18 விக்கிறவர்களென்று கூப்பிட்டாள்.—இப்
படி அனேகநாட் செய்தாள், அப்பொ

Digitized by Google

ழுந்து பவுல் விசனமடைந்து, திரும்பிக்
கொண்டு, அந்த ஆவியுடனே சொன்ன
து, இவளைவிட்டுப் புறப்படும்படிக்கு இ
யேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே
உனக்குக் கட்டளையிடுகிறேனென்றான்.
அந்நேரம் அது புறப்பட்டுப்போயிற்று
19 —அவளுடைய எசமான்கள் தங்கள் ஆதா
யத்தின் நம்பிக்கை அற்றுப்போயிற்றெ
ன்று அறிந்து, பவுலையுஞ் சீலாவையும்
பிடித்துச் சந்தைவெளியிலுள்ள தலைவரி
20 டத்திற்கு இழுத்துப்.—பின்பு அவர்களை
த் துரைகளுக்கு முன்பாகக் கொண்டு
போய், யூதர்களாகிய இந்த மனிதர் நம்
முடைய பட்டிணத்தைக் கலங்கப்பண்ணி
21 —உரோமராகிய நம்மாலே ஏற்றுக்
கொள்ளவுஞ் செய்யவும் படாத முறை
மைகளை அறிவிக்கிறார்களென்றார்கள்.—
22 அப்பொழுது சனங்கள் அவர்களுக்கு வி
ரோதமாய் எழும்பினதுமல்லாமல், து
ரைகள் அவர்களுடைய வஸ்திரங்களைக்கிழி
த்து ப்போடவும் அவர்களை அடிக்கவுஞ்
23 சொல்லி.—மிகுதியாய் அவர்களை அடிப்
பித்த பின்பு, சிறைச்சாலையிலே வைத்து,

Digitized by Google

அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படிக்குச் சிறைச் சாலைக் காரனுக்குக் கட்ட
4 ளையிட்டார்கள்.—அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்றபொழுது, அவர்களை உள்ளுக்கு உள்ளான காவல் அறையிலேபோட்டு, அவர்கள் கால்களை மரத்தில்
5 அடித்து வைத்தான்.—அப்படியிருந்தும், பாதி இராத்திரியிலே பவுலுஞ் சீலாவும்வேண்டுதல் பண்ணிக் பராபரனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்ட மற்றவர்கள் அதைக் கேட்டுக் கொ
6 ண்டிருந்தார்கள்.—சடுதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையத்தக்கதாகப் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாந் திறக்கப்பட்டன, எல்லாரையுங் கட்டியிருந்த சங்கிலிகள் அற்றுப்
7 போயின.—சிறைச் சாலைக்காரனே விழித்துச் சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, அதில் வைக்கப்பட்டவர்கள் ஓடிப்போனார்களென்று நினைத்துக் கத்தியையுருவித் தன்னைக்கொலைசெ
8 ய்ய எத்தனமாயிருந்தான்.— பவுலோ நாங்களெல்லாரும் இங்கேயிருக்கிறோம் ஆ

Digitized by Google

கையால் நீ உனக்குக் கேடொன்றுஞ் செ
ய்யாதிருப்பாயாகவென்று மிகுந்த சத்த
29 மாய்க் கூப்பிட்டான்.— அப்பொழுது
அவன் விளக்குகளை அழைப்பித்து, உள்
ளே ஓடி நடுக்கமடைந்தவனாய்ப் பவுலு
வுக்குஞ் சீலாவுக்கும் முன்பாகவிழுந்து
30 —பின்பு அவர்களை வெளியே அழைத்து
ப்போய், ஆண்டவர்களே, இரட்சிக்கப்ப
டுகிறதற்கு நான் என்ன செய்யவேண்டு
31 மென்றான்.-அதற்கு அவர்கள் கத்தராகிய
இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொ
ள்வாயாக, அப்பொழுது நீயும் உன்வீட்
டாரும் இரட்சிக்கப் படுவீர்கள் என்று
32 சொல்லி.—அவனுக்கும் அவனுடைய வீ
ட்டிலிருந்த யாவருக்குங் கத்தருடைய உ
33 சனத்தைப் போதித்தார்கள்.—மேலும்
அவ்விராத்திரியில் அந்நேரத்திலே தானே
அவன் அவர்களைச் சேர்த்துக்கொண்டு,
அடிகளாலான காயங்களைக் கழுவினான்.
அன்றியும் அவனும் அவனைச்சேர்ந்தயா
வரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்
34 கள்.—பின்பு அவன் அவர்களைத் தன்வீட்
டுக்குள் அழைத்துப்போய் அவர்களுக்கு

Digitized by Google

ப் போசனங்கொடுத்துத் தானுந் தன் வீ
ட்டாரனைவருங் பராபரனில் விசுவாசிக
ளானபடியினாலே மிகவும் மகிழ்ச்சியாயி
35 ருந்தான்.— உதயமான பொழுது, து
ரைகள் தலையாரிகளை அழைத்து, அந்த
மனிதரை விட்டுவிடும்படி சொல்லுங்கள்
36 என்றனுப்பினார்கள்.-சிறைச்சாலைக்காரன்
பவுலுவுடனே சொன்னது, உங்களை விடு
தலையாக்கும்படிக்குத் துரைகள் கட்ட
ளை யனுப்பினார்கள். ஆகையால் நீங்கள்
புறப்பட்டுச் சமாதானத்துடனே போ
37 வீர்களாகவென்றான்.—அதற்குப் பவுல்
சொன்னது உரோமராகிய எங்களை யவர்
கள் நியாயம் விசாரியாமல் வெளியரங்க
மாய் அடிப்பித்துச் சிறைச்சாலையிலே
போட்டு, இப்பொழுது இரகசியமாய்
எங்களை விடுதலையாக்குகிறார்களா. அப்ப
டியல்ல அவர்களே வந்து எங்களை வெளி
யே அழைத்து அனுப்பிவிடக் கடவார்க
38 ளென்றான்.—இந்த வசனங்களைத் தலையா
ரிகள் துரைகளுக்கு அறிவித்தார்கள். உ
ரோமரா யிருக்கிறார்களென்று அவர்கள்
கேட்டபொழுது பயம் அடைந்து வந்து

Digitized by Google

அவர்களுடனே தயவாகப் பேசிக்கொ
39 ண்டு,—பின்பு அவர்களைவெளியே அழை
த்துவந்து பட்டினத்தை விட்டுப்போகு
40 ம்படி கேட்டுக் கொண்டார்கள்—அந்த
ப்படி அவர்கள் சிறைச் சாலையிலிருந்து
புறப்பட்டு இலீதியாளிடத்துக்குப்போ
யச் சகோதரரைக் கண்டு அவர்களுக்கு
ஆறுதல் சொல்லிப் புறப்பட்டார்கள்.

௰எ. அதிகாரம்.

1 அவர்கள் அம்பிபோலிப் பட்டினத்
தையும் அப்பொலோனியப் பட்டினத்
தையுங் கடந்து தெசலோனிக்காப் பட்
டினத்திற்கு வந்தார்கள். அங்கே யூதர்க
2 ளுக்காக ஒரு ஆலய மிருந்தது—பவு
ல் தன் வழக்கத்தின் படியே அவர்களிட
த்திற்குப் போய் மூன்று ஓய்வு நாட்களி
ல் வேதவாக்கியங்களின் நியாயங்களையெ
டுத்து அவர்களுடனே சம்பாஷித்துக்
3 கொண்டு வருகையில்—கிறிஸ்து பாடு
படவும் மரித்தோரிலிருந் தெழுந்திருக்க
வும் வேண்டுமென்று காண்பித்து நான
உங்களுக்கறிவிக்கிற இயேசுவே கிறிஸ்து

Digitized by Google

4 என்று திருஷ்டாந்தப் படுத்தினான்—அ
வர்களிற் சிலர் அதற்குச் சம்மதித்துப், ப
வுலுவையுஞ் சீலாவையுஞ் சேர்ந்து கொ
ண்டார்கள். தேவ பத்தியுள்ள கிரேக்கரி
ல் அனேகம் பேருங் கனம் பொருந்திய
ஸ்திரிகளில் மிகுதியான பேரும் அப்ப
டியே செய்தார்கள்.
5 சம்மதியான யூதர்களோ வயிராக்கிய
ங்கொண்டு தெருக்களிலே திரிந்தலைகிற
சில பொல்லாத மனிதரைச் சேர்ந்து
கொண்டு, கூட்டங் கூடிப், பட்டினத்
தைக் கலகப் படுத்தி, யாசோனுடைய வீ
ட்டுக்கு முன் பலபந்தமா யெதிர்த்துவந்
து, அவர்களைச் சனங்களுக்கு முன்பாக
க் கொண்டு போகும்படி வகை தேடினா
6 ர்கள்—அவர்களைக் காணாமலிருந்த பொ
ழுது, அவர்கள் யாசோனையுஞ் சில
சகோதரரையும் பட்டினத்துத் தலைவரி
டத்திற்கு இழுத்துக்கொண்டு போய், உ
லகத்தைக் கலகப்படுத்துகிறவர்கள் இங்
7 கேயும் வந்திருக்கிறார்கள்—யாசோன் இ
வர்களை ஏற்றுக்கொண்டான். இவர்களெல்
லாரும் இயேசுவென்னும் வேறொருவனை

Digitized by Google

இராசா வென்று சொல்லி, இராசனுடை
ய கட்டளைக்கு விரோதஞ் செய்கிற
8 ர்கள் என்று கூப்பிட்டு,—இவைகளைக்
கேட்டுக்கொண்ட சனங்களையும் பட்டி
னத்துத் தலைவரையுங் கலங்கப் பண்ணி
9 னார்கள்.—அப்பொழுது அவர்கள் யா
சோன் இடத்திலும் மற்றவர்கள் இடத்
திலுங் கையெழுத்து வாங்கிக்கொண்டு அ
10 வர்களை விட்டு விட்டார்கள்.—உடனே
சகோதரர்கள் இராத்திரிகாலத்திலே பவு
லுவையுஞ் சீலாவையும் பெரோயா வூரு
க்கு அனுப்பி விட்டார்கள். அவர்கள்
அங்கேசேர்ந்து, யூதர்களுடைய ஆலய
11 த்துக்குப் போனார்கள்,—தெசலோனிக்
கேயிலுள்ளவர்களைப் பார்க்கிலும், அவ
ர்கள் மேன்மையுள்ளவர்களாயிருந்து, மி
குந்த மனப்பூர்வத்தோடே சுவிசேஷவ
சனத்தை யேற்றுக்கொண்டு, காரியங்கள்
மெய்யாய் அப்படிப்பட்டவைகளோ
வென்று நாடோறும் வேதவாக்கியங்களை
12 ஆராய்ந்தார்கள்,—ஆதலால் அவர்களில்
அநேகம்பேருங் கனம்பொருந்திய அநே
க கிரேக்க ஸ்திரிகளும் புருஷரும் விசுவா

Digitized by Google

13 சிளானார்கள்.— பெரோயா வூரிலேயுங்
கருத்தருடைய வசனம் பவுலுவினால் அறி
விக்கப் படுகின்றதென்று தெசலோனிக்
கேயரான யூதர்கள் அறிந்தபொழுது அ
ங்கேயும் வந்து, சனங்களைக்கலகப்படுத்
14 தினார்கள்.—உடனே சகோதரர்கள் பவு
லுவைச் சமுத்திரத்தின் வழியாய்ப்போக
அனுப்பினார்கள் சீலாவுந் தீமோத்தேயும்
15 பின்னுமங்கே தங்கினார்கள்.—பவுலுவை
வழிநடத்திப் போனவர்களோ அவனை அ
த்தேனே பட்டினத்திற்கு அழைத்துப்
போய், அங்கே சீலாவுந் தீமோத்தேயும்
அதிசீக்கிரந் தன்னிடத்தில் வர வேண்டும்
என்று அவர்களுக்குச் சொல்லும்படி கற்
பனை பெற்றுப் புறப்பட்டுப்போனார்கள்.
16 அவர்கள் வரும்படிக்குப் பவுலென்ப
வன் அத்தேனே பட்டினத்திற் காத்துக்
கொண்டிருக்கையிற், பட்டினம் விக்கி
ரகங்களால் நிறைந்திருக்கிறதைப் பார்
த்து மனசில் மிகுந்த வயிராக்கியத்தை
17 அடைந்து கொண்டு,—பின்பு ஆலயத்தி
லே யூதர் களோடும் மற்றத் தேவபத்தி
யுள்ள பேர்களோடுஞ் சந்தை வெளியி

Digitized by Google

லே தனக்கு எதிர்ப் பட்டவர்களோடும்
18 நாடோறும் பேசிக் கொண்டான்.—அ
ப்பொழுது எப்பிக்கூரும ஸ்தோயிக்க
ருமான ஞானிகளிற் சிலர் அவனுடனே
வாக்கு வாதம் பண்ணிக்கொண்டு வரும்
காலத்திலே, சிலர் இந்த வாயாடி என்ன
பேச வானென்றார்கள். சிலர் அவன் இ
யேசுவையும் மரித்தோரிலிருந் தெழுந்தி
ருக்குதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்
த படியினாலே, இவன் அன்னிய தேவர்க
ளை அறிவிக்கிறவனென்று தோன்று கின்ற
19 தென்றார்கள்.—அப்பொழுது அத்தே
னே பட்டினத்தாரெல்லாரும் அங்கே
தங்கும்படி வருகிற அன்னியரும் புதிய
வைகளைக் கேட்கிறதினாலும் பேசுகிறதி
னாலுமேயன்றி மற்றொருவிதமாய்த் தங்
கள் காலத்தைப் போக்க விரும்பாதவர்க
20 ளானபடியால்.—அவர்கள் அவனை மாரு
ஸ்தேவனுடைய மேடையிலுள்ள நியாய
ஸ்தலத்துக்கு அழைத்துப்போய், நீ சொ
ல்லுகிற புதிய உபதேசத்தை நாங்கள் அ
21 றியலாமா?—நவமான காரியங்களையே எ
ங்கள் காது கேட்கப் பண்ணுகிறாய், ஆ

Digitized by Google

கையால் நாங்கள் அவைகளை அறிய வேண்
22 டுமென்றிருக்கிறோமென்றார்கள்.—அப்
பொழுது பவுல் மாருஸ்மேடையின நடு
விலே நின்று சொன்னது, அத்தேனரே
எல்லாவற்றிலுந் தேவபத்தியே யுங்களுக்
கு மிகவுமுண்டாயிருக்கிறதென்று என
க்குத் தோன்றுகின்றது. எப்படி என்றா
ல், நான் திரிந்துவந்து, உங்கள் தேவ ஆ
ராதனைக் கேற்றவைகளை நோக்கிப் பார்
த்த பொழுது, அறியப்பட்டிராத தேவ
னுக்கென்றெழுதியிருக்கிற ஒரு பீடத்தை
23 யுங் கண்டேன்.—நீங்கள் அறியாமற் பணி
வு செய்கிறவரையே நான் உங்களுக்கறி
24 விக்கிறேன்,—உலகத்தையும் அதிலுள்ள
யாவையுமுண்டாக்கின தேவனானவர் வா
னத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரானதா
ற், கைகளாற் செய்யப்பட்ட கோவில்
25 களில் வாசம் பண்ணுகிறதுமில்லை —யா
தொன்று தமக்கு வேண்டுவ்தாக மனிதர்
கைகளாற் பணிவிடை கொள்ளுகிறதுமி
ல்லை - எல்லாருக்குஞ் சீவனையுஞ் சுவாசத்
தையும் மற்றயாவையும் அவர் கொடுத்தி
26 ருக்கிறாரே,—அல்லாமலும் அவரே ஒரே

Digitized by Google

இரத்தத்திலிருந்து மனிதர் எல்லாருந்
தோன்றப்பண்ணி, நம்மிலொருவருக்குந்
தூரமல்லாத கத்தராகிய தம்மை அவர்
கள் தடவி அடைந்துகொள்ளத் தக்கதா
27 கத்.—தம்மைத் தேடும்படிக்கு, அவர்
களுக்காக முன் திட்டமாக்கப் பட்ட கா
லங்களையுங் குடியிருப் பெல்லைகளையுங்
குறித்து, அவர்கள் பூமியிலெங்குங் குடி
28 யிருக்கும்படி செய்தார்.—அவரால் நா
ம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்
கிறோம், அதுபோல உங்களிற் சில புலவ
ர்களும், அவருடைய வமிசத்தாராயிருக்
29 கிறோம் என்று சொன்னார்கள்.—ஆத
லால் நாங் கருத்தருடைய வமிசத்தாரா
யிருக்கத் தெய்வம் மனிதருடைய சித்தி
ரவேலையினாலுந்தோறறுதலினாலும் பொ
ன், வெள்ளி, கல் இவைகளாற் செய்யப்
பட்டதற்கு ஒப்பாயிருக்கின்றதென்று
30 நாம் நினைக்கலாகாது.—அறியாமையுள்
ள காலங்களைக் கருத்தர் காணாதவர்போ
லிருந்தார். இப்பொழுதோ குணப்பட
வேண்டுமென்று எவ்விடத்திலுமுள்ள
மனிதர் யாவருக்குங் கட்டளையிடுகிறார்.

Digitized by Google

31 —மேலும் ஒரு நாளைக்குறித்தார். அதி
லே அவர் தாம் நியமித்த ஒருவரைக்கொ
ண்டு பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும்
நியாயத்தீர்ப்புக் கொடுப்பார். அவரை
மரித்தோரிலிருந் தெழுப்பினதினாலே அ
வர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் வி
32 ளங்கப் பண்ணினாரென்றான்.—மரித்தோ
ர் உயிரோடெழுந்திருக்குதலைக் குறித்து
அவர்கள் கேட்டபொழுது சிலர் இகழ்ந்
தார்கள். சிலர் பின்னொருவேளை இதைக்
குறித்து உன்னிடத்திற் கேட்போம் என்
33 றார்கள்.—அப்பொழுது பவுலு அவர்
களிலிருந்து புறப்பட்டுப் போனான்.-
34 சிலர் அவனைப்பற்றிக்கொண்டு, பின்பு வி
சுவாசிகளானார்கள், அவர்களில், தியொனீ
சி என்னும் நியாயாதிபதியுந, தாமரியெ
ன்றுபேருள்ள ஒருஸ்திரியும் இவர்களுட
னே கூட வேறுசிலருமிருந்தார்கள்.

௰அ. அதிகாரம்.

1 அதன் பின்பு பவுலு அத்தேனே ப
ட்டினத்தை விட்டுக் கொறிந்து பட்டின
2 த்திற்கு வந்து,—இர்ரயுனாகிய கிலவுதி,

Digitized by Google

யூதரெல்லாரையும் உரோம பட்டினத்
தை விட்டுப்போகும்படி, கட்டளையிட்
டபடியினாலே, இத்தாலி நாட்டினின்று
நவமாய் வந்திருந்த ஆக்கில்லாவென்று
நாமமுள்ள பொந்து தேசத்தானாகிய ஒ
ரு யூதனையும் அவனுடைய மனைவியாகி
ய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு,—
3 அவர்களிடத்திற் போய், தானும் அவ
ர்களும் ஒரே தொழில் செய்தவர்களான
படியினாலே, அவர்களிடத்திலே தங்கித்
தொழில்செய்தான், அவர்களுடையதொ
4 ழில் கூடாரம் பண்ணுதல்,—அன்றியும்
அவன் ஓய்வுநாடோறும் ஆலயத்திலே ச
ம்பாஷணைபண்ணி, யூதருக்குங் கிரேக்க
5 ருக்கும் புத்தி சொன்னான்,—மேலும் ம
க்கேதோனி நாட்டிலிருந்து சீலாவுந் தீ
மோத்தேயும் வந்த பொழுது, பவுல் த
ன் ஆவியிலே அதிக வயிராக்கியங் கொண்
டு இயேசுவானவரே கிறிஸ்து என்று யூ
6 தருக்குக் காண்பித்தான்.—அவர்களோ,
எதிர்பேசித் தூஷணித்த பொழுது அவ
ன் தன் வஸ்திரங்களையுதறி, உங்களுக்குக்
கேடுவரும் படிக்கு நீங்களே எதுவாயிரு

Digitized by Google

7 க்கிறீர்கள்.—நான் சுத்தமாயிருக்கிறேன்.
இதுமுதல் நான் புறத் தேசத்தார்களிட
த்திற் போகிறேனென்று அவர்களுடனே
சொல்லி, அவ்விடத்தைவிட்டுத் தேவபத்
தியுள்ள யூஸ்து என்பவனுடைய வீட்டி
லே போனான். அந்த வீடு ஆலயத்திற்கு
8 அடுத்ததாயிருந்தது.—மேலும் ஆலயத்
தலைவனாகிய கிறிஸ்புதன் வீட்டார் அனைவ
ரோடுங் கூடக் கர்த்தரை விசுவாசித்தான்,
கொரிந்தியரில் அநேகருஞ் சுவிசேஷத்
தைக் கேட்டு, விசுவாசித்து ஞானஸ்நா
னம் பெற்றார்கள்.
9 பின்பு இராத்திரியிலே கர்த்தர் ஒரு தரி
சனத்திலே பவுலுடனே சொன்னது,
இந்தப் பட்டினத்திலே அநேகம்பேர்
என்னுடைய சனங்களாயிருக்கிறார்கள்,
ஆகையால் நான் உன் பங்கிலிருப்பேன்.
ஒருவனும் உனக்குத் தீமைசெய்யும்படிக்
கு உன்மேற் கைகளை நீட்டமாட்டான்.
10 —ஆனபடியினாலே நீ பயப்படாமற்பே
சுவாயாக மவுனமாயிராதிருப்பாயாகவெ
11 ன்றார்.—அந்தப்படி அவன் ஒரு வருஷ
மும் ஆறுமாதமும் அங்கேதங்கிக்,பராப

ருடைய வசனத்தை அவர்களுக்குள்ளே
உபதேசம் பண்ணிக்கொண்டுவந்தான்.
12 பின்பு கல்லியோன் என்பவன் அகாயா
நாட்டிலே பிரதி துரையானபொழுது,
யூதர்கள் ஒருமனப்பட்டுப் பவுலுக்கு
விரோதமாயெழும்பி, அவனை நியாயாச
னத்துக்கு முன்பாகக் கொண்டுபோய்,
13 —இவன் வேதநூலுக்கு விரோதமான
விதமாய்ப் பராபரனைச் சேவிக்கும்படி
மனிதருக்குப் போதிக்கிறான் என்றார்க
14 ள்.—அதற்குப் பவுல் தன் வாயைத் திறக்
கையிற், கல்லியோன் யூதருடனே சொ
ன்னது, யூதரே, இது அநீதி அல்லது
மிகவும் பொல்லாங்கான காரியமானால்
நான் உங்களுக்குப் பொறுமையாய்ச்செ
வி கொடுக்க, நியாயமுண்டாயிருக்கும்.
15 —இது உபதேசத்துக்கும் நாமங்களுக்
கும் உங்கள் வேதநூலுக்குமேற்ற தருக்
கமானபடியினாலே இப்படிப்பட்டவைக
ளைக் குறித்து நான் நியாயாதிபதியாயிருக்
க விரும்புகிறதில்லை. ஆகையால் நீங்களே
16 பார்ப்பீர்களாகவென்று சொல்லி,—அவ
ர்களை நியாயாசனத்தைவிட்டுப் போகப்

Digitized by Google

17 பண்ணினான்.—அப்பொழுது கிரேக்கர்
எல்லாரும் ஆலயததலைவனாகிய சொஸ்
தேனேயைப் பிடித்து, நியாயாசனத்து
க்கு முன்பாகத் தானே அடித்தார்கள்.
அதைக்குறித்துக் கல்லியோன் விசாரணை
பண்ணாமலிருந்தான்.
18 பின்னும் பவுல் அனேகநாள் அங்கே
தரித்திருந்த பின்பு அவன் சகோதரரு
டைய உத்தரவு வாங்கிக் கொண்டு, தனக்
கு ஒரு பிராத்தனை உண்டாயிருந்தபடி
யால், கெங்கிரேயா பட்டினத்திலே சிர
சுசவரம் பண்ணிச், சீரியாத் தேசத்
துக்குப் போகும்படி கப்பலேறிப்
ப்போனான். பிரிஸ்கில்லாளும் ஆக்கில்
லாவும் அவனுடனே கூடப் போனார்கள்.
19 —அவன் எபேசு பட்டினத்திற்குச் சேர்
ந்தபொழுது, அவர்களை அங்கேவிட்டு
ஆலயத்துக் குட்பிரவேசித்து, யூதருட
20 னே சம்பாஷணைபண்ணினான்.—அவர்க
ள் அவனைச் சிலகாலந் தங்களுடனேயி
ருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்
டபொழுது, அவன் சம்மதியாமல்,—
21 வருகிற பண்டிகையிலே நான் எப்படியு

Digitized by Google

ம் எருசலேமிலிருக்கவேண்டும். கர்த்தரு
க்குச சித்தமானால், திரும்பி உங்களிட
த்தில் வருவேன் என்று சொல்லி, அவர்க
ளுடைய உத்தரவுவாங்கிக்கொண்டு, கப்
பலேறி, எபேசு பட்டினத்தை விட்டு,
22 —செசாரியாப் பட்டினத்துக்குப்போ
யிப் பின்பு, (எருசலேமுக்குப்) போ
யிச் சபையாரின் சுகத்தை விசாரித்துக்
கொண்டு, பின்பு அந்தியோகியாவூருக்கு
23 ச்சென்று,—அங்கே சிலகாலஞ் சஞ்சரித்
துப்பின்பு, புறப்பட்டுக், கலாத்தியாநா
ட்டிலேயும் பிரிகியாநாட்டிலேயும் ஊர்
கள் தோறுந் திரிந்து, சீஷரெல்லாரையு
ம் ஸ்திரப்படுத்திக் கொண்டு வந்தான்.
24 அக்காலத்திலே அலேக்குசந்திரிய பட்
டினத்திற் பிறந்தவனுமாயிச், சாதுரிய
வானுமாயி வேதவாக்கியங்களில் வல்லவ
னுமாயிருக்கிற அப்பொல்லோ என்று
பேர்கொண்ட ஒரு யூதன் எபேசுபட்டி
25 னத்துக்கு வந்தான்.—அவன் கர்த்தருடை
ய மார்க்கத்தைக் குறித்து உபதேசங்கே
ட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை
மாத்திரம் அறிந்தவனாயிருந்துங், கர்த்தாவுக்

குரியவைகளை மிகுந்த சாக்கிரதையுள்ள
மனதோடே பேசித் திட்டமாய்ப் போத
26 கம்பண்ணிக்கொண்டு வந்தான்,—ஆலய
த்திலே தயிரியமாய்ப் பேசினான். ஆக்கி
லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகி
றதைக் கேட்டபொழுது, அவனைச்சேர்
ந்துகொண்டு, பராபரனுடைய மார்க்கத்
தை அவனுக்கு அதிக திட்டமாய்க் காண்
27 பித்தார்கள்.—பின்பு அவன் அகாயா நாட்
டிலே போகவேண்டுமென்றிருக்கையிற்,
சீஷர்கள் அவனை உபசாரஞ் செய்யும்
படிக்குச், சகோதரர் அவர்களுக்கு எழுதி
28 னார்கள்.—அவன் அங்கே சேர்ந்த பின்பு
அவன் வெளியரங்கமாய் யூதர்களுடனே
பலமாய்த் தருக்கம் பண்ணிக்கொண்டு
இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கிய
ங்களாலே தெளிவாய்க் காண்பித்தபடியா
ற் கிருபையினாலே விசுவாசிகளாயிருந்த
வர்களுக்கு மிகுந்த உதவியாயிருந்தான்.

௰௯. அதிகாரம்.

1 அப்பொல்லோ சென்பவன் கொரிந்து
பட்டினத்திலிருக்கையிற் பவுல் மேலான

Digitized by Google

தேசங்களிலே திரிந்து, எபேசுப்பட்டின
2 த்துக்கு வந்தபொழுது,— சிலசீஷரைக்
கண்டு, நீங்கள் விசுவாசிகளானபொழுது
பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டீர்
களோவென்றான், அதற்கு அவர்கள் சொ
ன்னது, பரிசுத்த ஆவியுண்டென்று நா
ங்கள் கேள்விப்படவுமில்லையே என்றார்
3 கள்.—அப்பொழுது அவன் சொன்னது
அப்படியானால், எப்படிப்பட்ட ஞானஸ்
நானம் பெற்றீர்களென்றான். அவர்கள்
யோவான் கொடுத்த ஸ்நானத்தைப் பெற்
4 றோமென்றார்கள்.—அப்பொழுது பவுல்
சொன்னது யோவான் தனக்குப் பின்
வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவை விசு
வாசிக்கவேண்டுமென்று சனங்களுக்குச்
சொல்லிக், குணப்படுதற்கு ஏற்ற ஞானஸ்
5 நானத்தைக்கொடுத்தானேயென்றான்.—அ
தையவர்கள் கேட்டபொழுது, அவர்கள்
கர்த்தராகிய இயேசுவினுடைய நாமத்தினா
6 லே ஞானஸ்நானம் பெற்றார்கள்.—அல்
லாமலும் பவுல் அவர்கள்மேலே கைகளை
வைத்தபொழுது, பரிசுத்த ஆவியானவர்
அவர்களிடத்தில் வந்தார். அவர்கள் அவ்

Digitized by Google

னியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசன
7 ஞ் சொன்னார்கள்.—அந்த மனிதரெல்லா
ரும் ஏறக்குறையப் பன்னிரண்டுபேராம்.
8 —பின்பு (பவுல்) ஆலயத்துக்குப்போய்
த், தயிரியமாய்ப்பிரசங்கம்பண்ணி, மூன்
றுமாதமளவுங் கருத்தருடைய இராச்சி
யத்துக் குரியவைகளைப்பேசித் தெளிவா
ய்க் காண்பித்துக்கொண்டு வந்தான்.—
9 சிலரோ கடினமான மனதுள்ளவர்களு
மாய், அவிசுவாசிகளுமாயிருந்து, கூட்ட
த்துக்கு முன்பாக இந்தமார்க்கத்தை நிந்
தித்தபொழுது, அவன் அவர்களை விட்டு
விலகிச், சிஷரை அவர்களிலிருந்து பிரித்
துக்கொண்டு திறன்னு என்பவனுடைய
பள்ளிக்கூடத்தில் நாடோறுஞ் சம்பாஷி
10 த்துக்கொண்டு வந்தான்.—இப்படி இர
ண்டு வருஷம் நடந்தது. அதினாலே ஆசி
யாவிலேகுடியிருந்த யூதர்கள் கிரேக்கர்க
ள் இவர்களெல்லாருங் கர்த்தராகிய இயே
சுவைக் குறித்து வசனத்தைக் கேள்விப்
11 பட்டார்கள்.—அன்றியும் அதிசயப்படத்
தக்க அற்புதங்களைக் கருத்தர் பவுலுவின்
12 கைகளினாலே செய்து வருகையில்,—அவ

Digitized by Google

னுடைய சரீரத்திலிருந்த வேர்வைச் சீலை
களையுங் கச்சைகளையும் வியாதியுள்ளவ
ர்கள்மேல் வைத்தவுடனே, வியாதிகள்
அவர்களைவிட்டு நீங்கிப்போயின. பொல்
லாத ஆவிகளும் அவர்களிலிருந்து புறப்
13 பட்டன.—அப்பொழுது தேசாந்தரிக
ளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரி
ற் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்த
வர்கள் மேற் கர்த்தராகிய இயேசுவின் நா
மத்தைச் சொல்லத் துணிந்து, பவுல்பிர
சங்கிக்கிற இயேசுவின்பேரிலே யுங்களுக்
14 கு ஆணையிடுகிறோம் என்றார்கள்.—பிரதா
ன ஆசாரியனாகிய இஸ்கேவாவென்னும்
யூதனுடைய குமாரர் ஏழுபேர்களே அப்
15 படிச் செய்தார்கள்.—அவர்களுக்கு உத்
தரவாகப் பொல்லாத ஆவி சொன்னது
இயேசுவை அறிந்திருக்கிறேன். பவுலுவை
யும் அறிவேன் நீங்களோ, யாரென்று
16 சொன்னவுடனே,—பொல்லாத ஆவியை
யுடைய மனிதன் அவர்கள்மேற் பாய்ந்து
அவர்களைத் தனக்குட்படுத்திச் சயிக்க
அவர்கள் நிருவாணிகளாயுங் காயம்பட்ட
வர்களாயும் அந்தவீட்டை விட்டோடிப்

17 போனூர்கள்.—அது எபேசிலே குடியி
ருக்கிற யூதர் கிரேக்கர் அனைவருக்குந் தெ
ரியவந்தபொழுது அவர்களெல்லாரும்ப
யமடைந்தார்கள். அல்லாமலுங் கத்தராகி
ய இயேசுவின் நாமம் அவர்களுக்குள்ளே
18 மேன்மைப் பட்டது.—அன்றியும் விசு
வாசிகளானவர்களில் அனேகர்வந்து தங்
கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்
19 கையிட்டார்கள்.–அன்றியும் வீண் வித்தை
க்காரராயிருந்தவர்களில் அனேகர் தங்க
ள் புஸ்தகங்களைக்கொண்டுவந்து எல்லா
20 ர்முன்பாகவுஞ் சுட்டெரித்தார்கள்.—அ
வைகளின் கிரயம் ஐம்பதினாயிரம் வெள்
ளிக்காசென்று மதிக்கப்பட்டது. இவ்வள
வுபலமாய்க் கத்தருடைய வசனம் வளர்
ந்து வல்லமையைக் காண்பித்தது.

21 இவை நிறைவேறினபின்பு பவுல் ம
க்கெதோனியா அகாயா என்னுந் தேச
ங்களின் வழியாய் எருசலேமுக்குப்போ
கும்படி மனசிலே யோசனைகொண்டு,
நான் அங்கேயிருந்து, பின்பு உரோமை
நகரியையும்பார்க்கவேண்டுமென்றுசொ
22 ல்லிக்கொண்டு,—தனக்கு உதவிசெய்த

Digitized by Google

வர்களில் இரண்டுபேராகிய தீமோத்தே
யுவையும் எர்ஸ்துவையும் மக்கெதோனி
யா நாட்டுக்கு அனுப்பித் தானே பின்னு
ஞ் சிலகாலம் ஆசியா நாட்டிலேயிருந்தா
23 ன்.—அக்காலத்துக்குள்ளே இந்த மார்க்
கத்தைக்குறித்து மிகுந்த கலகமுண்டா
24 யிற்று.—எப்படியென்றால், தேமேத்தி
ரி என்று நாமமுள்ள ஒரு தட்டான், தியா
னாள் தேவிக்காக வெள்ளியினாற் சிறுகோ
வில்களைச் செய்துகொண்டு, தொழிலா
ளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்தி
25 வந்தான்.—அவர்களையும் அப்படிப்பட்
ட தொழிலைச்செய்கிற மற்றவர்களையும்
அவன் கூடி வரச்செய்து சொன்னது,
மனிதர்களே! உங்களுக்குத் தெரிந்திரு
க்கிறபடி, பிழைப்பு இந்தத் தொழிலி
26 னாலே நமக்கு வருகின்றது.—மேலும்
நீங்கள் கண்டுங் கேட்டுமிருக்கிறபடி, அ
ந்தப் பவுலென்பவன், கைகளாற் செய்ய
ப்பட்டவைகள் தேவர்கள அல்லவென்று
சொல்லி எபேசிலே மாத்திரமல்லக், கொ
ஞ்சங் குறைய ஆசியாநாட்டிலெங்கும் அ
னேக சனங்களுக்குப் போதித்து, அவர்

Digitized by Google

27 களை மாறுபாடாக்குகிறான்.—அதினாலே
நம்முடைய அலுவல் கனஈனம் அடைவத
ற்கு ஏதுவாயிருக்கிறதுமல்லாமல், மகா
தேவியாகிய தியானாளுடைய கோவில்
எண்ணமற்றுப் போகிறதற்கும் ஆசியாத்
தேசத்தாரெல்லாராலும் பூச்சக்கரத்திலு
ள்ளயாவராலுஞ் சேவிக்கப்படுகிற அவளு
டைய மகிமை அழிந்துபோகிறதற்கும்
28 ஏதுவுண்டாயிருக்கிறதென்றான்.—அதை
அவர்கள் கேட்டு, மிகுந்தகோபமடைந்து
எபேசியருடைய தியானாளே பெரியவ
ளென்று கூப்பிட்டுக் கொண்டார்கள்.—
29 பட்டிணமுழுவதுங் கலக்கத்தினாலே நிர
ப்பப்பட்டது. மேலும அவர்கள் பவுலுவு
டனே கூடப்பிரயாணமாய் வந்த மக்கே
தோனியராகிய காயுவையும் அரிஸ்தர்கு
வையும் இழுத்துக்கொண்டு ஒருமனப்
பட்டு வேடிக்கை ஸ்தலத்துக்குப் பாய்
30 ந்தோடினார்கள்,—அப்பொழுது பவுல்
கூட்டத்திற் போக மனதாயிருந்தான். சீ
ஷரோ அவனைப் போக விடவில்லை,—
31 மேலும் வேடிக்கை ஸ்தலத்துக்கு அவன்
போகாமலிருப்பதற்கு வேண்டிக்கொள்

Digitized by Google

ளும்படிக்கு அவனுடைய சினேகிதரா
கிய ஆசியாத்தேசத்தலைவரிற்சிலர் அவனி
32 டத்துக்கு ஆள அனுப்பினார்கள்.—அன்றி
யுங் கூட்டம் மிகவுங் கலக்கமுள்ளதாயிரு
க்க அனேகர் தாங்கள் கூடிவந்த காரண
த்தைஅறியாதவர்களான படியினாலே சன
ங்கள் பலவிதமாய்க் கூக்குரலிட்டார்கள்.
33 அப்பொழுது யூதர்கள் அலெக்குச்சந்த
ரென்பவனை முன்னிற்கத் தள்ளுகையிற்
கூட்டத்திற் சிலர் அவனை முன்னே இழுத்
தார்கள். அலெக்குச்சந்தர் கையினாற்சமிக்
கைகாட்டிச் சனங்களுக்கு உத்தரவு சொ
34 ல்லவிரும்பினான்.—அவனே யூதனென்று
அவர்கள் அறிந்தபோதோவெனில் எல்
லாரும் எபேசியருடைய தியானாளே பெ
ரியவள் என்று இரண்டுமணிநேரமளவும்
ஏகமாய்க்கூப்பிட்டுக் கொண்டார்கள்.—
35 பின்பு மணியகாரனானவன் சனங்கள் பே
சாமலிருக்கும் படி செய்து சொன்ன
து எபேசியரே எபேசிப் பட்டினம்
மகா தேவியாகிய தியானாளுக்கும் வான
த்திலிருந்து விழுந்த சொரூபத்துக்குங்
கோவிற்பரிசாரகியாயிருக்கிறதை யறியா

Digitized by Google

36 தவனுண்டா.- அது எதிர்ப் பேசப்படாத
காரியமானபடியினாலே நீங்கள் ஒன்றும்
பதறிச்செய்யாமல் அமைந்திருக்கவேண்
37 டும்.—இந்த மனிதர் கோவிற் கொள்ளை
க்காரரல்ல, உங்கள் தேவியைத் தூஷணித்
தவர்களுமல்ல, இப்படியிருந்தும், இவர்
38 களை இங்கே கொண்டுவந்தீர்கள்—தே
மேத்திரியுக்கும் அவனைச் சேர்ந்திருக்கிற
தொழிற்காரருக்கும் ஒருவன்மேலே ஒரு
காரியம் உண்டாயிருந்தால், நியாயம் விசா
ரிக்கும் நாட்களுந் துரைகளுமிருக்கிற ப
டியினாலே ஒருவருக்கொருவர் விரோத
மானபிராது அங்கே பண்ணக் கடவர்
39 கள்—நீங்கள் வேறொருகாரியத்தை விசா
ரித்தால், அது நியாயசங்கத்திலே தீர்க்க
40 ப்படுமே—இன்றைக்குண்டான கலக்கத்
துக்காக நாம் உத்தரவுசொல்ல அழைக்க
ப்படுவதற்கு ஏது வுண்டாயிருக்கின்றது.
இந்தக்கலக்கம் பண்ணுவதற்கு நிமித்தமி
ல்லாதபடியால் நாம் அதைக்குறித்து உ
த்தரவுசொல்லத் திராணியில்லா திருப்
41 போமேயென்று சொல்லி.—பின்பு கூ
ட்டத்தை அனுப்பி விட்டான்.

Digitized by Google

௨௰. அதிகாரம்.

1 கலகம் அமைந்த பின்பு பவுல் சீஷ
ரைத் தன்னிடத்தில் அழைத்து உத்தரவு
வாங்கிக்கொண்டு மக்கெதோனியாவுக்கு
ப்போகப் புறப்பட்டுப்போய் அந்தப்
2 புறங்களில், திரிந்துகொண்டு.—சீஷர்களு
க்கு அனேக வார்த்தைகளினாற் புத்திசொ
ல்லிக்கொண்டு கிரேக்கதேசத்திற் சேர்ந்
3 தான்.—அங்கே மூன்றுமாதஞ் சஞ்சரித்
தபின்பு அவன் கப்பலேறிச் சீரியாநாட்
டுக்குப் போக மனதாயிருந்தபொழுது
யூதர்கள் அவனுக்குத் தீமைசெய்ய இர
கசியமாய் யோசனைகொண்டிருந்தபடி
யால், மக்கெதோனியா நாட்டின் வழியா
ய்த் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணி
4 னான்.—அப்பொழுது ஆசியாத்தேசம்வ
ரைக்கும் அவனோடு கூடப்போனவர்கள்
பெரோசியா வூரானாகிய சொப்பத்தா,
தெசலோனிக்கேயரில் அரிஸ்தருகு, செக
குந்து, தெருபேயனாகிய காயு, தீமோத்
தேயு, ஆசியத்தேசத்தாராகிய, திகிக்கு தி
5 ரோப்பிமு, இவர்களே.—அவர்கள் முன்

Digitized by Google

ளுகப்போய்த் துரோவாப் பட்டினத்தி
லே நாங்கள் வரும்படி காத்திருந்தார்கள்.
6 —நாங்களோ புளியா அப்பப்பண்டிகை
நாட்களுக்குப் பின்பு, கப்பலேறிப் பிலி
ப்புப் பட்டினத்தைவிட்டு ஐந்துநாளைக்
குள்ளே துரோவாப்பட்டினத்திலே அவ
ர்களிடத்தில் வந்து ஏழுநாள் அங்கே
சஞ்சரித்தோம்.
7 அப்பொழுது வாரத்து முதல்நாளிலே
சீஷர் அப்பம் பிட்கும்படிக்குக் கூடி வந்
திருக்கையிற் பவுல் மறுநாளிலே புறப்பட
வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே
பேசிக்கொண்டு பாதியிராத்திரி யளவும்
8 பிரசங்கத்தை நீடித்துப்பேசினான்.-நாங்
கள் கூடியிருந்த மெத்தைவீட்டிலே அ
னேகவிளக்குகள் வைக்கப்பட்டிருந்தன.
9 —அப்பொழுது ஐத்திக்கு என்று பேர்
கொண்ட ஒரு வாலிபன் சாளரவாசலில்
உளுக்கார்ந்திருந்து, பவுல்மிகுந்த காலம்
பேசிக்கொண்டு வருகையிற், கன தூக்
கம் அடைந்து, நித்திரையினாற் சயிக்கப்
பட்டுச் சாய்ந்து, மூன்றாம் மெத்தையி
லிருந்து தாழ விழுந்து, மரித்தவனாய் எடு

Digitized by Google

10 க்கப்பட்டான்.-உடனே பவுல் இறங்கிப்
போய், அவன்மேலே விழுந்து அணைத்
துக்கொண்டு, பின்பு உயிர் இவனுக்குள்ளி
ருக்கின்றது ஆகையாற் கலக்கப்படாதிருங்
11 களென்று சொல்லி.—பின்பு ஏறிப்போ
ய், அப்பம்பிட்டுப் புசித்து, மிகுந்தநேர
ம் விடியற் காலமளவும் பேசிக்கொண்டு,
12 பின்பு புறப்பட்டான்.—அந்த வாலிபனை
யோ, அவர்கள் உயிருள்ளவனாக அழைத்
துவந்து, மிகவும் ஆறுதலடைந்தார்கள்.
13 பவுலோ, (அசுபட்டினம் வரைக்குந்)
தான்கால் நடையாய் நடக்க விரும்பி, நா
ங்கள் முன்னாலே கப்பலேறி, அவ்விடத்தி
ற்குப்போய் அங்கே தன்னை ஏற்றிக்கொள்
ளும்படி எங்களுக்கு உத்தரவு கொடுத்
த படியினாலே, நாங்கள் அசுபட்டினத்
திற்குப் போய் இருந்தோம்,— பின்பு
14 அவன் அவ்விடத்திலே எங்களோடே சே
ர்ந்தபொழுது, நாங்கள் அவனை ஏற்றிக்
கொண்டு மித்திலேனு பட்டினத்திற்
15 குப்போய்,— பின்பு அவ்விடத்தைவி
ட்டு, மறுநாளிலே சியுதீவுக்கு எதிராகச்
16 சென்று.-பவுல்எப்படியும்பெந்தேகோ

Digitized by Google

ஸ்துப்பண்டிகைநாளிலே எருசலேம்பட்
டணத்திலே சேர வேண்டுமென்று தீவிர
ப்பட்டபடியினாலே, அவன் ஆசியா நாட்
டிலே காலம் போக்காத படிக்கு, எபே
சுபட்டினத்தைக் கடந்து போகவேண்டு
மென்றுதீர்மானம்பண்ணினதால், மறுநா
ளிலே சாமுதீவையடைந்து துரோகில்லி
யோன் ஊர்த்துறையிலே தங்கிமறுநாளி
லேமிலேத்து பட்டினத்துக்குவந்தோம்.
17 மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவி
லுள்ள சபையின் மூப்பரை அழைத்துவ
ரும்படிக்கு, ஆளனுப்பினான். அவர்கள்
18 தன்னிடத்தில் வந்தபொழுது,—அவன்
அவர்களுடனே சொன்னது, நான் ஆசியா
நாட்டில் வந்த முதலாம்நாள் தொடங்கி
எல்லாக்காலங்களிலும் நான் உங்களுடனே
கூடவிருந்த வகையை அறிந்திருக்கிறீர்கள்
19 எல்லாவிதமான மனத்தாழ்மையோடும்
மிகுந்த கண்ணீரோடும் யூதருடைய தீ
மையான யோசனைகளால் எனக்குநேரி
ட்ட சோதனைகளோடும் நான் கருத்தரு
க்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்தேன்.
20 —பிரயோசனமானவைகளிலொன்றையு

Digitized by Google

ம் நான் மறைத்து வைக்கவில்லை. வெளிப
ரங்கமாயும் வீடுகள்தோறும் உங்களுக்கு
அறிவித்து, உங்களுக்கு உபதேசம்பண்
21 ணிக்கொண்டு வந்தேன்,—பராபரனிட
த்திற்கு மனந்திரும்புதலையும் நம்முடைய
கத்தராயிருக்கிற இயேசுக் கிறிஸ்துவை
விசுவாசித்துக் கொள்ளுதலையுங் குறித்து
நான் யூதருக்குங் கிரேக்கருக்குஞ் சாட்
22 சிகொடுத்தேன்.— இப்பொழுது நான்
ஆவியிலே கட்டுண்டு எருசலேமுக்குப்
போகிறேன். அங்கே எனக்கு எதிர்ப்ப
23 டுங் காரியங்களை நான் அறியேன்.—கயி
றுகளும் உபத்திரவங்களும் எனக்காக
வைத்திருக்கின்றனவென்று பரிசுத்த ஆவி
யானவர் பட்டினந்தோறும் (எனக்கு)
அறிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கி
24 றேன்.—ஆகிலும் அவைகளிலொன்றையு
ங் குறித்துக் கவலைப்படேன். என்பிரா
ணனையும் நான் அருமையென்று எண்
ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷித்
தோடேமுடிக்கவும், பராபரனுடையகிரு
பையை அறிவிக்கிற சுவிசேஷத்தைப்பிரச
ங்கம்பண்ணும்படிக்கு நான் கத்தராகிய

Digitized by Google

இயேசுவினிடத்திற் பெற்ற ஊழியத்தை
25 முடிக்கவும் விரும்புகிறேன். —அன்றியும்
நான் உங்களுக்குள்ளே திரிந்து பராபர
னுடைய இராச்சியத்தைப்பிரசங்கம்பண்
ணிக்கொண்டு வந்தேன். அதைக் கேட்ட
வர்களாகிய நீங்களெல்லாரும் இனி என்
முகத்தைப் பார்க்க மாட்டீர்கள் என்று
26 அறிந்திருக்கிறேன் - அப்படியிருக்கப் ப
ராபரனுடைய ஆலோசனையிலொன்றையு
ம் நான் மறைத்து வையாமல், யாவையும்
27 உங்களுக்கு அறிவித்தபடியினாலே,-உங்க
ளிலொருவன் கெட்டுப்போனால், அதினா
லே எனக்குக் குற்றம் வருவதில்லையென்
று இன்றைக்கே உங்களுக்குச் சாட்சியா
28 கச் சொல்லுகிறேன்.—ஆகையால் நீங்க
ள் உங்களைக்குறித்துப் பராபரன் தமது
சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொ
ண்ட தமது சபையாகிய ஆட்டுக்கூட்ட
ம் முழுவதையும் மேய்ப்பதற்குப் பரி
சுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக
வைத்தபடியால், அதைக்குறித்தும், எ
29 ச்சரிக்கையாயிருப்பீர்களாக. —மேலும்
நான் போன பின்பு ஆட்டுக்கூட்டத்தை

Digitized by Google

ந்தையோடே நடப்பியாமல், கொடிதா
யிருக்கிற கோணாய்கள் உங்களுக்குள்ளே
30 பிரவேசிக்கும்.—அதுவுமல்லாமல், உங்
களிலுஞ் சிலர் எழும்பிச், சீஷர்களைத்
தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி
க்கு மாறுபாடானவைகளைப் போதிப்பா
31 ர்களென்று அறிந்திருக்கிறேன்.—ஆனப
டியினாலே நீங்கள் விழித்துக்கொண்டு,
நான் மூன்று வருஷமாய் இரவும்பகலும்
அவனவனுக்குக் கண்ணீரோடே புத்தி
சொல்லிக்கொண்டு வந்ததை நினைத்துக்
32 கொள்வீர்களாக.—இப்பொழுது சகோ
தரரே! பராபரனுக்கும் அவருடையகிரு
பையையறிவிக்கிற வார்த்தைக்கும் உங்க
ளையொப்புக்கொடுக்கிறேன். அவரே உங்
களையேறக் கட்டவும், பரிசுத்தமாக்கப்
பட்ட எல்லாருமிருக்கிற இடத்திலே சுதந்
திரத்தையுங்களுக்குக் கொடுக்கவும் வல்
33 லமையுள்ள வராயிருக்கிறார்.—ஒருவனு
டைய வெள்ளியையாகிலும் பொன்னை
யாகிலும் உடுப்பையாகிலும் நான் இச்சி
34 த்ததில்லை.—நீங்கள் அறிந்திருக்கிறபடி,
நானும் என்னுடனே கூடவிருந்தவர்களு

Digitized by Google

ம், வேண்டிய பதார்த்தங்களை அடைய
ம்படிக்கு இந்தக் கைகளே வேலைசெய்த
35 ன.—அப்படியே வேலைசெய்து, பெல
னரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பா
ர்க்கிலுங்கொடுக்கிறதே பாக்கியமென்று
கர்த்தராகிய இயேசுசொன்ன வசனங்களை
நினைக்கவும்வேண்டுமென்றுஎல்லாவிதத்
திலுமுங்களுக்குக் காண்பித்தேனென்று
36 சொல்லி,—பின்பு முழங்காற்படியிட்டு,
அவர்களெல்லாரோடுங் கூட வேண்டுதல்
37 பண்ணினான்.—இனிமேல் நீங்கள் என்னு
டைய முகத்தைப் பார்க்கமாட்டீர்களெ
ன்று அவன்சொன்னவசனத்துக்காக அவ
ர்களெல்லாரும் அதிகமாய்த் துக்கப்பட்
38 டு,—மிகவும் அழுதுகொண்டு,பவுலின்
கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்
தஞ் செய்து பின்பு கப்பல்வரைக்கும் அ
வனுடனே கூடப்போய், அனுப்பி விட்
டார்கள்.

௨௧. அதிகாரம்.

1 நாங்கள் அவர்களை விட்டுப்பிரிந்து
துறைபேர்ந்தபின்பு, நேராய்ப்போய்க்,
கோஸ்தீவுக்கு வந்து, மறுநாளிலே ஊ

Digitized by Google

ரோது தீவிற்சென்று அதினின்றுபத்தா
2 ரா பட்டினத்துக்கு வந்து.—அங்கேபெ
னீக்கே தேசத்திற்குப்போக எத்தனமா
யிருந்த கப்பலைக்கண்டு, அதிலேறிப்போ
3 யிச் சீப்புருதீவைக் கண்டு,-அதையிடது
புறமாகவிட்டுச், சீரியாநாட்டுக்கு ஓடித்
தீறுபட்டினத்திலே அவர்கள் கப்பலின்
சரக்குகளை இறக்க வேண்டிய படியால்
4 அவ்விடத்திலே சேர்ந்து,-பின்பு சீஷரை
க்கண்டு, ஏழுநாள் அங்கே தங்கினோம். அவ
ர்கள் பவுலுவை நோக்கி, நீர் எருசலேமு
க்குப்போகக் கூடாதென்று ஆவியினாலே
5 சொன்னார்கள்.-நாங்களோ அந்த நாட்
களை முடித்தபின்பு புறப்பட்டுப் போன
பொழுது அவர்களெல்லாரும் மனைவிக
ளோடும் பிள்ளைகளோடுங் கூடப்பட்டி
னத்துக்குப் புறம்பே (சற்றுத் தூரம்)
வரைக்கும் எங்களை வழி நடத்தினார்கள்.
கடற்கரையிலே நாங்கள் முழங்காற் படி
6 யிட்டு வேண்டுதல்பண்ணி.—ஒருவரிடத்
திலே யொருவர் உத்தரவுவாங்கிக்கொண்
ட பின்பு நாங்கள் கப்பலேறினோம். அவ
ர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்

7 கள்.—நாங்கள் தீறுபட்டினத்தை விட்டு
ப், பித்தோலேமாயாப் பட்டினத்துக்கு
வந்து, கப்பல் யாத்திரையை முடித்து
ச் சகோதரரை வாழ்த்துதல் செய்து
ஒருநாள் அவர்களிடத்தில்த் தங்கினோம்,
8 மறுநாளிலே பவுலைச்சேர்ந்த நாங்கள்
புறப்பட்டுச்,செசாரியாப் பட்டினத்துக்
கு வந்து, எழுபேரிலொருவனாகிய பிலிப்
பென்னுஞ் சுவிசேஷகனுடைய வீட்டுக்
குப்போய், அவனிடத்திலே தங்கினோம்.
அவனுக்கு உண்டான குமாரத்திகளாகிய
நான்கு கன்னிகைகளுந் தீர்க்க தரிசனஞ்
9 சொல்லுகிறவர்களா யிருந்தார்கள், -மே
லும், நாங்கள் அனேகநாள் அங்கே தங்கியி
ருக்கையில், ஆகாபு என்று பேர்கொண்
ட ஒருதீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்
10 திருந்தான்.—அவன் எங்களிடத்தில் வந்
து, பவுலினுடைய கச்சையை யெடுத்
துத் தன்கைகளையுங் கால்களையுங் கட்டி
க்கொண்டு, இந்தக் கச்சையுடையவனை
எருசலேமிலுள்ள யூதர்கள் இப்படிக்க
ட்டிப், புறத்தேசத்தார்களுடைய கைக
ளில் ஒப்புக்கொடுப்பார்களென்று பரிசு

Digitized by Google

த்த ஆவி சொல்லுகிறாரென்றான்.—
12 அதை நாங்கள் கேட்டபொழுது, அவ
ன் எருசலேமுக்குப் போகாதபடிக்கு,
நாங்களும் அத்தலத்தாரும் வேண்டி
13 க் கொண்டோம்.— பவுலோ மாறுத்த
ரமாகச் சொன்னது, நீங்கள் அழுதுகொ
ண்டு, என் இருதயம் உடைந்து போகப்
பண்ணுகிறதென்ன, எருசலேமிலே நா
ன் கத்தராகிய இயேசுவின் நாமத்துக்கா
கக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்லமரி
ப்பதற்கும் எத்தனமாயிருக்கிறேனென்
14 றான்.—இப்படி அவன் சம்மதியாதபடி
யினாலே, நாங்கள் கருத்தருடைய சித்தம்
ஆகக் கடவதென்று அமைந்திருந்தோம்.
15 —அந்நாட்களுக்குப் பின்பு, நாங்கள்பிர
யாணச்சாமான்களைச் சேர்த்துக்கொண்
16 டு, எருசலேமுக்குப் போனோம்,—சே
சாரியாப் பட்டினத்திலுள்ள சீஷரிற் சில
ரும் எங்களுடனே கூடவந்து சிப்புருதீ
வானுமாய் மிகுர்தகாலஞ்சீஷனுமாயிரு
ர்த மினாசோனிடத்திலே தங்கும்படிக்கு
எங்களை யவனிடத்தில் அழைத்துவர்தா
17 ர்கள்.-நாங்கள் எருசலேமுக்குவந்தபொ

மூது சகோதரர் எங்களைச் சந்தோஷத்
18 தோடே ஏற்றுக்கொண்டார்கள்.—மறு
நாளிலே பவுலுவும்நாங்களும் யாக்கோபி
னிடத்திற்போனோம் எல்லாமூப்பர்களு
19 ம் அங்கே கூடிவந்தார்கள்.—அவர்களை அ
வன் வாழ்த்துதல் செய்து, பின்பு தன் ஊ
ழியத்தினாலே பராபரன் புறத்தேசத்தா
ருக்குள்ளே செய்தவைகளை ஒவ்வொன்றா
20 ய்விவரித்துச் சொன்னான்.-(அதை) அவ
ர்கள் கேட்டுக் கர்த்தரைத் தோத்திரம்ப
ண்ணிப், பின்பு அவனுடனே சொன்னது
சகோதரனே! யூதர்களில் அனேக ஆயிர
ம்பேர் விசுவாசிகளானதைப் பார்த்திருக்
கிறாய். அவர்களெல்லாரும் நியாயப்பிர
மாணத்துக்காக வயிராக்கிய முள்ளவர்க
21 ளாயிருக்கிறார்கள்.—நீயோ புறத்தேசத்
தாருக் குள்ளேயிருக்கிற யூதரெல்லாரு
ந் (தங்கள்) பிள்ளைகளை விருத்தசேதனம்
பண்ணவும்மற்ற முறைமைகளின்படியே
நடக்கவும் வேண்டுவதில்லையென்று சொ
ல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை
விட்டுவிலகும்படி உபதேசிக்கிறாயென்
று அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

Digitized by Google

22 —இப்பொழுது என்ன செய்யலாம்? நீ
வந்ததை அவர்கள் கேள்விப்பட்டு, மெய்
23 யாகக் கூட்டங் கூடுவார்கள்.—ஆகையால்
நாங்கள் உனக்குச் சொல்லுகிறபடி, நீ
செய்யவேண்டும் என்னவென்றால், நான்
குபேர் பிராத்தனை பண்ணிக்கொண்டு,
24 எங்களிடத்தில் இருக்கிறார்கள்.—அவர்க
ளை நீ சேர்த்து, அவர்களுடனே கூடச்
சுத்தி பண்ணிக்கொண்டு அவர்கள சிரச்
சவுரம் பண்ணுவதற்கு வேண்டிய செல
வு பண்ணுவாயாக. அப்படிச் செய்தால்
எல்லாருந் தங்களுக்கு உன்னைக் குறித்து
அறிவிக்கப்பட்ட தொன்றுமில்லையென்
றும், நீ தானே நியாயப்பிரமாணத்தைக்
கைக்கொண்டு நடக்கிறவனென்றும், அ
25 றிவார்கள்.—விசுவாசிகளான புறத்தேச
த்தாரோ, இப்படிப் பட்டவைகளைக் கை
க்கொள்ளாமல் விக்கிரகங்களுக்குப் படை
த்ததற்கும், இரத்தத்திற்கும் நெருக்கு
ண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கு
ம், மாத்திரம் விலகியிருக்கவேண்டுமென்
று நாங்கள் தீர்மானம்பண்ணி அவர்களுக்
கு எழுதி அனுப்பினோமே யென்றார்கள்.

Digitized by Google

26 அப்பொழுது பவுல் அந்த மனிதரைச்
சேர்த்துக் கொண்டுமறுநாளிலே அவர்க
ளுடனே கூடச்சுத்தம் பண்ணிப், பின்பு
தேவாலயத்திற் பிரவேசித்து, அவர்களில்
ஒவ்வொருவனுக்காகவேண்டிய பலிகொ
டுக்கப்படுமளவுஞ் சுத்தமாக்குதற்கேற்ற
நாட்களை நிறைவேற்றுவேனென்று அறி
27 வித்தான்.—அதற்கேற்ற ஏழுநாளும் நி
றைவேறிவருகையில், ஆசியாத் தேசத்தி
லிருந்து வந்த யூதர்கள் தேவாலயத்தி
லே அவனைக்கண்டு, கூட்டமெல்லாங் கூ
28 டிவர அழைத்து—அவன்மேற்கைகளைப்
போட்டு, ஓய், இஸ்ரவேலரே? உதவிசெ
ய்யுங்கள். இவனே நம்முடைய சனத்து
க்கும், வேதப்பிரமாணத்துக்கும், இந்த
த்தலத்துக்கும்,விரோதமாக எங்கும் எல்
லாருக்கும்போதித்து வருகிறான். அதுவு
மல்லாமல், இந்தத் தேவாலயத்திலே கி
ரேக்கரையும் அழைத்துவந்து; இந்தப்
பரிசுத்த தலத்தை அசுசிப்படுத்தினான்
29 என்று கூப்பிட்டார்கள்.—முன்பு எபே
சியனாகிய திரோப்பிமுவைப் பட்டினத்
திலே அவனுடனே கூட விருக்கக் கண்டி

Digitized by Google

ருந்து, பின்பு பவுல் அவனைத் தேவால
யத்திலே அழைத்துவந்தானென்று நினை
த்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.
30 —அப்பொழுது பட்டினம் முழுவதுங்
கலக்கப்பட்டது, மேலுஞ் சனங்கள் கூ
ட்டமாய் ஓடிவந்து, பவுலைப் பிடித்து
அவனைத் தேவாலயத்துக்குப் புறம்பே
இழுத்தார்கள் உடனே வாசல்கள் பூட்டப்
31 பட்டன.—மேலும் அவர்கள் அவனைக்
கொலை செய்ய வகைதேடுகையில் எருச
லேம் முழுவதுங் கலக்கம் அடைந்திரு
க்கிறதென்று போர்ச் சேவகரின் சேனா
32 பதி கேள்விப்பட்டு.—உடனே போர்ச
சேவகரையும் அவர்களுடைய தலைவரை
யுஞ் சேர்த்துக்கொண்டு அவர்களிடத்து
க்கு ஓடினான் சேனாபதியையும் போர்ச்
சேவகரையும் அவர்கள் கண்டபொழுது
33 பவுலை அடிப்பதை விட்டார்கள்.-அப்
பொழுது, சேனாபதி சேர்ந்து, அவனைப்
பிடித்து, இரண்டு சங்கிலிகளினாலே கட்
டும்படி சொல்லி, இவன் யாவனென்றும்,
என்ன செய்தானென்றும், விசாரித்தான்.
34 -அதற்குச் சனங்கள் பலவிதமாய்க் கூப்பி

Digitized by Google

ட்டார்கள். அப்பொழுது கலகத்தினாலே
அவன் நிச்சயத்தை அறியக் கூடாதிருந்த
படியால், அவனைக் கோட்டைக்குக் கொ
35 ண்டுபோகச்சொன்னான்.-அவன் படிகள்
மேல் வந்தபொழுது, கூட்டம்பின்செ
ன்று, அவனைக் கொலைசெய்யுமென்று
36 கூப்பிட்டுக்கொண்டு—உக்கிரமாயிருந்த
படியினாலே, சேவகர் அவனைத் தூக்கி
37 யெடுத்துக்கொண்டுபோனார்கள்.—அவ
ர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே
கொண்டுபோக எத்தனமாயிருக்கையில்
அவன் சேனாதிபதியை நோக்கி, நான் உம்
முடனே ஒரு வார்த்தை பேசலாமா என்
றான். அதற்கவன்சொன்னது, கிரேக்கப்
38 பாஷை யுனக்குத்தெரியுமோ,—இந்தக்
காலத்துக்கு முன்னே கலகமுண்டாக்
கி, நாலாயிரங் கொலைபாதகரை வனாந்தர
த்திலே கொண்டுபோன எகிப்பத்தான்
39 நீயல்லவோவென்றான்.—பவுல் சொன்
னது, நான் கிலிக்கியாநாட்டிலுள்ள கீர்த்
திபடைத்திருக்கிறதருசுபட்டினத்தானாகி
யயூதன்நான், சனங்களுடனேபேசும்படி
எனக்குத்தரவுகொடுக்கவேண்டுமென்று

உம்மை வேண்டிக் கொள்ளுகிறேனென்
40 றான்.—அவனுக்குத்தரவுகொடுத்தபின்பு
பவுல், படிகளின்மேலே நின்று கையினா
லே சனங்களுக்குச் சமிக்கைகாட்டினான்.
மிகுந்த அமைதலுண்டான பொழுது,
அவன் எபிரேயப்பாஷையிலே சத்தமி
ட்டுச் சொன்னது.

௨௨. அதிகாரம்.

1 சகோதரர்களே, பிதாக்களே, உங்களு
க்கு நான் இப்பொழுது சொல்லும் உத்
தரவுக்குச் செவி கொடுப்பீர்களாகவென்
2 று சொன்னபொழுது—எபிரேயப்பா
ஷையிலே தங்களுடனே பேசுகிறதை அ
வர்கள் கேட்டு, அதிக அமைதலாயிருந்
தார்கள். அவன் பின்னுஞ் சொன்னது,—
3 நான் யூதன், கிலிக்கியா நாட்டிலுள்ள
தருசுப் பட்டினத்திலே நான் பிறந்து,
பின்பு இந்தப்பட்டினத்திலே கமாலியே
லின் பாதத்தினிடத்தில் வளர்ந்து, முன்
னோர்களுடைய வேதப் பிரமாணத்தின்
படியே கெட்டியாய்ப் போதிக்கப்பட்டு,
இன்றைத்தினம் நீங்களெல்லாருமிருக்கி

Digitized by Google

றதுபோலப், பராபரனைக்குறித்து வயி
4 ராக்கியமுயிருந்து,-இந்த மார்க்கத்தாரை
மரணபரியந்தந் துன்பப்படுத்திப், புரு
ஷரையும் ஸ்திரிகளையுங் கட்டிச், சிறைச்
சாலைகளுக்கு ஒப்புக்கொடுத்து வந்தேன்
5 —அதற்குப் பிரதான ஆசாரியரும் எல்
லாமூப்பர்களுஞ்சாட்சிகொடுப்பார்கள்.
மேலும் அவர்கள் கையிலே நான் சகோ
தரருக்கு நிருபங்களை வாங்கிக்கொண்டு,
தமஸ்கு வூரிலிருக்கிறவர்களும் ஆக்கினைக்
குள்ளாக்கப்படுவதற்கு அவர்களைக் கட்டி
எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, அ
6 வ்விடத்துக்குப் போனேன்.—அப்படி
நான் பிரயாணப்பட்டுத், தமஸ்கு ஆருக்
குச் சமீபமான பொழுது, மத்தியான
வேளையிலே சடுதியாய் வானத்திலிருந்து
மிகுந்த ஒளியுண்டாகி, என்னைச் சுற்றிப்
7 பிரகாசித்தது.—உடனே நான் தரையி
லே விழுந்து, சவுலே! சவுலே! ஏன் நீ என்
னைத் துன்பப்படுத்துகிறாய்? என்று என்
னுடனே சொல்லுகிற சத்தத்தைக் கேட்
8 டேன்.—அதற்கு நான் ஆண்டவரே! நீர்
யார்? என்றேன். அவர் என்னுடனே

Digitized by Google

சொன்னது, நீ துன்பப்படுத்துகிற நாச
ரேத்தூரானாகிய இயேசுவே நான் என்று
9 ர்.—என்னுடனே கூடவிருந்தவர்கள் அ
ந்த ஒளியைக் கண்டு, பயமடைந்தார்கள்.
என்னுடனே பேசினவருடைய சத்தத்
10 தையோ அவர்கள் கேட்டதில்லை.—பின்
னும் நான், ஆண்டவரே! நான் என்ன
செய்யவேண்டும்? என்றேன். அதற்குக்
கருத்தர் சொன்னது, நீ எழுந்து, தமஸ்
குவூருக்குப்போ, நீ செய்யும்படிக்குக்
கட்டளையிடப்பட்ட யாவும் அங்கே உன
11 க்குச் சொல்லப்படுமென்றார்.—பின்பு
நான் அந்த ஒளியின் மகிமையினாலே
பார்வை அற்றுப்போனபடியால், என்
னோடிருந்தவர்களாற் கைலாகு கொடுத்
தழைக்கப்பட்டுப் போய்த், தமஸ்குவூரி
12 ற்சேர்ந்தேன்.— அப்பொழுது வேதப்
பிரமாணத்தின் படியே பத்தியுள்ளவனு
மாய் அங்கே குடியிருக்கிற சகல யூதரா
லும் நல்லவனென்று நற்சாட்சி பெற்றவ
னுமாயிருக்கிற அனனியாவென்னும் ஒரு
13 வன் என்னிடத்தில் வந்து நின்று,—என்
னை நோக்கிச், சகோதரனாகிய சவுலே!

Digitized by Google

பார்வை அடைவாயாகவென்றான். அந்
நேரமே நான் அவனை நோக்கிப் பார்த்
14 தேன்.—பின்பு அவன் சொன்னது, நீ
கண்டு கேட்டவைகளைக் குறித்து எல்லா
விதமான மனிதருக்குஞ் சாட்சிகொடுக்
15 கிறவனாயிருக்கும்படிக்கு,—நமது முன்
னோர்களின் தேவன் உன்னை முன் குறித்
திருந்து, தம்முடைய சித்தத்தை நீ அறி
யவும் நீதிபரரைக் காணவும் அவருடைய
திருவாயின் சத்தத்தைக் கேட்கவும் பண்
16 ணினார்.—இப்பொழுது நீ தாமதிக்கிற
தென்ன? நீ யெழுந்து, கர்த்தருடைய
நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்
நானம் பெற்று, உன் பாவங்களை நீக்கு
17 வாயாக வென்றான்.—பின்பு நான் எருச
லேமுக்குத் திரும்ப வந்து, தேவாலயத்
திலே வேண்டுதல் பண்ணிக்கொண்டிரு
க்கையில், நான் ஞானதிருட்டி அடைந்
18 து, அவரைத் தரிசித்தேன்.—அவர் என்
னுடனே, நீ என்னைக் குறித்துச் சொல்
லுஞ் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்
ளாமலிருப்பதால் நீ தாமதப்படாமற் சீக்
கிரமாய் எருசலேமைவிட்டுப் போவென்

Digitized by Google

19 றார்.—அப்பொழுது நான் சொன்னது,
ஆண்டவரே! உம்மை விசுவாசித்தவர்க
ளை நான் காவலில் வைத்து ஆலயங்களி
20 லே அவர்களை அடிப்பித்திருந்ததையும்,-
உமக்குச் சாட்சியாகிய இஸ்தேவானுடை
ய இரத்தஞ் சிந்தப்பட்டபொழுது, நா
னும் அருகே நின்று, அவனைக் கொலை
செய்வதற்குச் சம்மதித்து, அவனைக்கொ
லை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத
துக்கொண்டதையும் இவர்கள் அறிந்திரு
21 க்கிறார்களே யென்றேன்.—அவர் சொன்
னது, நான் உன்னைத் தூரமாய்ப் புறத்
தேசத்தாரிடத்திற்கு அனுப்புவேன். ஆ
தலால் நீ போவென்று சொன்னார் என்
றான்.

22 இந்த வார்த்தை வரைக்கும் அவர்கள்
அவனுக்குச் செவிகொடுத்து, இப்படிப்
பட்டவனைப் பூமியிலிருந்து அகற்றவே
ண்டும், இவன் உயிரோடிருக்கிறது நியா
யமல்லவென்று மிகுந்த சத்தமாய்க் கூப்
23 பிட்டார்கள்.—இப்படி அவர்கள் கூக்கு
ரலிட்டுத் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றிப்
போட்டு, ஆகாசத்திலே புழுதி தூற்றிச்

Digitized by Google

24 கொண்டுவருகையிற்,—சேனாபதி அவ
னைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோ
கும்படி கட்டளையிட்டுப், பின்பு அவர்க
ள் அவன் மேல் இப்படிக் கூக்குரலிட்ட
தற்கான காரணத்தை அறியும்படிக்கு,
அவனைச் சவுக்காலே அடித்து விசாரிக்க
25 ச்சொன்னான்.—அந்தப்படி அவர்கள் அ
வனை வார்களினாலே அழுந்தக் கட்டுகையி
ற், பவுல் சமீபமாய் நின்ற படைத்தலைவ
னை நோக்கி, உரோமனுமாய் நியாயமாய்
ஆக்கினைக் குட்படாதவனுமா யிருக்கிற
மனிதனை நீங்கள் அடிக்கிறது நியாயமா!
26 என்றான்.—தலைவன் அதைக் கேட்டுச் சே
னாதிபதியிடத்துக்குப்போய், அந்த மனி
தன் உரோமன். ஆதலால் நீர் செய்வதை
க்குறித்துச் சாவதானமாயிருக்கவேண்டு
27 மென்று அறிவித்தான்.—அப்பொழுது
சேனாதிபதி பவுலவினிடத்தில் வந்து நீ
உரோமனா? எனக்குச் சொல்லென்றான்.
அதற்கு அவன் அப்படித்தான் என்றான்.
28 —சேனாதிபதி சொன்னது, நான் மிகுந
த திரவியத்தினாலே இந்த மேன்மையைச்
சம்பாதித்தேன் என்றான். அதற்குப் பவு

Digitized by Google

ல் சொன்னது, நானோ அப்படிப்பட்ட
29 வனாகப் பிறந்தேன் என்றான்.—ஆதலால்
அவனை அடித்து விசாரிக்கும்படி எத்த
னமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்
டார்கள், மேலும், சேனாபதி அவன் உ
ரோமனென்று அறிந்து, தான் அவனைக் க
30 ட்டினதினாலே பயந்தான்.-மறுநாளிலே
பவுல் யூதரால் ஏற்படுத்தப்பட்ட குற்ற
மின்னதென்று அவன் நிச்சயத்தை அறிய
மனதாய் அவனுடைய கட்டை அவிழ்க்
கும்படி செய்து, பிரதான ஆசாரியரை
யும் அவர்களுடைய பெரிய சங்கத்தாரெ
ல்லாரையுங் கூடிவரும்படி கட்டளையிட்
டுப், பின்பு பவுலைத் தாழக் கொண்டு
போய், அவர்களுக்கு முன் நிறுத்தினான்.

உ௩. அதிகாரம்.

1 அப்பொழுது பவுல் பெரிய சங்கத்
தாரை நோக்கிச் சொன்னது, சகோதர
ர்களே! இந்நாளவரைக்கும் என் மனசு
எனக்கு எவ்விதத்தாலும் நற் சாட்சிகொ
டுக்கத்தக்கதாகப் பராபரனுக்குமுன்பாக
நடந்துவந்தேன் என்று சொன்னபொழு

Digitized by Google

2 து,—பிரதான ஆசாரியனாகிய அனனிய
அவனுக்குச் சமீபமாய் நின்றவர்களை
நோக்கி, இவன் வாயிலே அடியுங்களெ
3 ன்று கட்டளையிட்டான்.—அப்பொழுது
பவுல் அவனுடனே சொன்னது, சார்து
பூசப்பட்ட சுவரே, பராபரனே உம்மை
அடிப்பார். நியாயப்பிரமாணத்தின்படி
எனக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படி
உளுக்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமா
ணத்திற்குத் தப்பிதமாய் என்னை அடிக்க
4 ச்சொல்லலாமா? என்றான்.—சமீபத்தில்
நின்றவர்கள் சொன்னது, பராபரனுடை
ய பிரதான ஆசாரியனையா வைகிறாய்? என்
5 றார்கள்.—அதற்குப் பவுல் சொன்னது,
சகோதரரே! இவர் பிரதான ஆசாரியன்
என்று நான் நினைக்கவில்லை. உன் சனத்தி
ன் தலைவனைக் குறித்துத் தீது சொல்லாதி
ருப்பாயாக வென்று எழுதியிருக்கின்ற
6 தே என்றான்.—பின்பு அவர்களில ஒருபங்
கு சதுசேயரென்றும், ஒருபங்கு பரி
சேயரென்றும் பவுல், அறிந்து, மிகுந்த
சத்தமாய்ச் சங்கத்தாருக்குள்ளே கூப்பி
ட்டுச்சொன்னது, சகோதரர்களே! நான்

Digitized by Google

பரிசேயனுமாய் ஒரு பரிசேயனுடைய ப
கனுமாயிருக்கிறேன். நித்திய சீவனுக்கே
ற்ற நம்பிக்கையைக் குறித்தும், மரித்தோ
ர் உயிரோடெழுந்திருக்குதலைக் குறித்து
ம், நான் நியாயத்தீர்ப்பை அடையும்படி
யிருக்கிறேன் என்று சொன்ன பொழுது,
7 —சதுசேயர் உயிரோடெழுந்திருக்குத
லுமில்லை. அரூபியும், ஆவியும் இல்லையெ
ன்று சொல்லுகிறபடியினாலும், பரிசே
ரோ, அவ்விரண்டும் உண்டென்று அறிக்
8 கைபண்ணுகிறபடியினாலும், —பரிசே
ருக்குஞ் சதுசேயருக்கும் வாக்குவாதமு
ண்டாயிற்று. கூட்டமும் பிரிவினை அடை
9 ந்தது.—மிகுந்த கூக்குரல் உண்டாயிற்
று. அப்பொழுது பரிசேயரைச் சேர்ந்த
வேதபாரகர் எழுந்து, மிகவும் விரோத
மாய்ப்பேசி, இந்த மனிதனிடத்தில் ஒரு
பொல்லாங்கையுங்காணேம். ஒரு ஆவி அல்
லது ஒரு தூதன் இவனுடனே பேசினது
ண்டானால், (அதினாலென்ன?) என்றார்கள்.
10 —பின்பு மிகுந்த கலக முண்டானபொ
ழுது, பவுல் அவர்களாற் பீறுண்டு போ
வானென்று, பெரிய சேனைத்தலைவன் ப

Digitized by Google

யத்து அவனை அவர்களிலிருந்து பறித்து
க்கோட்டைக்குக்கொண்டுபோகும்படி
போர்ச்சேவகருக்குக் கட்டளையிட்டான்.
11 –அன்று இராத்திரியிலே கருத்தர் பவுலு
வின் அருகேநின்று, பவுலுவே திடன்கொ
ள். நீ என்னைக் குறித்து எருசலேமிலே
சாட்சி கொடுத்ததுபோல, உரோமைபு
ரியிலேயுஞ் சாட்சி கொடுப்பாயென்றார்.
12 விடியற்கால மானபொழுது, யூதரிற்
சிலர் இரகசியமாய்க் கூடி அந்தப் பவுலு
வை நாங் கொலை செய்யுமளவும் புசி
யாமலுங் குடியாமலும் இருப்போமாக
வென்று சபதம் பண்ணிக்கொண்டு தங்க
ளுக்குள்ளே கட்டுப்பாடு செய்தார்கள்.
13 —இப்படிச் சபதத்தினாலே கட்டுப்பாடு
செய்தவர்கள், நாற்பதுபேருக் கதிகமா
14 யிருந்தார்கள்.—அவர்கள் பிரதான ஆசா
ரியரிடத்திலும் மூப்பரிடத்திலும் போ
ய்ச் சொன்னது, நாங்கள் பவுலுவைக்
கொலைசெய்யுமளவும் ஒன்றையும் ருசிபா
ர்க்கக்கூடாதென்று கொடிய சபதம்
15 பண்ணிக்கொண்டோம்.—ஆனபடியினா
லே நீங்கள்பெரிய சங்கத்தாருடனேயுங்

Digitized by Google

கூட அவனுடைய காரியத்தை அதிகதிட்
டியாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போ
லச், சேனாதிபதிக்குக் காண்பித்து, அவர்
நாளைக்கு அவனை உங்களிடத்திற்கொண்டு
வரும்படி கேட்பீர்களாக. அப்பொழுது
அவன் உங்களுக்குச் சமீபமாய் வருமுன்
னே, நாங்கள் அவனைக்கொலைசெய்ய எத்
16 தனமாயிருக்கிறோமென்றார்கள்.-அந்தச்
சற்பனையைப் பவுலினுடைய சகோ
தரியின் குமாரன் கேள்விப்பட்டு, உட
னே கோட்டைக்குப் போய்ப், பவுலுவு
17 க்கு அறிவித்தான்-அப்பொழுது பவுல்ப
டைத்தலைவரிலொருவனை அழைத்து, இந்
தவாலிபன் சேனாபதிக்கு ஒருகாரியத்தை
அறிவிப்பான். ஆகையாலிவனை அவரிடத்
திற்குக்கொண்டுபோக வேண்டுமென்று
18 ன்.-அந்தப்படி அவன் அவனைச்சேர்த்து
ச் சேனாதிபதியிடத்திற்கொண்டுபோய்க்
காவலில்வைக்கப்பட்டிருக்கிற பவுல் என்
னை அழைத்து, உமக்கும் ஒரு காரியத்தை
ச் சொல்லவேண்டுமென்றிருக்கிற இந்த
வாலிபனை உம்மிடத்திற்குக்கொண்டுபோ
கும்படி என்னை வேண்டிக்கொண்டான்

19 என்றான்.—அப்பொழுது சேனாபதி அ
வனுடைய கையைப் பிடித்துத், தனிமை
யான இடத்திற்கொண்டுபோய், நீ யெ
னக்கென்ன அறிவிக்க விரும்புகிறாயென்
20 றுகேட்டான்.-அவன் சொன்னது யூதர்
கள் பவுலின் காரியத்தை அதிககெட்டி
யாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல்
வந்து, நீர் நாளைக்கு அவனைப்பெரிய சங்
கத்தாரிடத்திற்குக் கொண்டு வரும்படிக்
கு உம்மைவேணடிக் கொள்ளத் தீர்மான
ம்பண்ணினார்கள். அவர்களுக்குச் சம்மதி
21 யாதிருப்பீராக.- என்னத்தினாலெனில் அ
வர்களில், நாற்பதுபேருக் கதிகமானபே
ர்கள் அவனைக்கொலைசெய்யுமளவும், புசி
க்கவுங்குடிக்கவும் மாட்டோமென்று சப
தம்பண்ணிக்கொணடு, அவனுக்காக ஒளி
த்திருந்து, இப்பொழுது உம்முடைய உ
த்தரவு வரக்காத்துக்கொணடு எத்தனமா
22 யிருக்கிறார்களென்றான்.—அப்பொழுது
சேனாதிபதிசொன்னது நீ இவைகளை என
க்கறிவித்ததை ஒருவருக்குஞ் சொல்லாதி
ரு என்று வாலிபனுக்குக் கட்டளையிட்டு,
23 அவனையனுப்பிப்,—பின்பு படைத்தலை

Digitized by Google

வரிருவரை அழைத்துச், சேசாரியாட்
பட்டினத்துக்குப் போகும்படிக்கு, இரு
நூறு போர்ச் சேவகரையுங் குதிரைப்
போர்ச்சேவகர் எழுபதுபேரையும் இ
ருநூறு வில்லுக்காரரையும் இராத்திரியி
ன் மூன்றும் மணிநேரத்திற்கு எத்தனம்
24 பணணுங்கள்.—அல்லாமலும் பவுலை
யேற்றித், துரையாகிய பேலிக்குசுவினிட
த்திற்குப் பத்திரமாய்க் கொணடுபோகு
ம்படிக்கு வாகனங்களிலிருக்கும்படி செ
25 ய்யுங்களென்று சொல்லிப்.—பின்பு எழு
26 தின நிருபத்தின் விவரமாவது,—கனம்
பொருந்திய துரையாகிய பேலிக்குசுக்கு
க் கிலவுதியுலீசியா சவுக்கியமுணடாகவாழ்
27 த்துகிறேன்.—இந்தமனிதன், யூதர்களா
ற் பிடிக்கப்பட்டு, அவர்களாற் கொலைசெ
ய்யப்படுவதற் கேதுவாயிருந்தபொழுது
நான்போர்ச்சேவகருடனேகூடப்போய்
இவனையிழுத்துக்கொணடு வந்து, இவன்
28 உரோமனென்றறிந்தேன்,—அவர்கள் இ
வன்மேற் சாற்றினகுற்றத்தை நான் அறி
யமனதாய், இவனை அவர்களுடைய பெ
ரிய சங்கத்திற்குக் கொண்டுபோனேன்.

Digitized by Google

29 அங்கே அவன் மரணத்துக்காகிலுங் கட்
டுகளுக்காகிலும் ஏற்ற குற்றமில்லாமல்
அவர்களுடைய வேதத்திற்குரிய தருக்க
ங்களைக் குறித்துக் குற்றஞ்சாற்றப்பட்ட
வனென்று எனக்குத் தெரியவந்தது,—
30 பின்பு யூதர்கள் இந்தமனிதனுக்கு விரோ
தமாய் இரகசியமான யோசனை பண்ணி
க்கொள்ளுகிறார்களென்று, எனக்குத்தெ
ரிந்தபொழுது, நான் உடனே, இவனை உ
ம்மிடத்திற்கு அனுப்பிக், குற்றஞ்சாற்று
கிறவர்களுந் தாங்கள் இவனுக்கு விரோத
மாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு
முன்பாகப் போய்ச் சொல்லும்படி கட்
டளையிட்டேன். சுகமாயிருப்பீராகவெ
ன்றெழுதி யனுப்பினான்.
31 போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளை
யிடப்பட்டபடியே பவுலைச் சேர்த்
துக்கொண்டு, இராத்திரியிலே, அந்திப்ப
32 த்திரி யூருக்குக்கொண்டுபோய்,—மறு
நாளிலே குதிரைப போர்ச்சேவகரை அ
வனுடனேகூடப்போக அனுப்பித்தாங்க
ளே கோட்டைக்குத்திரும்பினார்கள்.—
33 அவர்கள் செசாரியாப் பட்டினத்திற்சே

Digitized by Google

ர்ந்து, நிருபத்தைத் துரைக்குக்கொடுத்
துப்பவுலுவையும்அவன்முன்பாக நிறுத்
34 தினார்கள்.—துரையதைவாசித்து, நீ பெ
ந்தத்தேசத்தானென்று கேட்டுக்; கிலீக்
35 கிய தேசத்தானென்று அறிந்து,–பின்பு
உன்மேற் குற்றஞ்சாற்றுகிறவர்களும்வந்
திருக்கும்பொழுது, உன்னிடத்தில் விசா
ரிப்பேனென்று சொல்லி, ஏரோதேயின்
அரண்மனையிலே அவனைக்காவலில் வைக்
கும்படி கட்டளையிட்டான்.

௨௪. அதிகாரம்.

1 ஐந்துநாளைக்குப்பின்புபிரதான ஆசா
ரியனாகிய அனனியா மூப்பரோடும் பே
ச்சிற் கெட்டிக்காரனாகிய தெருத்துல்லு
வோடுங் கூடவந்து, பவுலுவுக்குவிரோத
மாய்த் துரையினுடைய சன்னிதானத்திற்
2 பிரவேசித்தார்கள்—அவன் அழைக்கப்
பட்டுவந்தபொழுது, தெருத்துல்லு கு
3 ற்றமேற்படுத்தினது,—மிகுந்த கனம்
பொருந்திய பேலீக்குசுவே, உம்மாலே
நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்
தை அனுபவிக்கிறதையும் உம்முடைய

Digitized by Google

விசாரிப்பினாலே இந்தத்தேசத்தாருக்கா
கமிகுந்த மகிமையுள்ள கிரியைகள் நட
க்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்
கும்பெரிய உபகாரமென்றெண்ணி
4 அறிக்கையிடுகிறோம்.--நானோ அதிகவா
ர்த்தைகளாலே உமக்கு வருத்தம்பண்ணா
தபடிக்கு, நாங்கள் சுருக்கமாய்ச் சொல்
வதை நீர் உம்முடைய பொறுமையோ
டே கேட்கவேண்டிக்கொள்ளுகிறேன்—
5 என்னவென்றால் இந்தமனிதன் பெருவா
ரிக்காய்ச்சலைப்போலப் பூச்சக்கரத்திலு
ள்ள சகல யூதர்களுக்குள்ளுங் கலகமெழு
ப்பி யிருக்கிறதையும் நாசரேத்தாரென்
னுங் கெட்டபிரிவுக்கு முதலாளியாயிருக்
6 கிறதையும்,-எங்கள் தேவாலயத்தை அசு
சிப்படுத்தத் தேடினதையும் நாங்கள் க
ண்டறிந்து இவனைப்பிடித்து எங்கள்
வேதநூலின்படியே இவனுக்கு நியாயத்
தீர்ப்புக்கொடுக்க மனதாயிருந்தோம்—
7 அப்பொழுது சேனாதிபதியாகிய லீசியா
வென்பவர் வந்து மிகுந்தபலபந்தமாய்
இவனை எங்கள்கைகளிலிருந்து பறித்துக்
8 கொண்டுபோய்.-இவன்மேற் குற்றஞ்சா

Digitized by Google

ற்றுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படிக
ட்டளையிட்டார். நீர் இவனிடத்திற் கெட்
டியாய் விசாரித்தால் நாங்களிவன்மேற்
குற்றஞ்சாற்றுகிற காரியங்களியாவையும்
9 அறிந்துகொள்வீரென்றான் --மற்றயூதர்
களும் அதற்கிசைந்து இப்படியே இரு
க்கிறதென்று சொன்னார்கள்.
10 அப்பொழுது பவுல் பேசுகிறதற்குத்
துரையினாலே சமிக்கை பெற்றபின்பு அ
வன் சொன்னமாறுத்தரமாவது, அநேக
வருஷம் நீர் இந்தத்தேசத்தாருக்கு நியா
யாதிபதியாயிருக்கிறதைநான் அறிந்து அதி
கசந்தோஷத்தோடே யெனக்காக உத்த
11 ரவு சொல்லுகிறேன் —நீர் அறியும்படி
நான் பராபரனைத்தொழுதுகொள்ளும்ப
டிக்கு எருசலேமுக்குப் போனது முதல்
இதுவரைக்கும் பன்னிரண்டுநாள் மாத்தி
12 ரமாயிற்று--தேவாலயத்திலே தான் ஒரு
வரோடுந் தருக்கம்பண்ணவும் ஆலயங்க
ளிலாகிலும் பட்டிணத்திலாகிலுஞ் சனங்க
ளுக்குள்ளே கலகம் எழுப்பவும் இவர்கள்
13 கண்டதுமில்லை --இப்பொழுது என்
மேற் சாற்றுகிற குற்றங்களுக்குச் சாட்சி

Digitized by Google

14 களைக் காணபிக்கவும் மாட்டார்கள்.—நா
னோ உமக்கு அறிக்கையிடுகிற தென்ன
வென்றால் இவர்கள் கெட்ட பிரிவு என்று
சொல்லுகிற மார்க்கத்தின்படியே நான்
நியாயப் பிரமாணத்திலேயுந் தீர்க்கதரிச
னப் புத்தகங்களிலேயும் எழுதியிருக்கிற
யாவையும் விசுவாசித்துக்கொண்டு எங்க
ள் முன்னோர்களுடைய தேவனுக்காராத
15 னைசெய்து—மரித்தோராகிய நீதிமான்
களும் அநீதிமான்களும் மறுபடியும்
உயிரோடெழுந்திருப்பார்களென்று இவ
ர்களும் அடைந்துகொண்டிருக்கிற நம்
பிக்கையைப் பராபரன்மேல் வைத்திருக்
16 கிறேன்—மேலும் அதினாலே நான பரா
பரனுக்கும் மனிதருக்கும் முன்பாக எப்
பொழுதும் நற்சாட்சிகொடுக்கிற மனசு
ள்ளவனாயிருக்கும்படி முயற்சிப் படுகி
17 றேன்—அனேக வருஷங்களுக்குப் பின்
பு நான் என்தேசத்தாருக்குத் தருமங்
களை யொப்புக் கொடுக்கவும் பலி காணி
18 க்கைகளைச் செலுத்தவும் வந்தேன்- கூட்
டமில்லாமலும் அமளியில்லாமலும் நான்
தேவாலயத்தில் அப்படிச் செய்து சுத்த

ம்பணணிக்கொண்டிருக்கையில் ஆசியாத்
தேசத்தாரான சிலயூதர்கள் என்னைக்கண்
19 டார்கள் - அவர்களிடத்தில் எனக்குவிரோ
தமான காரியமுண்டானால் அவர்களே
யுமக்குமுன்பாக இங்கேவந்து குற்றஞ்
20 சாற்றவேண்டும். - அல்லது நான் பெரிய
சங்கத்தாருக்கு முன்பாக நின்றபொழு
து என்ன குற்றத்தை யென்னிடத்திற்
கண்டார்கள்? அதை யிவர்களுஞ்சொல்
21 லலாமே— நான் அவர்களுக்குள்ளே நின்
றபொழுது மரித்தோர் உயிரோடெழுந்
திருப்பார்களென்கிறதைக் குறித்து நான்
இன்றைக்கு உங்களால் நியாயத்தீர்ப்ப
டையும்படி யிருக்கிறேனென்று நான்
கூப்பிட்டேன், இந்த ஒரே சொல்லினிமி
த்தமே யன்றிவேறொன்றி னிமித்தமுங்
குற்றங் காணவில்லையேயென்றான்.
22 பேலிக்குசு என்பவன் அதைக்கேட்டு
இந்தமார்க்கத்தைக் குறித்து அதிகவிபர
மாயறிந்த பின்பு சேனாதிபதியாகிய லீசி
யா வரும்பொழுது நான் உங்கள் காரியத்
தைக்கெட்டியாய் விசாரித்துக்கொள்வே
னென்று சொல்லி அவர்களையனுப்பி: -

Digitized by Google

23 பின்பு பவுலுவைக் காத்துக்கொள்ளும்
படிக்கும் அவனுக்குக் கண்டிப்புச் செ
ய்யாதபடிக்கும் அவனுடைய மனிதர்
களிலொருவனாகிலும் அவனிடத்தில் வந்
து அவனுக்கூழியஞ்செய்வதற்குத் தடை
பண்ணாதபடிக்குந் தலைவனுக்குங் கட்ட
ளையிட்டான்.
24 சிலநாளுக்குப் பின்பு, பேலிக்குசு யூத
ஸ்திரியாகிய தன் மனைவி துருசில்லாளுட
னே கூடவந்து, பவுலுவையழைப்பித்து
க், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை
க், குறித்து அவன் சொல்லக்கேட்டான்.
25 —அந்தப்படி யவன் நீதியையும் இச்சை
அடக்கத்தையும் பின்வரும் நியாயத் தீர்
ப்பையுங் குறித்துப் பேசிக்கொள்ளுகை
யிற் பேலிக்குசு பயமடைந்து, இப்பொ
ழுது நீ போகலாம், இனிமேல் எனக்கு
ச் சாவகாச மிருக்கும்பொழுது, உன்னை
மறுபடியும் அழைப்பிப்பேனென்றான்,
26 —மேலும் அவன் பவுலுவை விடுதலை
பண்ணும்படியாய்த் தனக்கு அவன் பண
ங்கொடுப்பான் என்று நம்பிக்கையாயிரு
ந்தான். அதினிமித்தமே அவன் அனேக

Digitized by Google

தரம் அவனை அழைப்பித்து, அவனுட
னே பேசிக்கொண்டான்.
27 இரண்டு வருஷமானபொழுது பேலி
க்குசுக்குப் பதிலாகப் பொர்க்கியு பெஸ்
து என்னும் மறு துரை வந்தான். அப்
பொழுது பேலிக்குசு யூதர்களுக்குச் சந்
தோஷஞ் செய்ய மனதாய்ப் பவுலை
க்காவலில் வைத்துவிட்டுப்போனான்.

உரு. அதிகாரம்.

1 பெஸ்து என்பவன் துரைத்தனத்திற்
கு வந்து மூன்றுநாளுக்குப் பின்பு சே
சாரியாப் பட்டினத்திலிருந்து எருசலே
2 மூக்குப் போனான்—அப்பொழுது பிர
தான ஆசாரியனும் யூதருடைய பெரி
யோர்களும் அவனிடத்தில் வந்து, பவு
வுக்கு விரோதமாய்ப் பிராதுபண்ணி,—
3 அவனை வழியிலே கொலைசெய்ய இரகசிய
மான யோசனையுள்ளவர்களாய், நீர் கிரு
பைசெய்து அவனை எருசலேமுக்குவர
அழைப்பிக்கவேண்டுமென்று வேண்டிக்
4 கொண்டார்கள்,— அதற்குப் பெஸ்து
சொன்னது, பவுல் செசாரியாவிலே காவ

Digitized by Google

5 ப்பட்டிருக்கிறானே,-நானுஞ் சீக்கிரமாக
அங்கேபோவேன. ஆதலால் உங்களில்த்
திறமுள்ளவர்கள் கூடவந்து, அந்த மனி
தனிடத்திற் குற்றமுண்டானால், அதை
அவனமேற் சாற்றுவார்களாக எனறான.
6 பின்பு அவன், ஒரு எட்டுப் பத்துநாள்
அவர்களிடத்திற் சஞ்சரித்தபின்பு சேசா
ரியாப் பட்டினத்திற்குப் போய் மறுநா
ளிலே நியாயாசனத்தில் உளுக்கார்ந்து
பவுலுவைக் கொண்டுவரச் சொன்னான்.
7 —அவன் வந்தபொழுது, எருசலேமிலி
ருந்துவந்த யூதர்கள் சுற்றிநின்று, அனே
கமான குற்றங்களைப் பவுலுவின்மேற்
சாற்றினார்கள். அவைகளை அவர்கள்மெ
ய்ப்படுத்தவோ திராணியிருந்ததில்லை.—
பின்பு பவுல் சொன்னது, நான் யூதரு
டைய வேதநூலுக்காகிலுந் தேவாலயத்
துக்காகிலும் இராயருக்காகிலும் விரோத
மாய் ஒரு குற்றமுஞ் செய்யவில்லையெ
9 ன்றான்.—அப்பொழுது பெஸ்து யூதர்க
ளுக்குத் தயவுசெய்ய மனதாய்ப் பவுலு
வுடனே சொன்னது, நீ எருசலேமுக்கு
ப்போய், அங்கே என்னாலே யிந்தக்காரி

Digitized by Google

யங்களைக் குறித்து நியாயத்தீர்ப்படைய
10 மனதா யிருக்கிறாயா? என்றான்.—அத
ற்குப் பவுல் சொன்னது, இராயருடைய
நியாயாசனத்திற்குமுன்பாக நிற்கிறேன்.
அதற்கு முன்பாக நான் நியாயத் தீர்ப்பு
அடைய வேண்டும். யூதருக்கு நான் ஒரு
அநியாயமுஞ் செய்ததில்லை. அதை நீரும்
11 நன்றாய் அறிந்திருக்கிறீர்.—அநியாயமா
னதையாவது மரணத்திற்குப் பாத்திர
மானதையாவது நான் நடப்பித்தேனா
னால், நான் சாகிறதற்கு மறுக்கமாட்
டேன். இவர்களோ என்மேற் சாற்றுகிற
குற்றங்களெல்லாம் வீணாயிருக்கிறபடியா
ல், ஒருவரும் என்னை அவர்களுக்குச் சந்
தோஷமாக ஒப்புக்கொடுக்கக் கூடாது.
இராயருக்கே அபயமிடுகிறேன் என்றா
12 ன்.—அப்பொழுது பெஸ்து தன் ஆலோ
சனைக்காரருடனே பேசிக்கொண்டு, நீ
இராயருக்கு அபயமிட்டாய், இராயரிட
த்திற்கே போவாயென்று உத்தரவுசொ
ன்னான்.
13 சிலநாட் சென்றபின்பு, இராசனாகிய
அகிரிப்பாவும், பேர்னீக்கேயாளும், பெ

Digitized by Google

ஸ்துவை வாழ்த்துதல் செய்யும்படிக்குச்
சேசாரீயாப் பட்டினத்திற்கு வந்தார்கள்
14 -அங்கே அவர்கள் அனேகநாட் சஞ்சரித்
திருக்கையிற் பெஸ்து பவுலின் சங்கதி
யை இராசனுக்கு விவரித்துச் சொன்ன
து, பெலிக்குசென்பவராலே காவலி
ல்வைத்துவிடப்பட்ட ஒரு மனிதனிருக்
15 கிறான், —நான் எருசலேமிலே இருந்த
பொழுது பிரதான ஆசாரியரும் யூதரு
டைய மூப்பரும் அவனுக்கு விரோதமா
ய்ப்பிராதுபண்ணி. அவன்மேல் ஆக்கினை
த்தீர்ப்பைக் கேட்டுக்கொண்டார்கள்.—
16 அவர்களுக்கு நான் உத்தரவு சொன்னது
குற்றஞ் சாற்றப்பட்டவன் தன்மேற் குற்
றஞ்சாற்றினவர்களுக்கு முன்பாக நின்று
அவர்கள் சாற்றின குற்றத்தைக் குறித்து
த் தனக்காக எதிருத்தரஞ் சொல்லும்ப
டிக்கு அவன் திடம் அடைந்ததற்கு முன்
னே, அப்படிப்பட்டவன் அவர்களுக்குத்
தயவாய் அழிவுக்கு ஒப்புக்கொடுக்கிறது
உரோமருக்குள்ளே வழக்கமல்ல வென்
17 றேன்.—அந்தப்படி அவர்களிங்கே கூடி
வந்தபொழுது நான் தாமதம் எவ்வளவு

Digitized by Google

பண்ணுமல், மறுநாளிலே நியாயாசனத்
திலுளுக்கார்ந்து, அந்தமனிதனைக்கொண்
18 டுவரச்சொன்னேன்.—அப்பொழுது கு
ற்றஞ் சாற்றினவர்கள் வந்து நின்று நான்
நினைத்திருந்த குற்றங்களிலொன்றையும்
19 அவன்மேல் ஏற்படுத்தாமல்.—தங்கள்
மார்க்கத்துக்கும் மரணம் அடைந்த இ
யேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்
கிறுனென்று பவுல் சொன்னதற்கும் ஏற்
ற சில தருக்கங்களை அவனுக்கு விரோத
20 மாய்ச் சொன்னுர்கள்.— நானே இப்ப
டிப்பட்ட தருக்கங்களைக் குறித்துச் சந்
தேகப்பட்டபடியினுலே, நீ எருசலேமு
க்குப் போய், அங்கே இவைகளைக்குறித்
து நியாயம் விசாரிக்கப்பட மனதாயிரு
21 க்கிறுயா? என்றேன்.—அதற்குப் பவுல்
நான் இராயருக்குமுன்பாக விசாரிக்கப்
படுமளவும் வைக்கப்படவேண்டுமென்று
அபயம் இட்டபொழுது நான் அவனை
இராயனிடத்திற்கு அனுப்பும்வரைக்குங்
காத்து வைக்கும்படி கட்டளையிட்டே
னென்றுன்.
22 அப்பொழுது அகிரிப்பா, பெஸ்துவு

Digitized by Google

டனே சொன்னது, நானும் அந்தமனித
னுடைய வசனங்களைக்கேட்க விரும்புகி
றேனென்றான். அதற்கவன் நாளைக்கு நீர்
23 அப்படிக் கேட்கலாமென்றான்.—அந்த
ப்படி மறுநாளிலே அகிரிப்பாவும் பேர்
னீக்கியாளும் மிகுந்த ஆடம்பாரத்தோ
டேவந்து, சேனாதிபதியுடனேயும் பட்
டினத்துப் பிரதான மனிதருடனேயுங்
கூடக் கேள்விச் சாலைக்குப் போனார்கள்.
உடனே பெஸ்துவினுடைய கட்டளைப்பி
ன்படி பவுல் கொண்டு வரப்பட்டான்,
24 —அப்பொழுது பெஸ்து சொன்னது.
அகிரிப்பா இராசாவே! எங்களோடே
கூட இவ்விடத்திலிருக்கிற மனிதர்களே!
நீங்கள் பார்த்திருக்கிற இந்தமனிதனைக்
குறித்து யூதருடைய சபையெல்லாம் எ
ருசலேமிலேயும் இவ்விடத்திலேயும் என்
னைவேண்டிக்கொண்டு, இவன் இனி உயி
ரோடிருக்கத் தகாதென்று கூப்பிட்டார்
25 கள்.—நானோ இவன் மரணத்திற்குப்
பாத்திரமான தொன்றையுஞ் செய்ததில்
லையென்று அறிந்து, இவன்தானே இரா
யனுக்கு அபயமிட்டபடியினாலே இவனை

Digitized by Google

அவரிடத்தில் அனுப்பும்படி தீர்மானம்
26 பண்ணினேன்.—இவனைக்குறித்து ஆண்
டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்
டகாரியமோ எனக்குத் தெரியாது. ஆத
லாற் காவலினுட்பட்ட ஒருவனைக் குறித்
துக் குற்றத்தை அறியாமல் அவனைய
னுப்புகிறது எனக்குப் புத்திஈனமான
27 காரியமாய்த் தோன்றினபடியினாலே-இ
வனை விசாரித்துப் பார்த்தபின்பு எழுதத்
தக்க விசேஷம் எனக்கு உண்டாகும்படி
க்கு இவனை உங்கள் முன்பாகவும் விசேஷி
மாய் அகிரிப்பா இராசாவே! உமக்கு
முன்பாகவுங் கொண்டுவந்தேனென்றான்.

உகூ. அதிகாரம்.

1 பின்பு அகிரிப்பாவானவன் பவுலை
நோக்கி, நீ உனக்காகப் பேசும்படிக்கு
உத்தரவுண்டென்றான்; அப்பொழுது பவு
ல்கையை நீட்டித் தனக்காகச் சொல்லிக்
2 கொண்ட உத்தரமாவது- அகிரிப்பா இரா
சாவே! யூதர்கள் என்மேற்சாற்றுகிற சக
ல குற்றங்களைக் குறித்தும் நான் இன்றை

Digitized by Google

க்கு உமக்கு முன்பாக மாறுத்தரஞ்சொ
ல்லவேண்டுவதினாலே என்னைப் பாக்கிய
3 வானென்றெண்ணுகிறேன். — விசேஷ
மாய் நீர் யூதருடைய சகலமுறைமைக
ளையுந் தருக்கங்களையும் அறிந்தவரா
யிருக்கிறீரே: ஆகையால் நீர் நீடிய பொ
றுமையுடனே எனக்குச் செவிகொடுக்கு
4 ம்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.— நா
ன் என்வாலிப வயசுமுதற்கொண்டு எரு
சலேமிலே என் தேசத்தாருக்குள்ளே
இருந்தபடியால், என் வாலிபம் முதல்
நான்நடந்த நடக்கையை யூதரெல்லாரும்
5 அறிந்திருக்கிறார்கள்.—நம்முடைய மார்
க்கத்திலே மிகவுங்கெட்டியான பரிசேய
ர்வகுப்பிலே நான் பரிசேயனாய்ச் சீவன
ம் பண்ணினதையும் ஆதிமுதல் அறிந்தி
ருக்கிறார்கள். அவர்களுஞ் சாட்சிசொல்
ல மனதா யிருந்தால் இப்படியே சொ
6 ல்வார்கள்.—இப்பொழுது நம்முடைய
பிதாக்களுக்குப் பராபரன் அருளிச்செ
ய்த வாக்குத்தத்தத்திற்கு ஏற்ற நம்பிக்கை
க்காக நான் நியாயத் தீர்ப்படையும்படி
7 நிற்கிறேன்.—இரவும் பகலும் இடைவி

Digitized by Google

டாமற் பராபரனுக்கு ஆராதனைசெய்கிற
நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தா
ரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறு
மென்று நம்பியிருக்கிறார்கள். அகிரிப்பா
இராசாவே! அந்த நம்பிக்கையினிமித்த
மே யூதர்கள் என்மேற்குற்றஞ் சாற்றுகி
8 றார்கள்.—பராபரன் மரித்தோரை எழு
ப்புகிறது நம்பப்படாத காரியமென்று
9 நீங்கள் எண்ணுகிறதெப்படி? -முன்னே
நானும் நாசரேத்தூராகிய இயேசுவி
ன் நாமத்துக்கு விரோதமாய் அனேக
காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று
10 நினைத்துக் கொண்டிருந்தேன்.— அப்ப
டியே எருசலேமிலே செய்தேன். நான்
பிரதான ஆசாரியராலே அதிகாரம்பெற்
றுப் பரிசுத்தவான்களில் அனேகரைக்கா
வல் வீடுகளில் அடைத்தேன். அவர்களை
11 க் கொல்லவுஞ் சம்மதித்தேன்.—அனே
கதரம் நான் சகல ஆலயங்களிலேயும்
அவர்களைத் தண்டித்துத் தூஷிக்கும்
படிக்கு அவர்களைப் பலபந்தஞ்செய்தே
ன். நான் மிகவும் அவர்கள்மேலே மூர்
க்கவெறியாயிருந்து, அன்னிய பட்டின

Digitized by Google

ங்கள்வரைக்கும் அவர்களைத் துன்பப்படு
12 த்தினேன். இப்படிச் செய்துவருகையில்
நான் பிரதான ஆசாரியரிடத்திற் பெற்ற
அதிகாரத்தோடும் உத்தரவோடுந் தமஸ்
13 குவூருக்குப் போனபொழுது, இராசா
வே! வழியிலே மத்தியானகாலத்தில் நான்
சூரியனுடையபிரகாசத்துக்குஅதிகமான
ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னு
டனேகூடப் பிரயாணப்பட்டவர்களையு
ஞ் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன்.—
14 உடனே நாங்களெல்லாருந் தரையிலே
விழுந்தபொழுது, சவுலே! சவுலே! ஏன்
நீ என்னைத் துன்பப் படுத்துகிறாய்?
முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடின
மாமென்று எபிரேயப் பாஷையிலே சொ
15 ன்ன சத்தத்தைக் கேட்டேன்.—அதற்கு
நான் ஆண்டவரே! நீர் யார்? என்றேன்.
அவர் சொன்னது, நான், நீ துன்பப்படு
16 த்துகிற இயேசு.—இப்பொழுது நீ யெ
ழுந்து காலூன்றிநில், நீகண்டவைகளையு
ம் நான் உனக்குக்காண்பிப்பவைகளையுங்
குறித்து, நான் உன்னை ஊழியகாரனென்
றுஞ், சாட்சியென்றும், ஏற்படுத்தும்ப

Digitized by Google

17 டிக்கு உனக்குத் தரிசனையானேன் —அ
தலால் நான் உன்தேசத்தாரினின்றும்,
புறத்தேசத்தாரினின்றும், உன்னை விடுத
18 லையாக்கி,—அவர்கள் என்னைப் பற்றிக்
கொள்ளும் விசுவாசத்தினாலே பாவமன்
னிப்பையும் பரிசுத்தவான்களிருக்கிற இ
டத்திலே சுதந்திரத்தையும், பெற்றுக்
கொள்ளும்படிக்கு, அவர்களுடைய கண்
களைத் திறக்கவும், அவர்களை இருளினி
ன்று ஒளியினிடத்திற்கும், பசாசினுடை
ய அதிகாரத்தினின்று பராபரனிடத்திற்
குந் திரும்பவும், உனனையவர்களிடத்தி
19 அனுப்புகிறேனென்றார்.—அகிரிப்பா இ
ராசாவே! அந்தப் பரம தரிசனைக்கு நா
20 ன் கீழ்ப்படியாதவனாயிராமல்,—முதலா
வது, தமஸ்கு ஊரிலேயும், பின்பு எருச
லேமிலேயும், யூதேயாத்தேச மெங்கு
முள்ளவர்களும், மற்றத் தேசத்தாருக்கு
ள்ளும்போய் அவர்கள் குணப்பட்டுப்
பராபரனிடத்திற்கு மனந்திரும்பிக் குண
ப்படுதற்கேற்ற கிரியைகளைச் செய்யவே
21 ண்டுமென்றறிவித்தேன்.— இதினிமித்த
மே யூதர்கள் தேவாலயத்திலே என்னை

Digitized by Google

ப்பிடித்துப், பின்பு கொலைசெய்யும்படி
22 தேடினார்கள்.—பராபரனே எனக்கு உ
தவிசெய்ததினாலே, நான் இந்நாள்வரைக்
குஞ் சிறியோருக்கும், பெரியோருக்கு
ஞ், சாட்சிசொல்லி நிற்கிறேன். தீர்க்கத
ரிசிகளும், மோசேயும், பின் வருமென்
23 று சொன்னதின்படியே,— கிறிஸ்துபா
டுபட்டும், மரணத்தினின்று உயிரோடெ
ழுந்திருப்பவர்களில் முதன்மையானவ
ராயுமிருந்து, யூதசனங்களுக்கும், மற்
றத்தேசத்தாருக்கும், ஒளியைப் பிரசித்
தம்பண்ணுகிறாரென்று நான் சொல்லுகி
றதேயன்றி, வேறொன்றையும் நான்சொ
ல்லுகிறதில்லையென்றான்.
24 இவ்விதமாய்ப் பவுல் தனக்காக உத்தர
வு சொன்னபொழுது, பெஸ்து, மிகுந்த
சத்தத்துடனேசொன்னது, பவுலுவே! நீ
பித்தங்கொண்டிருக்கிறாய், அதிக கல்வி
உன்னைப் பயித்திய காரனாக்குகிறதென்
25 றான்.—அதற்கு அவன் சொன்னது கனம்
பொருந்திய பெஸ்துவே! நான் பித்த
ங்கொண்டிருக்கவில்லை. சத்தியமுஞ் சொ
ஸ்தப்புத்தியுமான வார்த்தைகளை வசனிக்

26 கிறேன்.—இந்தச் சங்கதிகளை இராசா அ
றிந்திருக்கிறார். இவை ஒரு மூலையிலே
நடந்தகாரியங்களல்ல. ஆதலால் இவைகளி
ல் ஒன்றும் அவருக்கு மறைவாயிருக்கமா
ட்டாதென்று நான் எண்ணித் தயிரியமா
27 யவருடனே பேசுகிறேன்.-அகிரிப்பா இ
ராசாவே! நீர் தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கி
றீரா? விசுவாசிக்கிறீரென்றறிந்திருக்கிறே
28 னென்றான்.—அப்பொழுது அகிரிப்பா
பவுலுவுடனே சொன்னது, நான்கிறிஸ்த
வனாகிறதற்குக் கொஞ்சங்குறைய, நீ என்
னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாயென்றான்
29 அதற்குப் பவுல் சொன்னது, நீர்மாத்திர
மல்ல, இன்று என் வசனங்களைக் கேட்டி
ருக்கிற யாவருங்கொஞ்சமாயல்ல (முழு
வதுமே) இந்தச் சங்கிலிகளைத் தவிர
என்னைப்போலாகும்படிக்குப் பராபர
னைவேண்டிக் கொள்ளுகிறேனென்றான்.
30 இவைகளை யவன் சொன்ன பின்பு, இ
ராசாவுந் துரையும் பெருனீக்கேயாளும்,
அவர்களுடனே கூட உளுக்கார்ந்திரு
ந்தவர்களும், எழுந்துபோகையில்,—
31 ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு,

Digitized by Google

இந்த மனிதன் மரணத்துக்காகிலும்,
கட்டுகளுக்காகிலும், பாத்திரமானதொ
ன்றையுஞ் செய்ததில்லையென்றார்கள்.—
32 மேலும் அகிரிப்பா பெஸ்துவுடனே
சொன்னது அந்த மனிதன் இராயனுக்கு
அபயம் இடாதிருந்தானானால் அவனைவிடு
தலைபண்ணத் தகுதியாயிருக்குமென்றான்

உஎ. அதிகாரம்.

1 பின்பு நாங்கள்கப்பலேறி, இத்தாலிய
தேசத்திற்குப் போகும்படி தீர்மானமு
ண்டானபொழுது பவுலுவும், காவலில்
வைக்கப்பட்டிருந்த வேறுசிலரும், இரா
யனுடைய சேனையில் இயூலியென்று
பேர்கொண்ட தலைவனுக்கு ஒப்புக் கொ
2 டுக்கப்பட்டார்கள்.—அந்தப்படி நாங்
கள் அதிர்மீத்துப் பட்டினத்திற் கப்ப
லேறி, ஆசியதேசத்துக் கரையோரத்தி
ன் வழியாய்ப் போக, நினைத்துப் புறப்
பட்டோம். மக்கேதோலிய தேசத்து
த் தெசலோனிக்கே பட்டினத்தாருகிய
அரிஸ்தருகு எங்களுடனே கூடவிருந்

3 தான் —மறுநாளிலே சீதோன் துறையிற்
சேர்ந்தோம். இயூலி என்பவன் பவுலு
வைப் பட்சமாய் நடப்பித்து, அவன்
தன் சினேகிதரிடத்திலே போய்ப், பரா
மரிப்பை அடையும்படிக்கு, உத்தரவு
4 கொடுத்தான்.- அவ்விடத்தை நாங்கள் வி
ட்டுப் புறப்பட்டுக்காற்றுகள் எதிரானப
டியினாலே, சீப்புருதீவுக்கு அருகாகப்
5 போய்க்,—கிலிக்கியா, பம்பீலியாத், தே
சங்களின்கடலின்வழியாய்ப்போய், உலூ
க்கியாத் தேசத்து மீருப் பட்டினத்திற்
6 சேர்ந்தோம்—அங்கே இத்தாலியாத்தே
சத்திற்குப்போக, எத்தனமான அலேக்
குசந்தரியாப் பட்டினத்துக் கப்பலைச்
சேனைத்தலைவன்கண்டு, எங்களையதிலேற
7 ப்பண்ணினான்.— காற்று எங்களுக்குத்
தடைபண்ணினதினாலே, நாங்கள் அனேக
நாள் மிருதுவாய்ப்போய், வருத்தத்தோ
டே கினிதுப் பட்டினத்துக்கெதிரேவந்
து, கிரேத்தாதீவின் கீழ்ப்புறமான சலு
மோன் என்னுமிடத்திற்கு எதிராய்ப்
8 போய், வருத்தத்தோடே அதைக்கடந்
துகலூலிமனஎன்னப்பட்டவிடத்திற்கு

Digitized by Google

வந்தோம் இலசேயப் பட்டினம் அதற்
9 குச் சமீபமாயிருந்தது.— அதுவரைக்
கும் மிகுந்தகாலஞ்சென்றபடியினாலும்
உபவாசப் பண்டிகைநாளுங் கழிந்து
போனதால், அதிகமாய்ப் போகிறது
மோசம் வருதற்கு ஏதுவானபடியினா
10 லும், பவுல் அவர்களைநோக்கிப்.—புரு
ஷரே, இந்த யாத்திரைக் கப்பலிலுள்ள
சரக்குக்களுக்குங் கப்பல்களுக்கும் மாத்
திரமல்ல, நம்முடைய சீவனுக்குங் கூட
வருத்தமும் மிகுந்த சேதமுமாயிருக்கு
மென்று காண்கிறேனென்று எச்சரித்தா
11 ன்.-சேனைத்தலைவனோ பவுலினாற்சொ
ல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலு
மியையுங் கப்பற்காரனையும் அதிகமாய்
12 நம்பினான்.—அல்லாமலும் அந்தத்துறை
மழைகாலத்தில் தங்குதற்குத் தகுதியல்
லாதபடியினாலே தென்மேற்கேயும் வட
மேற்கேயும் நோக்குகிற பினீகஸ் என்னு
ங் கிரேத்தா தீவின் துறைமுகத்திலே ம
ழைகாலத்திற்குத் தங்குதற்கு அங்கேசே
ரக்கூடுமானாற் சேரும்படிக்கு இவ்விட
ம்விட்டுப் புறப்படவேண்டுமென்று அசி

Digitized by Google

கம்பேர் ஆலோசனை சொன்னார்கள்.—
13 மேலும் தென்றல் மிருதுவாய் அடித்த
படியால் அவர்கள் தங்கள் யோசனையின்
படி நிச்சயமாய் நடக்குமென்றெண்ணி
அவ்விடம் விட்டுப்பேர்ந்து, கிரேத்தாதீ
14 வுக்கருகாய்ப் போனார்கள்.—சிலகாலத்
துக்குப் பின்போ ஐரோக்கிலிதோனென்
னப்பட்ட கடுங்காற்று அதில் மோதிற்று
15 —கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு
காற்றுக்கு எதிர்த்துப் போகமாட்டாத
படியினாலே நாங்கள் காற்றின்போக்கி
லே கொண்டு போகப் பட்டோம்.—
16 அப்படிக்கலவுதையென்னப் பட்ட ஒரு
சின்னத் தீவைக் கடந்தோடுகையில், ஓ
டத்தை வசப்படுத்திக் கொள்ளுதற்கு
17 மிகுந்த வருத்தமுண்டாயிருந்தது.—அ
தைஅவர்கள் தூக்கியெடுத்தபின்பு, எல்
லாருடைய உதவியினாலுங் கப்பலைச் சுற்றி
க்கட்டிச் சொரி மணலிலே விழுவோ
மென்று பயந்து, பாய்களை இறக்கி, இ
வ்விதமாய்க் கொண்டுபோகப்பட்டோம்
18 —மேலும் நாங்கள் பெருங்காற்று மழை
யினாலே மிகவும் அடிக்கப்பட்டபடியால்

Digitized by Google

மறுநாளிலே சில பாரத்தைக் கடலிலே
19 றிந்தார்கள்.—மூன்றாம்நாளிலே கப்பலி
ன் தளபாடங்களை யெங்கள் கைகளினு
20 லே யெடுத்தெறிந்தோம்.—அனேகநா
ளாய்ச் சூரியனாகிலும் நட்சத்திரங்களாகி
லுங் காணப்படாமல் மிகுந்த பெருங்
காற்றும் மழையும் எங்களைச் சூழ்ந்திரு
ந்தபடியினாலே, தப்பிப் போவதற்கான
நம்பிக்கையெல்லாம் அற்றுப்போயிற்று
21 —அப்படியிருக்கையில், மிகுந்தகாலம்
அவர்கள் போசனம்பண்ணாமல் இருந்த
பொழுது, பவுல் அவர்களுக்குள்ளே
எழும்பிச் சொன்னது, இந்த வருத்த
முஞ் சேதமும் வாராதபடிக்கு நீங்கள்
என் சொல்லுக்குச் செவிகொடுத்துக்,
கிரேத்து தீவைவிட்டுப் புறப்படாமலிரு
22 க்கவேண்டியதாயிருந்தது,— இப்பொ
ழுது திடசித்தமாயிருங்களென்று உங்
களை வேண்டிக்கொள்ளுகிறேன். கப்ப
ல்சேதமேயன்றி, உங்களிலொருவனுக்கு
23 ம் பிராணசேதம் வருவதில்லை.—எப்ப
டியென்றால், நான் ஆதீனமாயிருந்து
ஆராதனை செய்கிற பராபரனுடைய

Digitized by Google

தூதன் இந்த இராத்திரியிலே என்னிடத்
தில்வந்து நின்று, பவுலுவே, பயப்படா
திரு, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவே
24 ண்டும்.-அல்லாமலும் உன்னுடனே கூட
யாத்திரையாய்வருகிறயாவரையும்பராப
ரன் உனக்குத் தயவு பண்ணினுரென்றான்
25 -ஆனபடியினலே, புருஷரே! திடசித்த
மாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட
பிரகாரமாகவே நடக்குமென்று பராபர
26 னை நம்புகிறேன்.—நாம் ஒரு தீவிலே
விழுகிறதுமாத்திரம் நடக்கவேண்டுமெ
ன்றான்.
27 பதினான்காம் இராத்திரியான பொ
ழுது, நாங்கள் ஆதிரியாக் கடலில் அலை
ந்து திரிகையில், நடுச்சாமத்திலே சப்
பலாட்களுக்கு ஒரு கரை கிட்டியிருக்கி
28 றதாய்த் தோன்றிற்று —உடனே யவர்
கள் சலத்தின் அளவைச் சோதித்து, இரு
பதுபாகமென்று கண்டார்கள். சற்று
அப்புறம்போனபொழுது, மறுபடியுஞ்
சோதித்துப், பதினைந்து பாகமென்றுக
29 ண்டு,-பாறையிடங்களில் விழுவோமென்
றுபயந்து, கப்பலின் பின்பக்கத்திலிருந்

து நாலு நங்கூரங்களைப்போட்டு, உதய
ம் எப்பொழுதுண்டாகுமென்றிருந்தார்
30 கள்.—கப்பல் மனிதர்களோ, கப்பலை
விட்டோடிப்போக வகைதேடித், தாங்
கள்கப்பலின் முன்பக்கத்திலிருந்து நங்
கூரங்களைப் போட மனதுள்ளவர்கள்
போல், ஓடத்தைக்கடலிலிறக்கையிற்,—
31 பவுல் சேனைத்தலைவனையும் போர்ச்சே
வகரையும் நோக்கி, இவர்கள் கப்பலிலி
ராவிட்டால், நீங்கள் தப்பிப்போகமாட்
32 டீர்களென்றான்.—அப்பொழுதுபோர்ச்
சேவகர் ஓடத்தின் கயிறுகளை அறுத்து,
33 அதைத் தாழவிழவிட்டார்கள்.—உதயமா
கத் தொடங்கினபொழுது, எல்லாரும்
போசனம்பண்ணுதற்குப், பவுல் அவர்க
ளைத் தயிரியப்படுத்திச் சொன்னது, நீங்
கள் ஒன்றுஞ் சாப்பிடாமற் பட்டினியாய்
க் காத்திருக்கிறது இன்றுபதினாலாம் நா
34 ளாயிற்றே.—ஆகையாற் போசனம்பண்
ணும்படி உங்களுக்குப் புத்திசொல்லுகி
றேன். நீங்கள் தப்புவதற்கு அதுவே உத
வியாயிருக்கும். உங்கள் தலைகளிலிருந்து
ஒருமயிரும் விழாது என்றுசொல்லி,—

Digitized by Google

அப்பத்தை யெடுத்துக்கொண்டு, எல்லா
ர்முன்பாகவும் பராபரனைத் தோத்திரித்
து, அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்
36 கினன்.—அப்பொழுது மற்றெல்லாருந்
திடசித்தமடைந்து, போசனம்பண்ணி
37 னர்கள். கப்பலில் இருநூற்று எழுபத்
38 தாறு பேரிருந்தோம்—திருத்தியாகப் பு
சித்த பின்பு, அவர்கள் கோதும்பையை
க் கடலிலெறிந்து, கப்பலை இலகுவாக்கின
39 ர்கள்.—உதயமானபொழுது இன்னபூமி
யென்றறியாமற், சமமானகரையுள்ள ஒரு
துறைமுகத்தைப் பார்த்து, அங்கேபோ
கக் கூடுமானால் அவ்விடத்திற்குத் தானே
கப்பலைப் போகப்பண்ணவேண்டுமென்
40 று யோசனையாயிருந்து,— நங்கூரங்க
ளையறுத்துக், கடலிலேவிட்டுச், சுக்கானு
டைய கட்டுகளையுந் தளரவிட்டுச்சின்னப்
பாயைக் காற்றுக்கு விரித்துக், கரைக்கு
41 நேராய்ப் போகையில்,— இருபுறமுங்
கடலுள்ள ஒரிடத்திலே சென்று கப்பல்
தட்டிற்று. அதின்முன்பக்கம் அசைவ
மலூன்றியிருந்தது, பின்பக்கமோ அலை
களின்பலத்தினலேயுடைந்துபோயிற்று

42 —அப்பொழுது காவலிலிருந்தவனொரு
வனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு, அவ
ர்களைக் கொலைசெய்ய வேண்டுமென்று
போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்க
43 ள்.—அவர்களுடைய தலைவனோ பவுலு
வைக்காப்பாற்ற மனதாயிருந்து, அவர்
களுடைய யோசனையைத்தடுத்து நீந்தத்
தக்கவர்கள் முந்திக்கடலில் விழுந்து,
44 கரையேறவும்,—மற்றவர்களிற் சிலர் பல
கைகளின்மேலுஞ் சிலர் கப்பல்த் துண்டு
கள்மேலும் போய்க் கரையேறவுங் கட்
டளையிட்டான். இவ்விதமாய் எல்லாருந்
தப்பிக் கரைசேர்ந்தார்கள்.

உ௮. அதிகாரம்.

1 அவர்கள் தப்பிக் கரைசேர்ந்த பின்பு
அந்தத் தீவின் பேர் மெலித்தாவென்று
2 அறிந்தார்கள்.—அன்னியராகிய அந்தத்
தீவார் எங்களுக்கு மிகுந்த அன்பைக்கா
ண்பித்தார்கள். அவ்வேளையிலிருந்த ம
ழைக்காகவுங் குளிர்ச்சிக்காகவும் அவர்க
ள் நெருப்பை யுண்டுபண்ணி எங்களனை
வரையுஞ் சேர்த்துக்கொண்டார்கள்.—

Digitized by Google

3 அப்பொழுது, பவுல் சில விறகுகளைவாரி
அந்த நெருப்பின்மேற் போடுகையில்,
ஒரு விரியன் பாம்பு அனலினாலே புறப்
பட்டு, அவனுடைய கையைச் சுற்றிக்
4 கொண்டது.—தீவார் அந்தப் பொல்லா
த பூச்சியை அவனுடைய கையிலே தொ
ங்கக்கண்டபொழுது, மெய்யாய் இந்த
மனிதன் கொலைபாதகன். அவன் சமுத்
திரத்திற்குத் தப்பி வந்தும், பழியானது
இவனைப்பிழைக்க ஒட்டவில்லையென்று,
தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்
5 கள்.—அவனோ அந்தப்பூச்சியைத் தீயி
லே உதறி. ஒரு தீமையும் அடையாதிருந்
6 தான்.—அவர்கள் இவன் வீக்கங்கொண்
டு, சடுதியாய் மரித்து விழுவானென்று
காத்திருந்தார்கள். மிகுந்தகாலம் அவர்கள்
அப்படிக் காத்திருந்து, சேதம் எவ்வள
வும் அவனுக்கு வாராததைக் கண்டபொ
ழுது அவர்கள் வேறு சிந்தையையடைந்
து, அவனைத்தேவனென்று சொல்லிக்
7 கொண்டார்கள்.—மேலும் அவ்விடத்திற்
குச் சமீபமாய் அந்தத் தீவுக்கு முத
லியாகிய புபிலி என்று பேர்கொண்ட

Digitized by Google

வனுடைய காணிபூமியிருந்தது, அவன்
எங்களை ஏற்றுக்கொண்டு, மூன்றுநாளு
ம் பட்சமாய் விசாரித்துக்கொண்டான்.
8 —புபிலியினுடைய தகப்பன் சுரத்தோடு
ங் கழிச்சலோடுங்கிடந்தான். பவுல் அவ
னிடத்திற் போய் வேண்டுதல்பண்ணி அ
வன்மேலே தன் கைகளைவைத்து, அவனை
9 க் குணமாக்கினான்.-அப்படிநடந்த பொ
ழுது தீவிலேயிருந்த மற்றவியாதிக்காரரு
10 ம்வந்து, குணமாக்கப்பட்டார்கள்.—அவ
ர்கள் எங்களை மிகவுங் கனஞ்செய்து,
நாங்கள்கப்பலேறின பொழுது, எங்களு
க்கு வேண்டியவைகளை ஏற்றினார்கள்.—
11 மூன்றுமாதஞ் சென்றபின்பு, தீவிலே
மழைகாலத்திற்குத் தங்கியிருந்த மிதுன
ப் என்னும் அடையாளமுள்ள அலேக்கு
ச்சந்தரியப் பட்டினத்துக் கப்பலிலே நா
12 ங்கள் ஏறிப் புறப்பட்டுப் போய்ச்,—சீர
க்கூசை பட்டினத்தைச்சேர்ந்து, அங்கே
14 மூன்றுநாள் தங்கிப்,—பின்பு அவ்விடம்
விட்டு (சிசிலிதீவைச்) சுற்றியோடி, இரே
கியு பட்டினத்திற்கு வந்து, ஒரு நாளுக்
குப் பின், தென்றற் காற்றெடுக்கையில்,

Digitized by Google

இரண்டாம்நாளிலே புத்தேயோலி பட்
14 டினத்திற்கு வந்து,—அங்கே சகோதர
ரைக் கண்டோம். அவர்கள் ஏழுநாள் தங்
களிடத்திலிருக்கும்படி யெங்களைவேண்
டிக்கொண்டார்கள். அந்தப்படி நாங்கள்
(இருந்து) பின்பு உரோமை புரிக்குப்
15 போனோம்.—அவ்விடத்திலுள்ள சகோத
ரர் எங்கள் சங்கதிகளைக் கேள்விப்பட்டுப்
புறப்பட்டுச் (சிலர்) அப்பியுபுரமென்னு
ம் இடம்வரைக்குஞ் (சிலர்) மூன்று சத்
திரமென்னுமிடம்வரைக்கும், எங்களுக்கு
எதிர் கொண்டு வந்தார்கள். அவர்களைப்
பவுல்கண்டு பராபரனைத் தோத்திரஞ்
16 செய்து திடன்கொண்டான்.— உரோ
மைபுரியிலே நாங்கள் சேர்ந்த பொழுது
சேனைத்தலைவன் தன் காவலிலிருந்தவர்க
ளைச் சேனாதிபதிக்கு ஒப்புக்கொடுத்தா
ன். அப்பொழுது பவுல் தன்னைக்காத்தி
ருக்கும்படியான சேவகனுடனே கூடத்
தனித்திருக்கும்படிக்கு உத்தரவு பெற்று
க்கொண்டான்.

17 மூன்றுநாளைக்குப் பின்பு, பவுல் யூத
ரில் பிரதானமானவர்களைக் கூடி வரவ

Digitized by Google

ழைத்.தான். அவர்கள் கூடி வந்திருந்த
பொழுது, அவன் அவர்களுடனே சொ
ன்னது, சகோதரர்களே (நமது) சனத்
துக்காகிலும் (நமது) முன்னோர்களின்
முறைமைகளுக்காகிலும் விரோதமான
தொன்றையும் நான்செய்யாமலிருந்துங்,
காவலில் வைக்கப்பட்டு, எருசலேமிலிருந்
து, உரோமர் கைகளில் ஒப்புக் கொடுக்க
18 ப் பட்டேன்.—அவர்கள் என் காரியத்தை
விசாரித்தபொழுது, மரணத்துக்கு ஏது
வான, குற்றமொன்றையும் என்னிடத்திற்
காணாதபடியினாலே, என்னை விடுதலையா
19 க்க மனதாயிருந்தார்கள்,— யூதர்களோ
எதிர் பேசின பொழுது, நான் இராயருக்
கு அபயமிடும்படிக்குப் பலவந்தப்பட்
டேன். என்தேசத்தார்மேலே யாதொரு
குற்றஞ்சாற்ற மனசில்லாமல் அப்படிச்
20 செய்தேன்.— இந்தச் சங்கதியைக்குறித்
து நான் உங்களைக்காணவும், உங்களுட
னேபேசவும், உங்களை யழைப்பித்தேன்.
இஸ்ரவேலருடைய நம்பிக்கையினிமித்த
மே இந்தச் சங்கிலியாற் கட்டப்பட்டிருக்
21 கிறேனென்றான்.-அவனுடனே யவர்கள்

Digitized by Google

சொன்னது, உன்னைக்குறித்து யூதேயா
விலிருந்து காகிதங்கள் எங்களிடத்தில் வந்
ததுமில்லை (அங்கேயிருந்து) வந்த சகோ
தரரிலொருவனும் உன்மேற் பொல்லாங்
கை அறிவித்துச் சொன்னதுமில்லை.—
22 இந்தமார்க்க வகுப்போ எங்கும் விரோ
தமாய்ப் பேசப்படுகின்றதென்று நாங்க
ள் அறிந்திருக்கிறபடியால், நீ சிந்திக்கிற
வைகளை உன்னிடத்திலேதானே கேட்க
23 விரும்புகிறோமென்றார்கள்.— அதற்காக
அவர்கள் அவனுக்குக் குறித்த நாளிலே
அனேகம்பேர் அவன் தங்கின இடத்தி
லே வந்தார்கள். அப்பொழுது அவன் கா
லைதொடங்கிச் சாயங்காலம் வரைக்கும்,
மோசேயின் வேதநூலிலுந் தீர்க்கதரிசி
களின் ஆகமங்களிலுமிருந்து, இயேசுவுக்
குரியவைகளை யவர்களுக்குப் போதித்
துப் பராபரனுடைய இராச்சியத்தைக்கு
றித்துச் சாட்சிகொடுத்து, வியாக்கியான
24 ம் பண்ணினான்,—அவன் சொன்னவைக
ளைச் சிலர் ஒத்துக்கொண்டார்கள். சில
25 ரோ விசுவாசியாதிருந்தார்கள்.—இப்படி
யவர்கள் ஒருவரோடொருவர் இசைவாயி

Digitized by Google

ராமல், வெளியேபோகையிற், பவுல் அ
வர்களுக்குச் சொன்ன ஒரேவாக்கியமாவ
26 து.—இந்தச் சனங்கள் கண்களினலே கா
ணமலுங் காதுகளினலே கேளாமலும், இ
ருதயத்தினற் சிந்தித்துக்கொள்ளாமலும்
மனந்திரும்பாமலும் என்னலே ஆரோக்
கியம் அடையாமலுமிருக்கும்படிக்கு, இ
வர்கள் கடினமாக்கப்பட்ட இருதயமு
டையவர்களுமாய் வருத்தத்தோடே கே
ட்கிறகாதுள்ளவர்களுமாய் மூடிக்கொண்
டிருக்கிற கண்களையுடையவர்களுமாயிரு
27 க்கிறபடியினலே,—நீங்கள் உற்றுக்கேட்
டுஞ் சிந்தித்துக் கொள்ளாமலிருப்பீர்கள்.
உற்றுப் பார்த்தும், அறியாமலிருப்பீர்
களென்று இந்தச் சனங்களிடத்திற்குப்
போய்ச் சொல்லு, என்கிறதைப் பரிசுத்த
ஆவி எசாயாத் தீர்க்கதரிசியைக்கொண்டு,
நம்முடைய முன்னேர்களுடனே நன்ரு
28 ய்ச்சொன்னர்,—ஆதலாற்பராபரனுடை
ய இரட்சிப்புப், புறத் தேசத்தார்களுக்கு
அனுப்பப் பட்டதென்று நீங்கள் அறிந்
துகொள்வீர்களாக, அவர்களே அதற்கு
29 ச்செவிகொடுப்பார்களென்ருன். - இவை

களை அவன் சொன்ன பின்பு யூதர்கள் தங்
களுக்குள்ளே மிகவுந் தருக்கம்பண்ணிக்
கொண்டு போய்விட்டார்கள்.

30 பின்பு பவுல் தனக்காகக் கூலிக்குவாங்
கியிருந்த வீட்டிலே இரண்டுவருடம் முழு
வதுந் தங்கித், தன்னிடத்தில்வந்தயாவரை
31 யுமேற்றுக்கொண்டு,—மிகுந்த தயிரியத்
தோடுந் தடையில்லாமலும் பராபரனு
டைய இராச்சியத்தைக்குறித்துப் பிரசங்
கித்துக், கத்தராகிய இயேசுக்கிறிஸ்துவி
ன் விசேஷங்களை உபதேசித்துக் கொண்
டான்.

முற்றிற்று.

Digitized by Google